
தெணியான்



# இன்னும் சொல்லாதவை

வாழ்வனுபவங்கள்



ஈழத்து நூல் வரிசை - 4

# இன்னும் சொல்லாதவை

வாழ்வனுபவங்கள்

# இன்னும் சொல்லாதவை

வாழ்வனுபவங்கள்

தெணியான்

எழுத்து
2011

E Z H U T H U
Siron Cottage # 1, Jonespuram 1st Street, Pasumalai, Madurai - 625 004.
Cell : +91 90479 20190 E-mail : ezhuthu2006@gmail.com
Website : www.ezhuthu.net

ezhuthu 2011

INNUM SOLLATHAVAI
an Autobiography

by Theniyaan

First Published 2011

Printed in India at
Mani Offset - 600 077

ISBN : 81-904254-6-3

₹ 80 $ 2

அமரர்கள்
பெரிய தந்தை நா. சின்னத்தம்பி
தாய்மாமன் நா. வடிவேலு
நினைவாக

## பதிப்புரை

'இன்னும் சொல்லாதவை', எமது 'ஈழத்து நூல் வரிசை'யில் வெளிவரும் நான்காவது நூலாகும். கொழும்பு நகரிலிருந்து வெளிவரும் 'ஞானம்' இதழில் தெணியானின் வாழ்வனுபவத் தொடராக வெளிவந்த கட்டுரைகள் இங்கு நூலாக்கம் பெறுகின்றன. இந்த நூலாக்கத்திற்காக ஞானத்தில் வெளிவராத மூன்று கட்டுரைகள் புதியதாக இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர் தெணியான், தனது இளமைக் காலம் தொடங்கி ஆசிரியராக பணிக்கு சென்றவரை தனது வாழ்வனுபவங்களை சுவைபடவும், பகிடியாகவும் பகிர்ந்து கொள்கின்றார். கடந்த 40 ஆண்டுகளாக உயிர்ப்புடன் ஈழத்து இலக்கியத்திற்கு பங்களிப்பு செய்து வரும் தெணியானின் சிறு பிராய வாழ்வை படிக்கும்போது, அவரது கையைப் பிடித்துக் கொண்டு வடமராச்சி கிராமங்களை சுற்றி வருவதைப் போன்ற உணர்வை நாம் பெறுகின்றோம்.

ஒரு எழுத்தாளனது புனைவுலகை தரிசித்து அதில் லயித்துக் கிடக்கும் வாசகனுக்கு அந்த எழுத்தாளனது சொந்த வாழ்வைப் பற்றிய இரகசியங்களை அறிந்து கொள்ளும்போது அந்த எழுத்தாளனைப் பற்றி உருவாக்கி வைத்திருக்கும் மனக்கோட்டை உடைந்து சிதறுவதே இயல்பு. இதனால்தானோ என்னவோ பல பிரபலங்கள் தங்களது சொந்த வாழ்வை வெளிப்படுத்துவதில்லை. தங்களது குடும்பம், சுற்றம், நட்பு இவற்றின் மீது வெளிச்சம் படாமல் கவனமாக பார்த்துக்கொள்கின்றனர். இந்நிலைக்கு மாறாக தெணியானின் வாழ்வனுபவங்களை படிக்கும்போது அவர் மீதான நமது மதிப்பு பல மடங்கு கூடுகிறது, அவருடன் நெருக்கத்தை அதிகப்படுத்துகின்றது.

இக்கட்டுரைகளில் ஒரு எழுத்தாளனது பெருமைகளை மட்டுமே அவர் பதிவு செய்யாமல் தனது தவறுகளையும், இயலாமையையும், குற்றங்களையும் பதிவு செய்திருப்பது

அவரது நேர்மையை நமக்கு விளக்குகிறது. பனையும்-கள்ளும், நூலும்-வாசிப்பும், குறும்பும்-துறுதுறுப்பும், இளமையும்-பிடிவாதமுமான அவரது குணவியல்புகள், படிக்கும் நமக்கும் தொற்றிக்கொள்கின்றன. வாசிக்கும் நமது வாழ்வில் நடந்த இதே போன்ற பல சம்பவங்களை நினைவுக்குள் வந்து போவதை தவிர்க்க முடியவில்லை.

இந்த வாழ்வனுபவங்கள் தெணியானது தனிப்பட்ட அனுபவமல்ல. இது வடமராச்சி மக்களது ஐம்பதாண்டு கால வரலாறாகும் இந்த வரலாறு ஈழத்து தமிழ் மக்களது வரலாற்றின் ஒரு பகுதியே.

ஞானத்தில் வந்த கட்டுரைகளுடன் புதியதாக சில கட்டுரைகளை இணைத்தால் நன்றாக இருக்கும் என்ற என் கருத்துக்கு மதிப்பளித்து உடனே மூன்று கட்டுரைகளை எழுதி அனுப்பினார். இன்ப துன்பங்கள் நிறைந்த தனது வாழ்வனுபவங்களை நூலாக வெளியிட எமக்கு வாய்ப்பளித்த தெணியானுக்கு நன்றி.

அன்புடன்
வே. அலெக்ஸ்

## என்னுரை

படைப்புமொழி என்பது வெறுமனே கருத்துப் பரிமாற்றத்திற்கான வெற்று வார்த்தைகள் அல்ல. அதற்கு மேலாக வாசகனின் உள்ளுணர்வை கசியவைத்து, நுகர் அனுபவத்தை விளைவித்துக், களிப்பூட்ட வேண்டும் என்பதற்கு ஞானத்தில் தெணியான் எழுதிவரும் தொடரான "இன்னும் சொல்லாதவை" புதிய சாட்சியாகும்.

வைத்திய கலாநிதி
எம். கே. முருகானந்தன்.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் தனித்துவமான ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றின் பல பக்கங்கள் பிறர் அறியாதவை. சில சுவைமிகுந்தவை. அவற்றை எல்லாம் வெளியில் எடுத்துச் சொல்லத்தகுந்த வாய்ப்பும் ஆற்றலும் பெறும்பாலும் ஓர் எழுத்தாளனுக்கே சித்திக்கின்றது. எழுத்தாளன் தனது வரலாற்றை வெளியில் எடுத்துச் சொல்லும்போது அந்த வரலாறு பொதுமைப் படுத்தப்படுகின்றது. அவன் வாழ்ந்தகால, சமூக வரலாற்றின் ஒரு பகுதியாக அந்த வரலாறு அமைந்துவிடுகின்றது. குறித்த ஒரு காலகட்ட சமூக வரலாற்றின் ஓர் அங்கமாக அதனை நோக்க வேண்டியதும் ஆராய வேண்டியதும் வாசகனின் பொறுப்பு.

இது எனது வரலாற்றின் ஒரு பகுதி. இதன் ஆதாரம் நான்தான். என்னைத் தவிர இந்த வரலாற்றின் ஆதாரமாக இன்னொன்றைத் தேடஇயலாது. இதனைச் சுயவரலாறாக இல்லாது ஒரு நாவலாக, கலைத்துவச் செறிவுடன் எழுதி இருக்கலாம். நாவலாகப் படைக்கப்பெறும் பொழுது வரலாற்றின் உண்மைத்தன்மை சிதைந்துபோய்விடும். சமூகக் கட்டமைப்பில் கீழ்மட்டக் குடும்பத்தில் பிறந்த நான், எனது சிறுபராயத்தில் எவ்வாறு வளர்ந்தேன்; வளர்க்கப்பட்டேன் என்பதனை இந்த வரலாற்றில் எழுதி இருக்கின்றேன். ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத் தமிழ்மக்களின்

நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள், மரபுகள் என்பவற்றையும் இங்கு பதிவுசெய்து வைத்திருக்கிறேன். சமூகத்தின் சகலமட்டங்களிலும் சாதியம் எவ்வாறு தலைதூக்குகின்றது என்பதனை எனது சிறுபிராய அனுபவத்தினூடான ஆங்காங்கே சொல்லி வைத்திருக்கின்றேன்.

இலக்கிய வாழ்வோடு சார்ந்த எனது வாழ்வு அனுபவங்களை 'மல்லிகை' மாசிகையில் தொடர்கட்டுரையாக முன்னவே எழுதி இருக்கின்றேன். அந்தக் கட்டுரைத்தொடரில் சொல்லாதவைகளை 'ஞானம்' சஞ்சிகையில் பன்னிரண்டு இதழ்களில் தொடர்ந்து எழுதினேன். நான் ஓர் எழுத்தாளனாகப் படைப்பிலக்கியங்கள் படைக்க ஆரம்பிப்பதற்கு முன்னுள்ள கால அனுபவங்கள்தான் இவைகள். இரண்டு தொடர்கட்டுரைகளிலும் சொல்லாத அநுபவங்கள் ஏராளம், முதற்கட்டுரைத் தொடரில் சொல்லாதவைகளை இந்தக்கட்டுரைத் தொடரில் எழுதிய வேளை, இதற்கு 'இன்னும் சொல்லாதவை' எனத் தலைப்பிட்டேன். இவைகள் போன்று இன்னும் சொல்லாதவைகளை மேலும் சொல்ல இருக்கின்றேன். சமயம் வரும்போது அவைகளையும் சொல்லி ஆகவேண்டும் என்பது எனது எண்ணம். அவை இன்னும் சுவாரசியமும், அதிசயமும், சமூகப்பயன்பாடும் மிகுந்தவைகளாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

இக்கட்டுரைத் தொடரினை வெளியிட்டு வைத்த 'ஞானம்' சஞ்சிகைக்கும், இதனை நூலாக்கம் செய்து வெளிக்கொண்டு வரும் தமிழகத்தின் 'எழுத்து' பதிப்பகத்திற்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

**தெணியான்**

*கலையருவி*
*கரணவாய் வடக்கு*
*வல்வெட்டித்துறை, ஸ்ரீலங்கா.*
*28 - 03 - 2010*

நான் பிறந்தபோது முகமூடியோடு பிறந்ததாக அம்மா சொல்லுவா. முகமூடி அதிஷ்டமாம். அந்த முகமூடியை எடுத்து வைக்காமல் விட்டு விட்டது அம்மாவுக்கு மெல்லிய மனவருத்தம். எனக்குச் செய்த துரோகம் என்பது போல அவ எண்ணம். முகமூடியை எப்படி வைத்திருப்பது? உண்மையில் எனக்குத் தெரியாது. அம்மாதான் சொன்னா. பிறந்த உடனே முகமூடியை எடுத்து சுவரில் எறிந்து விட வேணும். அது நல்லாக் காய்ந்த பிறகு உரித்தெடுத்து பத்திரப்படுத்தி வைத்திருக்க வேணும். முக்கியமான காரியங்களுக்கு நான் போகும் போது மடிக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டு போனால் காரியம் வெற்றியாகும். முகமூடி எல்லாத்தையும் வென்று கொண்டு வரும்.

கழுத்தில் மாலை சுற்றிப் பிறக்காதது அம்மா மனசுக்குப் பெரிய ஆறுதல். மாலை சுற்றிப் பிறந்தால் மாமனக்கு ஆகாதாம். எனக்கு மாமன் ஆறோ! நூறோ! ஒன்றே ஒன்று. அம்மாவின் சகோதரம், தமையன். நான் மாமாவை 'ஆசை' என்றுதான் கூப்பிடுவேன். அப்படிக் கூப்பிடுகிறது அப்ப இருந்த வழக்கம். ஆசைக்குத் தலையிடி வரக்கூடாது. மாலை சுற்றிப் பிறந்திருந்தால் அவருக்குக் கரைச்சல் வந்திருக்கும். "மாலை சுற்றிப் பிறக்கிறது என்றால்... ... கழுத்தில் நஞ்சுக் கொடியோடு பிறக்கிறது அம்மாதான் அதுவும் சொன்னவ. "அப்படி என்றால்... ...?" எனக்கு விளங்கவேயில்லை. பிறகு அம்மாவை அதுபற்றி நான் கேட்கவேயில்லை. முகமூடி

அதிஷ்டந்தான் நான் மாலை சுற்றிப் பிறக்காமல் விட்டதாக அம்மாவின் நினைப்பு.

முகமூடியை எடுத்துப் பாதுகாக்காதது அம்மாவுக்குப் பெரிய மனக்குறைதான். ஆனால் முகமூடி அதிஷ்டம் கொஞ்சமேனும் இல்லாமல் போகவில்லை. நான் பிறந்து ஒரு வருஷத்துக்குள்ளே அதுதன் வேலையைக்காட்டி இருக்கிறது. ஐயா பெரிய ஒரு காணி வாங்கினார். வீட்டுக்கு முன்னாலயுள்ள காணி.

காணி எழுத்துக்குப் பெரியையாவுக்கும் சொன்னார்கள். எங்களுடைய பெரியையாவை நான் சொல்லயில்லை. ஐயாவுக்கு பெரியையா மகன் அண்ணா, எனக்குப் பெரியையாதானே! குடும்பத்தில்மூத்தவர்களைக் கூப்பிட்டு அவர்கள் சமூகத்தில் நன்மைக் காரியங்களைச் செய்கிறது அப்ப இருந்த வழக்கம் எடுத்த காரியம் பிச்சல் பிடுங்கல் வராமல் நடக்கும். குடும்ப உறவுகள் இறுகும். மூத்தவர்களுக்கு ஒரு மதிப்பு. இப்ப மூத்தவரிடம் ஏதும் காரியமாக வேணுமென்றால் மதிப்புக் கொடுக்கிறது போல தந்திரமாக வருவார்கள். அல்லது பிள்ளைக்குக் கலியாணத்தன்று "ஒருக்கால் வந்திட்டுப் போங்கோ" என்று மாத்திரம் கூப்பிடுவார்கள். உறவுக்குத் தேவை பணம். சகோதரங்களைப் பிணிக்கும் பாசக் கயிறு அதுதான்.

ஐயா முந்தின தலைமுறை. கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தார்கள். பணத்தால் அளக்கத் தெரியாதவர். எல்லாரையும் கூப்பிட்டார்.

பெரியையா கவனம் காணி எழுத்தில் இல்லை. அவர் திரும்பித் திரும்பி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்படிப் பார்க்காமல் இருக்க அவரால் முடியவில்லை. நான் அப்படி ஒரு வடிவு. குழந்தை அழகென்றால், பிறகென்ன சொல்லவே வேணும்! கொள்ளை அழகுதான். அவர் என்ன, யாரென்றாலும் பார்க்காமல் இருக்க இயலாது. அப்படி ஒரு சங்கை!

ஐயா மடியில் நான் இருந்தேன். எழுத்து முடிந்து 'தேத்தண்ணி' குடித்து வெற்றிலை போட்டு வெளிக்கிட்ட

பெரியையா, எனக்குக் கிட்ட வந்து சொக்கில் கிள்ளி "பொன்னின் குடத்துக்குப் பொட்டிடவேணுமோ!" என்று சொல்லிப் போட்டுப் போனார். ஐயாவுக்கு நல்ல புளுகம். பெரிய பெருமை.

அப்ப எங்கள் பெரியையா ஐயாவுக்குச் சொன்னார், "இவனைக் கொண்டு போய் முதலில் நாவூறுக்குப் பார்" என்று.

நாவூறுக்குப் பார்க்கிறது அம்மாவுக்குத் தெரியாது. ஆத்தை இருந்தவ. மூன்று செத்தல் மிளகாய், வேப்பிலை, மூன்று உப்புக் கல்லு, மூன்று மிளகு கொண்டு வந்து உடம்பெல்லாம் எனக்குத் தடவி, வீட்டுக்கு வெளியே தெருவில் போட்டு பன்னாடை கொளுத்தி எரிச்சா. அடே அப்பா! என்ன சத்தம்! வெடி வெடித்துப் பறந்தது போல. அவவுக்குப் பெரிய புதினம். இப்படி வெடிக்கிறது என்று. காறிக் காறி மூன்று முறை துப்பிப் போட்டு ஆத்தை வளவுக்குள் வந்தவ.

அப்ப எனக்கென்ன தெரியும்! சொக்கில் கிள்ளினால் பொக்கை வாய் திறந்து சிரிப்பேன். அவ்வளவுதான். ஐயாத்தான் ஒருநாள் இதெல்லாம் சொன்னவர். எனக்குப் பாற் பல்லு விழுந்து முளைத்தபிறகு ஒரு நாள் சொல்லிக் கவலைப்பட்டார். "என்ன லட்சணமான முகம் இப்ப என்னடா எண்டால் ஒழுங்கில்லாமல் பல்லு முளைச்சு உள்ள வடிவைக் கெடுத்துப் போட்டுது" ஐயா வேதனைப் பட்டார். ஐயா ஒழுங்கெல்லாம் அச்சொட்டாகப் பார்ப்பார்.

நான் அப்ப எட்டாம் வகுப்புப் படிக்கிறேன். வீட்டு வேலி அடைக்க ஐயா கூப்பிடுகிறார். ஐயா வேலிக்கு வெளியில் தெருவிலே, நான் வளவுக்குள். அது பனை ஓலை வேலி. ஐயாவுக்கு என் முகம் தெரியாது. எனக்கு ஐயாவின் முகம் தெரியாது. பனை நாரை குத்தூசில் கோத்து குத்துகிறார். நான் வைத்துப் பிடித்த வியாள் மட்டையில் குத்தூசி பாய்ந்து பட்டென்று குத்துகிறது. ஐயா குத்தூசியை இழுக்கிறார். திரும்ப இன்னொரு இடத்தில் குத்துகிறார். அந்த நேருக்கு வியாள் மட்டை வைக்கச் சொல்லுகிறார். மீண்டும் நார் கோத்து குத்தூசியால் குத்துகிறார். வியாள் மட்டையில் பிறகுமொரு

குத்து. ஐயாவுக்குச் சின்னக் கோபம் வந்துவிட்டது. "இப்படித்தான் கேத்திர கணிதம் படிக்கிறியே!" கேட்கிறார். அட, ஐயாவுக்கு கேத்திர கணிதம் தெரியுது. கேத்திரகணிதம் படிக்காதவருக்கு இதெப்படித் தெரியும்? எனக்கு ஆச்சரியம்; வாழ்க்கையில் இருந்து கற்றுக் கொள்வது கல்வி, வாழ்க்கைக்குப் பயன்படாத கல்வி தேவை இல்லாதது. இது அப்ப எனக்கு விளங்கவில்லை. கனகாலம் எடுத்தது இதை விளங்குகிறதுக்கு.

எனது பல் வரிசை பற்றி ஐயா சொன்னது சரி. நடுவில் இருந்து வலப்பக்கம் இரண்டாவது பல்லு வரிசை கொஞ்சம் உள்ளுக்கு. அது குட்டிப் பல்லல்ல. வேலிப் பொட்டு போல. கவனித்துப் பார்த்தால் தெரியும் எனது முக லட்சணத்தை அது குறைத்து விட்டதாக ஐயாவுக்கு மனக்கவலை. ஐயா, உண்மையைத்தான் சொல்லுகிறார். ஐயா பொய் சொல்லமாட்டார். அவர் சொல்லை நம்பத்தான் வேணும். ஆனால் ஒளிக்காமல் சொன்னால் நம்ப இயலாமல் கிடக்கிறது.

நான் யார் சொல்லை நம்புகிறது?

என்னை விரும்பின ஒரு பெட்டை சொன்னாள்; "அந்தப் பல்லு உங்களுக்கு நல்ல வடிவு" என்று. அவள் ஏன் பொய் சொல்லுகிறாள்! வடிவு பார்க்காமலே என்னை விரும்பினவள்? அவளுக்குத்தானே தெரியும் வடிவு? ஐயாவுக்கு நேர் வரிசை தெரியும். வரிசை தப்பினதிலும் ஒரு அழகு கண்டு அவள் சொன்னாள். அவள் கண்ணுக்கு அந்த அழகைக் காண முடிந்தது. என்மேலே வைத்த அன்பினாலேதான் அழகாத் தெரிந்தது என்று சொல்லலாம். அப்ப ஐயாவுக்கு என்மேலே அன்பில்லையே! அவர் எவ்வளவு பட்சம்.

அந்தப் பல்லில் மாத்திரம் அவள் அழகு காணவில்லை. கீழ் வரிசை வேட்டைப் பல் எனக்குக் கொஞ்சம் நீளம்; தெத்துப் பல். பிரபல சினிமா நடிகருக்கு இப்படித்தான் பல் என்றாள் அவள். அவள் என்னைச் சினிமாக் ஹீரோ ஆக்கினாள். எனக்குப் பெரிய புளுகம். அவளுக்கு நான் ஹீரோ.

அந்தக் ஹீரோ நடித்த படம் திரையில் ஓட, பார்த்துக் கொண்டிருந்த ஒரு கும்மெண்ட குமரி "சொக்கைக் கடிச்சி. தின்ன வேணும் போலக் கிடக்கு" என்று அந்தரப்பட்டாளாம்.

ஊரில் ஒரு கதை. என்னை விரும்பின பெட்டை அந்தக் ஹீரோ போல என்று சொல்லுகிறாள். அவள் வெளியில் சொல்லயில்லை. அவள் யாரை விரும்புகிறாள். அந்தக் ஹீரோவையோ? என்னையோ?

ஆசைப்பட்டது போல ஹீரோ நடிகர் சொக்கில் கடித்திருந்தால் கன்னத்தில் தழும்போடு பிறகு அவர் தோன்றி இருப்பார். ஆனால் எனக்கு கன்னத்தில் ஒரு தழும்பு. அந்தப் பெட்டை கண்ணில் அது படயில்லை. ஹீரோவுக்கு இல்லாதது, அவள் கண்ணில் தட்டுப்படாதது போல. அப்ப அவளுக்கு யாரிலே விருப்பம்? என்னிலோ! ஹீரோவிலோ! என்னில் அவள் ஹீரோவைப் பார்த்திருக்கிறாள். அதுதான் ஹீரோவுக்கு இல்லாத கன்னத்துக் காயம் அவள் காணவில்லை. என்னில் யார் அன்பு? ஐயாவா? அவளா?

நான் தப்பினேன். எங்கள் வீட்டுப் பசுமாடு இடித்து நான் தப்பினேன்.

எங்கள் வீட்டில் ஒரு பசு மாடு நின்றது. வெள்ளைப் பசு. ஐயா அதில் நல்ல கரிசனை. ஊர் மாடுகள் போல மேய்ச்சலுக்கு அவிழ்த்துக் கலைக்கமாட்டார். கட்டையில் கட்டி செல்லப்பிள்ளையாகப் பார்ப்பார். பிண்ணாக்குத் தவிடு வைப்பார். பனை ஒலை கிழித்து தும்பாக்கிப் போடுவார். காய்ந்த வைக்கோல் அவருக்கு விருப்பமில்லை. புல் அறுத்துப் போடுவார். அன்பாகத் தடவிவிடுவார். காலை, மாலையில் பால் கறந்து குடிக்கத் தருவார்.

பசு ஒரு கன்று போட்டது. தாயைப் போல வெள்ளை. வெள்ளை என்றால் எனக்குப் பிடிக்கும். கன்றுக்குட்டிக்குக் கிட்டப் போவேன். வாலைப்பிடித்து இழுப்பேன். அது துள்ளிக் குதிக்கும். ஓடும், விளையாட்டுக் காட்டும். நான் சும்மா விடமாட்டேன். துரத்திப் பிடிப்பேன். எனக்கு நல்ல விளையாட்டு. ஒரு நாள் முதுகைத் தொட்டுத் தொட்டுத் தடவினேன். அது மெல்ல மெல்ல அசைந்து அசைந்து போனது. நானும் விடவில்லை. தடவி தடவிப் போனேன். துள்ளிக் குதித்து ஓடியது. துரத்திப் போய் வாலில் பிடித்தேன். இழுத்தேன். மூசிக் கொண்டு வந்தது தாய்ப் பசு. முகத்தில்

இடித்து என்னைக் கீழே தள்ளியது. மற்றநாள் மாட்டையும் கன்றையும் ஐயா விற்றார். சரியில்லாத மாடு வீட்டுக்குக் கூடாது என்றார்;

எனக்கு விளங்கவில்லை. அந்தப் பசுமாட்டில் எவ்வளவு கரிசனையாக இருந்தார்!

அந்த மாடு இடித்த காயந்தான் கன்னத்தில் எனக்கு. என்னை விரும்பின பெட்டைகண்ணில் அது படவில்லை. கண்டிருந்தால் நல்ல வடிவு என்று சொல்லி இருப்பாள். அவளை எப்படி நம்புகிறது! அவளுக்கும் எனக்கும் இருந்த ஒட்டுவிட்டுப் போச்சு. அம்மாவுக்குச் சங்கதி தெரியாது. அறிந்தால் முகமூடி அதிஷ்டம் என்று சொல்லி இருப்பா.

முகமூடி அதிஷ்டம் அம்மா சொல்லாமலும் இருந்திருக்கிறா.

எனக்கு வயிறோட்டம். தண்ணி தண்ணியாகப் போகுது. ஊர்ப் பரியாரிமார் பார்த்துக் கைவிட்டார்கள். பருத்தித்துறை ரேவடி டாக்குத்தருக்குக் காட்டினார்கள். அவர் மருந்து தந்தார். சிவந்த கலர்த் தண்ணி மருந்து. மூன்று நேரமும் குலுக்கிக் குலுக்கி அம்மா பருக்கினா. கட்டுப்படவில்லை. நான் சோர்ந்து போனேன். வெம்பின பிஞ்சாக படுக்கையில் கிடந்தேன்.

என்ன செய்கிறது? ஐயாவுக்கு தெரியவில்லை.

தொங்கலுக்குப் பார்க்கச் சொன்னார்கள். குடலில் ஏதோ தொங்கிப் போச்சு. தலைமயிர்,... ... தும்பு,... ... ஏதோ! வேறு வழியில்லை. எப்படியோ வருத்தம் மாறவேணும். கற்பூரம் கொளுத்தி, மந்திரம் சொல்லி திருநீறு போட்டார், மந்திரக்காரன். வயிற்றிலும் தடவினார், மூன்று நாள். ஒரு சுகமுமில்லை. வயிற்றால் போய் கொண்டிருந்தது. தண்ணி ஓதிக் கொடுக்கச் சொன்னார்கள். செம்பு நிறையத் தண்ணீர். மாவிலையாலே குத்திக் குத்தி மந்திரம் முணுமுணுத்தார். பிறகு ஒரு சொட்டுப் பருகச் சொன்னார். மேலெல்லாம் பூசினார். எனக்குக் குளிருகிறது, நடுங்குகிறேன். அவரும் மூன்று நாளில் போய்விட்டார்.

'முடிஞ்சுபோம்' என்றுதான் மற்றவர்களின் நினைப்பு வெளியில் சொல்லவில்லை. அம்மா, ஐயா நினைச்சுப் பார்க்க இயலுமே! அம்மமா சொயத்துக்கு அழுதபடி, ஐயா அடக்கிக் கொண்டு திரிஞ்சார். அம்மா ஒருவருக்கும் சொல்லவில்லை. ஒருநாள் தூக்கிக் கொண்டு தனதூருக்கு நடந்து போனா. வீட்டுக்குப் போகவில்லை. சக்கோடைப் பிள்ளையாரிடம் போனா. அம்மாவின் குலதெய்வம். பிள்ளையார் கதை மார்கழியில் துடங்கினால் இருபத்தொரு நாளும் அம்மா நோன்பு. எந்தநாளும் போவா. வாசலிலே மடியில் கிடத்திக் கொண்டு அழுதா. மூலத்தானத்தில் வடிகிறதுபோல கண்ணீர் வடிந்தது. அம்மா சுற்றிக் கும்பிட, கற்பூரம் கொளுத்த, தேங்காய் உடைக்க, ஒன்றும் செய்யவில்லை. திருநீறு கிள்ளி எனக்குப் பூசினா. தூக்கித் தோளிலே போட்டுக் கொண்டு, மாலையில் வீட்டுக்கு வந்திட்டா.

அம்மா இப்ப அழவில்லை. கண்ணீர் விடவில்லை. ஆனால் வயிற்றால் போவது நிற்கவில்லை. போய் கொண்டிருக்கிறது.

இரவு என்னை வைத்துக் கொண்டு பக்கத்தில் அம்மா படுத்தா. பாவம் எத்தனை நாள் கண் விழித்தவ. ஒரு சாமம் நித்திரையாகப் போனா. நித்திரையில் ஒரு கனா. தலைமுடி தாடியெல்லாம் வெள்ளையாக நரைத்த ஒரு கிழவர் ஒரு கையில் வெள்ளிப் பூண் போட்ட ஒரு பிரம்பு. மற்றக்கையைப் பொத்திப் பிடிச்சு "இந்தா இதைப் பிடி"என்று நீட்டுகிறார். அம்மா இரண்டு கையையும் நீட்டி வாங்கிப் பார்த்தா, அது மிளகு. "வறுத்து அவிச்சுக் குடு" கிழவர் சொல்லுகிறார். அம்மா கண் விழித்து விட்டா. கிழவர் மறைந்து போனார். அம்மா நினைத்துப் பார்க்கிறா. கனா அல்ல. நேரில் வந்து சொன்னது போல இருக்கிறது. அம்மாவுக்கு நித்திரை வருமே! விடியுது விடியுதென்ன எழும்பி கொஞ்சம் மிளகெடுத்து ஓட்டிலே போட்டு வறுத்தா. தண்ணீர் விட்டு அவித்தா. நல்லா ஆற்றி வந்து எனக்குப் பருக்கினா. என்ன புதுமை! வயிற்றால் போனது கட்டுப்பட்டது. மூன்று நேர மிளகு தண்ணீரோடு முழுக்க நின்று விட்டது. நான் உயிர் தப்பினேன்.

அம்மாவுக்கொரு நம்பிக்கை, பிள்ளையார்தான் என்னை மீட்டுத் தந்தவர். நம்பினவர்களைக் கைவிடமாட்டார். முகமூடி அதிஷ்டம் என்று அம்மா சொல்லவில்லை. யமனிடம் கையில் இருந்து பிளையார்தான் பறித்துத் தந்தவர் என்று அம்மா நம்புகிறா..

யமன் உயிர் எடுக்கிறது நான் பார்த்திருக்கிறேன், நாடகத்தில். மகா சிவராத்திரி கண் விழிப்புக்கு நாடகம் போடுவார்கள். கோயில்களிலே சத்தியவான் சாவித்திரி நாடகம் பார்த்தேன். யமன் சத்தியவான் உயிர் எடுக்க வாறான். சாவித்திரி குறுக்கே நிற்கிறாள். யமன் வேடத்தில் அச்சுவேலியில் ஆள். அவருக்கு யமன் என்றுதான் பேர். அந்த யமனைக் கண்டால் சாகப் பயமாக இருக்கும். பயந்து பயந்து ஓடி ஒளிக்க மனம் வரும். அந்தக் கதைகளில் எனக்கு நம்பிக்கையில்லை சந்தேகம்.

பிள்ளையார் உயிர் மீட்டுத் தந்ததை அம்மாதான் சொன்னா. நான் மெல்லச் சிரித்தேன். அம்மா பசுவதி கோபித்து அறியாதவ. ஆனால் கோபம் பொங்கியது. பிள்ளையாரிடம் அம்மா கேட்டிருப்பா. இவனை மன்னித்து அருளும் படி.

நிச்சயமாகச் சொல்ல முடியாது.

மருந்து, மந்திரத்துக்கெல்லாம் கட்டுப்படாத நோய் மிளகு அவித்துக் குடிநீரில் எப்படிச் சுகப்பட்டது?

விடை தெரியாத வினா இது.

ஆனால் மிளகு ஒரு மருந்தாகுமென்று வேண்டுமானால் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம்.

# 9



அந்த நாளிலே கிராமத்துக்குள்ளே கார் வந்தால் ஒரு புதினம். எங்கள் ஊரிலும் அப்படித்தான். நான் அறிய எங்கள் படலையில்தான் அப்ப கார் வந்து நின்றது. ஊர்ப் பொடியள் ஓடி வந்தார்கள். சுற்றி சுற்றி புதினம் பார்த்தார்கள். தொட்டும் பார்த்தார்கள். றைவர் கீற வேண்டாம் என்றார். ஆனால் பேசமாட்டார். அப்படிக் கார் இப்ப காணேலாது. பச்சை நிறம் ஜீப் மாதிரி சதுரம். கரிக்கோச்சிப் பெட்டிபோல கதவு. நல்ல காற்றோட்டமாக இருக்கும். மடித்து விடுகிற கூட், நல்லதடிச்ச சீலை. பெரிய சில்லு. சின்னக் குழலை வளைத்து தலைப்பிலே பந்து பூட்டின கோன். பந்தை அமுக்க அமுக்க "பாம்... பாம்" என்று கோன் அடிக்கும்.

கார்காரன் கடற்கரைப்பகுதி ஆள், நல்ல மனிஷன். நான் காரில் ஏறுவேன். கோன் அடிக்க ஆசை. எனக்கு ஏலாது. கோனைப் பார்த்துக் கொண்டிருப்பேன். றைவருக்கு விளங்கி விடும். பந்திலே அமுக்கி அமுக்கி "பாம் பாம்" என்று கோன் அடித்துக் காட்டுவார். எனக்கு நல்ல புளுகம். அவரைப் பார்த்து சிரிப்பேன். அவருக்கும் சிரிப்புவரும்.

அப்ப எனக்கு மூன்று வயது. அம்மாவுக்கு வயிற்றிலே குழந்தை. என்ன குழந்தையாக இருக்கவேணும்? வயிற்றைப் பார்த்துக் கதைத்தார்கள். பரந்து கீழிறங்கின வயிறு. பெண்பிள்ளைதான். பெண்பிரசு இல்லாத குடும்பம். மூத்தது ஆண். பிறந்து செத்துப் போச்சு அடுத்தது அண்ணா. பிறகு

நான். இப்படி போனால்...? பெண் என்றதும் எல்லாருக்கும் நல்ல புளுகம். அம்மாவைப் பத்திரமாகப் பார்த்தார்கள்.

மாதம் ஏற ஏற ஊர்ந்து துடிக்கிறது கூடும். மாதம் கிட்ட வர, இந்தக் கடுவன்கள் இடிச்ச இடியிலே கட்டின சீலை அவிழும் என்று அம்மா சொல்லுவா. இப்ப ஊர்ந்து துடிக்கிறது குறைவு. பெண்பிள்ளை அப்படித்தானாக்கும் என்று நினைச்சா. வரவரக் குறைந்து கொண்டு போனது. மனசில் சமுசியம், ஊர்ப் பரியாரிமாரோடு மினைக்கெட இயலாது. அரசாங்க ஆசுபத்திரிக்குப் போகலாம். அது தருமாசுப்பத்திரி. பாண் தின்கிறதும், தருமாசுப்பத்திரிக்குப் போகிறதும் மதிப்பில்லை. பருத்தித்துறைக்கு காரில் ஐயா கொண்டுபோனார். துறைமுகத்தடியில் இருந்த டொக்ரர். 'ரேவடி டாக்குத்தர்' என்ற சொல்லுவார்கள்.

அவர் நல்ல கைராசிக்காரர். தமிழ்ப் பரியாரிமார் போல கைபிடித்துப் பார்க்கிறவரில்லை. கழுத்தில் தொங்குகிற ஸ்டெத்தாஸ்கோபை காதுகளுக்குள்ளே மாட்டி, நெஞ்சு, முதுகெல்லாம் வைத்துப் பார்ப்பார்; அது ஒரு வடிவுதான். எப்பவும் வெள்ளை வெளேரென்று இருப்பார். வெள்ளைச்சேட், வெள்ளை லோங்ஸ், காலிலே சப்பாத்து, வெள்ளை மயிர்த்தலை சோட்டாக வெட்டினது. நல்ல எடுப்பான கிழவர். இலங்கை முதல் பிரதமர் எங்களுடைய பள்ளிக் கூடத்துக்கு வந்தார். அப்ப அந்த டொக்ரர் வருகிறார் என்று நான் நினைத்தேன்.

அம்மாவைக் கொண்டு போனார்கள். கனமுறை போய் வந்தார்கள். கடைசியாகச் சொல்லிப் போட்டார். 'குழந்தை வயிற்றுக்கே செத்துப்போச்சு' என்று. அப்ப வயிற்றுக்கே செத்தால் தாயும் சரி, அம்மாவும் போச்சுதென்றுதான் கதை. தலையில் யப்பான் குண்டு விழுந்தமாதிரி ஐயா கலங்கிப் போனார். இரண்டு பிள்ளைகளோடும் என்ன செய்யப் போகிறேன்? என்று.

மானிப்பாய் ஆசுபத்திரியில் இருந்த டொக்ரர் திறமான ஆள். வலு கெட்டிக்காரன். அம்மாவைக் காரிலே கொண்டு போனார் ஐயா. இப்ப என்றால் வெட்டி எடுக்கலாம். அப்ப

அந்த வசதி இல்லை. ஒவ்வொரு நாளும் ஊசி, ஒரு மாதம் வரை அங்கே இருந்தா. செத்த குழந்தையை அம்மா சுமந்து கொண்டிருந்தா. அதனாலே யாருக்கு, என்ன பிரயோசனம்? ஊதின வயிறு கொஞ்சம் கொஞ்சமாக வற்றி வந்தது. பிறகு பிறப்பிச்சுப் போட்டார். பெண்பிள்ளைதான். எல்லோருக்கும் கவலை. அம்மாவைக் காப்பாற்றினது ஒரு ஆறுதல்.

அம்மாவுக்குப் புண் உடம்பு. பத்தியம் கொடுத்து, வெந்நீர் வார்த்து பார்த்தெடுக்கவேணும். வீட்டிலே இருந்தால் ஏதும் வேலை செய்வா. பெத்தாச்சியைக் கூப்பிட்டாலும் அம்மா சும்மா இரா. வீட்டில் யார் இருக்கிறார்கள், அம்மாவைப் பார்த்தெடுக்க! அம்மாவை பெத்தாச்சி வீட்டில் கொண்டு போய் ஐயா விட்டார். அண்ணாவும் நானும் கூடப்போனோம். அப்ப ஐயாவை இரவில் காணலாம்.

நான் அப்ப ஒரு ஊமையன். உம்மென்று இருப்பேன். வாய் திறந்த பேசுகிறதில்லை. எல்லாம் பார்த்துக் கவனம் பண்ணுவேன். பெரியையா வீட்டுக்கு வருவார். நான் வாசலில் இருப்பேன். கதை கேட்பார். நான் தானே வாய் திறக்கிறதில்லை! ‘விறுமர் மாதிரி இருக்கிறான்.’ என்பார். எனக்கு ஒன்றும் விளங்காது. பிறகு தெரியும் விறுமர் ஒரு சுவாமி என்று. கோயிலும் இருக்கிறது. கட்டுச் சொல்லும் என்று கேட்கப் போகிறார்கள். விறுமர் கட்டுக் சொல்ல வாய் திறந்து பேசுந்தானே! அப்ப விறுமர் என்று பெரியையா ஏன் சொன்னவர்? எனக்கு விளங்கவில்லை. விறுமர் தொக்கையாக இருக்குமோ நான் நல்ல தொக்கை, பெரிய சொக்கு. ‘சொக்கன்’ என்று அம்மாவின் ஊரில் சொன்னார்கள். ‘விதானை’ என்றும் கூப்பிட்டார்கள். விதானைமாருக்கு அப்ப கடுமையான அதிகாரம். பயந்த சனங்கள் கொடுக்கிறதை வாங்கி நல்லாத் தின்றார்கள். இறைச்சிக் குடலைகள், சாராயப் போத்தல்கள். எல்லாம் ஓசியிலே குடித்துத் தின்ன உடம்பு வைக்கும். நல்ல குண்டாக இருப்பார்கள். நானும் குண்டுதான். கெதியாக ஓடமாட்டேன். அதனாலே ஒரு நாள் துலைந்து போனேன்.

கட்டைத் தியாகன் அம்மி பொழிகிறவன். தேய்ந்த அம்மிக்கல்லை ஆப்படித்து பொழிவான். நெருப்புப் பொறிபறக்கும். பூவாணம் மாதிரி, ஆப்பு, சுத்தியல் சாக்கிலே

சுத்திக் கட்டி தோளிலே கொண்டு திரிவான். ஆள் வலு கட்டை, சின்னக் குடுமி, வெற்றிலை வாய். பொழிகிற வீட்டில் கிடைக்கிறதை சுருட்டி சாக்கிலே போட்டுக் கொண்டு போய்விடுவான். கள்ளன், கள்ளத்தியாகன் என்றும் சொல்லுவார்கள். அழுகிறபிள்ளையை அடக்குகிறதுக்கு, "கட்டைத் தியாகன் வாறான்... கள்ளத் தியாகன் வாறான்... பிடிச்சுக் கொண்டு போகப் போறான்" என்றுதான் அடக்குவார்கள். கள்ளத்தியாகன் என்றால் குழந்தைகளுக்குப் பயம். எனக்குந்தான்.

ஒரு நாள் மாலையுக்குள்ளே பக்கத்து வீட்டுக்குப் போனோம். பொடியளோடு விளையாடுகிறதுக்கு. சொந்தக்கார வீடு 'ஒளிச்சு விளையாடுகிறது' தான். விளையாட்டு முற்றத்தில் நின்று திக்குத்திக்கா ஓடி ஒளித்தார்கள். ஒராள் கண்டுபிடித்துத் தொடவேணும். நான் பெரிய தொக்கை. ஓட, ஒளிக்க இயலாது. மெல்ல வீட்டுக்குள்ளே போய் ஒரு மூலையில் குந்தினேன். ஒவ்வொருவராகக் கண்டு பிடித்து 'பட்டான்' சொல்லி தொட்டாச்சு. இப்ப என்னைத் தேடுகிறார்கள்... தேடுகிறார்கள்... நான் மூச்சுவிடவில்லை. எல்லா இடமும் தேடிக் களைத்துப் போனார்கள். அப்ப பார்த்து கள்ளத் தியாகன் அந்த ஒழுங்கையால் போனான், அண்ணா ஓடிப்போய், "தம்பியைக் கள்ளத்தியாகன் பிடிச்சுக் கொண்டு போவிட்டான்" என்றார்.

அம்மா, "ஐயோ... ஐயோ... என்ரைபிள்ளை..." குழறி அழுது கொண்டு தெருவுக்கு வந்துவிட்டா. பெத்தாச்சி தலை தலை என்று அடிக்கிறா. சனம் ஓடிவந்து கூடிவிட்டது. "என்ன... நடந்தது... என்ன நடந்தது..." அந்தரப்படுகிறார்கள். "பச்சை உடம்பு... பிள்ளை பெத்த உடம்பு... குத்தி முறியக் கூடாது" அம்மாவைத் தடுக்கிறார்கள். அம்மா கேட்டால் தானே தலைவிரிகோலமாக விழுந்து புரளுகிறா... "கள்ளத் தியாகன் எங்கே போறான்...? எப்படிப் போறான்...?" அவனைக் கலைச்சுப் பிடிக்க அவசரப்படுகிறார்கள்.

எனக்கொன்றும் விளங்கவில்லை சத்தம் கேட்கிறது. அம்மா, பெத்தாச்சி அழுகிறார்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. மெல்ல எழும்பி வருகிறேன். ஒருவரும் என்னைக்

கவனிக்கவில்லை. சனத்துக்குள்ளே நுழைந்து, அம்மா பக்கத்தில் போய் நிக்கிறேன். அம்மா தற்செயலாகத் திரும்பினா, பக்கத்திலே நான், "என்ரை ராசா... ... என்ரை தெய்வம்... எங்கேயடி போனனீ..." அவக்கென்று தூக்கி மடியில் கிடத்தி தலையைத் தடவுகிறா. அம்மாவுக்கு வலு சந்தோஷம். எல்லாரும் சிரிக்கிறார்கள். அம்மாவுக்குச் சிரிப்பு வரவில்லை. கட்டைத் தியாகன் கையில் இருந்து என்னை மீட்டுவிட்ட புளுகம். "எட குத்தியாளெங்கெயடா போனனீ?" பெத்தாச்சி கேட்கிறா. கன்னம் கன்னமாக கொஞ்சுகிறா.

கள்ளத் தியாகன் பிள்ளைபிடிகாரனில்ல. ஒரு பிள்ளைதானும் பிடித்ததாக இல்லை. அழுகிற பிள்ளையை அடக்கிறதுக்காகச் சொல்லிச் சொல்லி பிள்ளை பிடிகாரன் ஆக்கினார்கள். திரும்பத் திரும்பப் பொய்யைச் சொல்லி அதை மெய் ஆக்கலாம் தானே!

பெத்தாச்சி பொய்மையின் நெருப்பு. அம்மாவின் தாய், நாங்கள் பெத்தாச்சி என்று கூப்பிட்டோம். பெத்தாச்சி எங்களுக்கு அருமை. வேறு பேரன், பேத்தி இல்லை. பெத்தாச்சி வாழ்விழக்க, அம்மாவுக்கு எட்டு வயது. பெத்தாச்சி நல்ல வடிவு. கொடிபோல நெடுமி, சிவப்பு. பெத்தாச்சியைப் பெத்தது பெத்தம்மா... கிளி அதுதான் பெயர். வெற்றிலை சப்பி விழுங்கினால் சாரம் தொண்டையில் இறங்குகிறது தெரியுமாம். அப்படி ஒரு சிவப்பு. அந்த பெத்தம்மாவின் பிள்ளைதானே பெத்தாச்சி! பெத்தாச்சி ரோசாப்பூ.

பெத்தாச்சி சீப்பாலே தலை இழுக்கிறதில்லை. கண்ணாடி பார்க்கிறதில்லை. தலையை விரலால் கோதி, ஒரு மயிர் பிசகாமல் உச்சி பிரித்து கொண்டை கட்டுவா. எப்பவும் வெள்ளைச் சீலைதான். புருஷன் செத்த பிறகு இந்தக் கோலம். அம்மாவுக்கு அப்ப எட்டு வயது. எனக்குப் பதினெட்டு வயது வரை பெத்தாச்சியைப் பார்த்திருக்கிறேன்.

ஐயா செத்த பிறகு 'சீப்பால் இழுக்க மாட்டேன்' என்று அம்மா சொல்லவில்லை. வெள்ளைச் சீலை கட்டப் போகிறேன் என்றா. நாங்கள் விடவில்லை. வெளிக்கிடைக்க வெள்ளைதான் கட்டுவேன் என்றா. விட்டுவிட்டோம்.

எனக்குத் திருமணம். தமிழ் முறையில். விளம்பரப் படுத்தாமல் எனது ஆசிரியர் முறை செய்து வைத்தார். வாழ்விழந்த இரண்டாந்தாரக்காரன். சிலபேர் முகஞ்சுழித்தார்கள். நான் பொருட்படுத்த இல்லை. அம்மா வெள்ளைச்சீலை கட்டி இருந்தா. மணப்பந்தலில் ஒதுங்கி இருந்தா. தான் வாழ்விழந்தவ என்ற எண்ணம். தாலி, கூறை ஆசீர்வாதம் பண்ண சபைக்குள்ளே கொண்டு போகிற சமயம் உறவுக்காரர் அதைச் செய்வார். நான் மாப்பிள்ளை முந்திவிட்டேன். தாம்பாளத்தைத் தூக்கி அம்மாவிடம் போனேன். அம்மா தொட்டு ஆசீர்வாதம் பண்ணினா. பிறகு ஒருவர் கையில் கொடுத்துவிட்டேன்.

நாற்பது வருஷம். இப்ப புருஷன் இல்லாதவர்கள் பட்டுப் புடைவை கட்டி கலியாணத்தில் நிற்கிறார்கள். தாலிதான் இல்லை. அந்தக் காலத்தில் அசல் பெத்தாச்சி. அம்மா அப்படி இல்லை. பெத்தாச்சிபோல இருக்க இயலவில்லை. தான் வாழ்ந்த காலத்தின் அசல் அம்மா. பட்டுக் கட்டுகிறவர்கள் இந்தக் காலத்து ஆட்கள். எல்லாம் காலத்தின் மாற்றம். வேண்டியது தான். ஆனால் சீலையும் கோலமும் மாறினால் சரியே! ஆசீர்வாதம் பண்ண அம்மா முன்னுக்கு வரவில்லை. இப்பவும் அப்படித்தான் முன்னுக்குவராயினம் முன்னுக்கு விடாயினம். அப்ப என்ன மாறினது மாற்றம் மனத்தில் இல்லை. பிறகென்ன மாற்றம்?

யாழ்ப்பாணத்து ஆண்கள் இருக்கிறது பெண்டில் வீட்டில். ஐயாவின் தொழில், பார்க்க எடுக்க பெண் பிரசில்லாத வீடு, இதுகளுக்காக , அம்மா ஐயா வீட்டுக்கு வந்தா. எனக்கு அஞ்சு வயது தம்பி பிறக்கேக்க. 'ஆண்பிள்ளை என்றது ஆத்தைக்கு வெறுப்பு' "நெல்லைக் கிள்ளிக் கூரையிலே போடுங்கோ" என்று சொன்னா. ஐயாவுக்குத் தெரியும். பெண் சகோதரப் பொருத்தம் எனக்கில்லை என்று. எனக்கு சாதகம் எழுதினபோது சொத்திச் சாத்தியார் சொல்லிப்போட்டார். ஆள் வலுவிண்ணன். நடக்கமாட்டார்; சப்பாணி. இப்ப நம்பர் பார்த்துத்தானே பெயர் வைக்கினம். அப்ப நட்சத்திரத்துக்கு பொருத்தமான எழுத்திலேதான் பெயர். என்க்கு பெயர் அப்படித்தான்.

ஆண்பிள்ள வேண்டாம் என்றது ஒரு புதினந்தான். எல்லாரும் பெண்பிள்ளை பாரம், வேண்டாமென்று வெறுக்கிறவர்கள். எல்லாந்தன் தன் தேவைக்குத்தான். வேறு ஒன்றுமில்லை.

இப்ப ஒற்றைக் காதில் தோடுபோடுகிறது நாகரிக உச்சம். சிவனாரும் தோடுடைய செவியன் தான். ஒரு காதில் தோடு திருஞானசம்பந்தர் பாடி இருக்கிறார். இரண்டு காதிலும் போட்டால் சிரிப்பார்கள். இரண்டு காதுகளிலும் போடுகிறதுக்கு வசதி இல்லைப்போல. நாங்கள் மூன்று பேரும் தோடு போட்டிருந்தோம். பவுன்தோடு, அரையில் வெள்ளிக் கொடி, கொஞ்சம் வளர்ந்த பிறகு மோதிரம். வசதி இல்லாதவர் போடுகிறதில்லை. தலை செம்படையாக பறட்டை பற்றிக் கிடக்கும். எண்ணெய் வைக்கிறதில்லை.

எங்களுக்கு தினமும் எண்ணெய் வைப்பு, நல்லெண்ணெய் இரண்டு கிழமைக்கு ஒருக்கால், எண்ணெய்க்காரி வருவா. திறமான எண்ணெய், கைக்குத்தாக எள்ளுக் குத்தி வடிச்ச எண்ணெய். அம்மா மணந்து பார்ப்பா, நல்ல மணங்குணமாக இருக்கும். சுடுசோற்றில் ஊற்றித் தின்னச் சொல்லுவா. காறும் வேண்டாம் என்று சொல்லுவேன். எண்ணெய் தலையில் பூசிகிறதில்லை. நல்லாத் தப்புவா. பிறகு தலையைப் பிடிச்சு கசக்குவா. நல்லசூடு, கைசுடுகுது, எண்ணெய் வைக்கப் பஞ்சிப் படுகிறார். என்னெண்டு வளருகிறது என்பா.

சனிக்கிழமையில் முழுக்கு. காலையிலே பிடித்து எண்ணெய் தப்பி விட்டுவிடுவா. சாப்பிட்டு முழுகக் கூடாதாம். வயிறு பொருமும். ஒன்பது மணிக்கு முன்னம் முழுக வார்ப்பு. சீயக்காய், வெந்தயம், அரைப்பு அவித்து மெல்லிய சூட்டோடு தலையில் போட்டுக் கசக்குவா. கண்ணில் அரைப்பு விழுந்தால் ஜீவன் போகும். தலையில் தண்ணீர் வார்க்க மூச்சுத் திணறும், முகத்துக்குத் தண்ணீர் வராமல் நெற்றிக்கு மேலே ஒரு கையை வைத்து அள்ளி ஊற்றுவா.

நான்தான் குழப்படி, குய்யோ முறையோ என்று கத்துவேன். முழுக்கு முடிந்தால் ஈரம் போக தலையைக் கசக்கிவிடுவா. ஈரம்போகாது விட்டால் நீர்க் கோத்து விடுமாம்.

சளி பிடித்து விடும். பிடரி, கன்னம் உடம்பெல்லாம் பஞ்சுப் பூவிலே தொட்டுத் தொட்டு பூசல்மா அடிப்பா. பிறகு வேர்க் கொம்பு அம்மியில் போட்டு இரண்டு உப்புக் கல்லு சேர்த்து அரைச்சித் திரட்டுவா. திரளையாகப் பூவரசம் இலையில் தின்னத்தருவா. தின்றாக வேணும். தின்னாவிட்டால் வயிற்றில் வாய்வு விழுந்திடும் என்பா. அதுக்குப் பிறகுதான் சாப்பாடு.

நான் குளிக்கிறதுக்குப் பச்சைக் கள்ளன். ஒரு நாள் பின்னேரம் அம்மா குளிக்கக் கூப்பிட்டா, நான் மாட்டேன் என்றேன், பிடிக்க வந்தா, எடுத்தேன் ஓட்டம். நான் நல்ல தொக்கைதானே! அம்மாவும் அப்படித்தான். அம்மாவும் விடவில்லை. கலைத்துக் கொண்டு வந்தா. கனதூரம் ஓடிவிட்டேன். களைத்துப்போனேன். அம்மா பிடித்துவிட்டா. தூக்கிக் கொண்டு மூச்சிழுக்க மூச்சிழுக்க நடந்தா. எனக்கு வந்த கோபத்துக்கு... அழுதேன். பறித்துக் கொண்டு ஓடப் பார்த்தேன். முடியவில்லை. தாலிக் கொடியை இரண்டு கையாலும் பிடித்தேன். அம்மா தடுக்க முடியவில்லை. என்னை இறக்கிவிடவும் மனமில்லை. கையில் பிடித்ததை மடக்கி முறித்தேன். பதறிப்போனா. அப்பவும் விடவில்லை. கிணற்றுக்குக் கொண்டு போய்க் குளிக்க வார்த்தா.

பிறகு தாலிக் கொடியைப் பிடித்துப் பிடித்துப் பார்த்தா. முகம் கறுத்துப் போச்சு. எனக்கு நல்ல சந்தோஷம் அடிவிழவில்லை. ஐயா வந்தபிறகு மெல்லச் சொன்னா. 'அப்படியே!' என்று கேட்டார். கொடியைப் பிடித்துப் பார்த்தார். ஒன்றும் சொல்லவில்லை. என்னைப் பார்த்து சொண்டுக்குள்ளே சிரிச்சார். பிறகு புதுக்கொடி செய்வித்துக் கொடுத்தார்.

இதுதான் ஐயா, அம்மா

இந்த ஐயா, அம்மா செய்த கொடுமை மறக்க இயலாது.

வருஷத்தில் இரண்டு தடவையாவது பேதி, வாழைப்பழப் பேதி. ஐயா வாங்கித்தருவார். முழுக்கு முடிந்த மற்ற நாள் தருவார்கள். மருந்து குடிக்கிறதுக்கு நான் பச்சைக்கள்ளன்.

உரைத்து, அனுமானம் சேர்த்து தரும் தமிழ் மருந்து நோயிலும் கொடுமை. நான் வாய் திறக்க அடம்பிடிப்பேன். பல்லுக் கிட்டிப் போடுவேன். அம்மாவின் மடியில் கிடத்தி, வாய்க்குள்ளே பாக்கு வெட்டி விட்டு மருந்து பருக்குவார்கள்.

அம்மாவை ஏச்சுப் போடுவேன். ஐயாதான் பேதி மருந்து தருவார். வெறு வயிற்றிலே, வாழைப்பழம் இல்லாவிட்டால் சர்க்கரையில் வைத்துத் தருவார். வீட்டோடு நிறத்தில் சின்ன உருண்டையான குளம்பு, கொஞ்ச நேரத்தில் ஏவறை துடங்கும். வெறு வயிறு அடிக்கடி ஏவறை வரும். குடலைப் புரட்டிக் கொண்டு வரும். அது 'தண்ணிப் பேதியாம். தண்ணீர் குடிக்கத் தருவா. குடிக்க சத்தி வரும். வயிற்றைக் குழப்பும், பேசிப் பேசிப் போகும் களைத்துப்போவேன். அம்மாவுக்கு கழுவுகிற வேலை. தொடர்ந்து போகும். பின்னேரம் வரை போய்க் கொண்டிருக்கும். "பூச்சிபோகுது... மந்தம் போகு... சீதம் போகுது... கசாயமாகப் போகுது" அம்மா சொல்லுவா, அவவுக்கு நல்ல சந்தோஷம், "வெப்பு கழண்டு போச்சு" என்றும் சொல்லுவா.

பேதி கட்டுப்பட பிறகு சாப்பாடு நல்லாக் கரைத்துக் காய்ச்சி குத்தரிசிச் சோறு, வேர்க்கொம்பு, மல்லி, சீரகம் அரைத்துக் காய்ச்சின பத்தியக் கறி. வயிறு பசிக்கும், தின்ன இயலாது. இரண்டு நாளுக்குச் சோர்வாக இருக்கும்.

பட்ட அவஸ்தை சொல்ல இயலாது. அப்படி ஒரு கஷ்டம். இப்ப சும்மா பேதி குடிக்கக் கூடாதென்று டொக்ரர்மார் சொல்லுகிறார்கள். நாளைக்கு இதுவும் பிழை என்று சொல்வார்களோ யாருக்குத் தெரியும்!

# 3

நான் பள்ளிக்குப் போனேன். சிறிசிலே போயிருக்க வேணும். வயதுக்குமுந்தி. வாத்தியார் அப்ப பிள்ளை பிடிகாரர். தனக்குரிய பிள்ளைச் சராசரி காட்ட வேணும். இல்லை என்றால் ஆளைநிற்பாட்டிப் போடுவார்கள். நான் அந்தப் பிள்ளை பிடிகாரரிடம் அகப்பட்டுப்போனேன். தாயோடு குட்டிப்போல அண்ணாவோடு இழுபட்டேன்.

காலை எழுந்த உடன் குளிப்பு, பின்பு சாப்பாடு, எண்ணெய் வைத்து தலை இழுப்பு. உச்சி புறிக்க கனநேரம் எடுக்கும், குப்பை மயிர் புறிக்கப் புறிக்க குழம்பும். ஒரு மாதிரி அம்மா புறிச்சுப்போடுவா. பூசல் மா பூசிவிடுவா. சிலேற்று புத்தகம் எடுத்துக்கொண்டு போவேன்.

படிப்பில் எனக்கும் கவனம் இருக்காது. எப்ப படிப்பு முடியும்?. வீட்டுக்குப்போக. வாத்தியார் நல்லவர். அடிக்க மாட்டார். கற்கண்டு தருவார். படம்காட்டுவார். விளையாட்டுக் காட்டுவார். நாய் வால் ஆட்டுகிறது போல பின்னுக்கு தடி வைத்து ஆட்டிக் காட்டுவார். 'வள் வள்' என்று குலைத்துக் காட்டுவார். சோக்கான வாத்தியார், சின்னமுதல் வாத்தியார். ஆனால் எனக்கு வீட்டுக்குப் போகிற அந்தரம்.

நான் போக அம்மா அம்மியில் அரைத்துக் கொண்டிருப்பா. நான் போய் முன்தானையை அவிழ்ப்பேன். பால்குடிக்கத் துடங்கி விடுவேன். "எடே... குத்தியாவிடடா... விடடா... பள்ளிக்குடம் போகத்துடங்கி விட்டாய். இப்பவும் பால் தவனம்" என்பா. சொன்னால் நான் கேட்டால் தானே!

சொல்லிச் சொல்லிப் பார்த்தா. நான் கேட்கவில்லை. கடைசியாக, பிள்ளைக் கத்தாளை முறித்து பூசிப்போட்டு இருப்பா. நான் ஓடிவந்து குடிப்பேன். ஒரே கைப்பு, காறித்துப்புவேன். வயிற்றைப் புரட்டும். பிறகு குடிக்காமல் விட்டுவிட்டேன்.

நான் படித்தது சைவப்பள்ளிக்கூடம். அது தாண்டி அங்கால போனால் ஒரு வேதப்பள்ளிக்கூடம். இரண்டுக்கும் போட்டி. பிள்ளை பிடிக்க. பிள்ளைகளுக்கு என்ன போட்டி தெரியாது. வழிக்குவழி சண்டை பிடிப்பார்கள். வேதப்பள்ளிக்கு ஒரு பெரியாள் போகிறவர், படிக்க. எல்லாரும் அவரோடு சேட்டை விடுவோம். சேட் போடமாட்டார். நாலு முழம் கட்டி இருப்பார். வேட்டியில் பிடித்து இழுப்போம். ஹி... ஹி... என்று சிரிப்பார். அப்பவும் கோபம் வராது. எங்களுக்கு நல்ல முசுப்பாத்தி.

சைவப்பள்ளிக்கூடத்தில் ஒரு வாத்தியார் இருந்தார். அவர் வேதப்பள்ளிக்கூடத்து ஆள். அங்கே ஏதோ பிரச்சினை. தன்னுடைய சராசரியைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்திட்டார். சராசரி காட்டினால் எங்கேயும் இடம் குடுப்பினம். அவர் பெரிய முதல் வாத்தியார். நெடுகப் பெரிய முதல்தான் படிப்பித்தவர். பெரிய முதல் பாடம் அவருக்கு நல்ல வாலாயம் போல. முதலாம் வகுப்பு இரண்டு வருஷம். சின்னமுதல் முதலாம் வருஷம். மற்றவருஷம் பெரிய முதல். பிறகு இரண்டாம் வகுப்பு.

நான் பெரியமுதல் படிக்கிறபோது பள்ளிக்குப்போக விருப்பமில்லை. வாத்தியாருக்குச் சரியான பயம். நல்ல கறுப்பு உயரம், தடிச்ச உடம்பு, சின்ன வண்டி, பாக்குக் குடும்பி, தோளில் சால்வை, சிலநேரம் நஸனல். ஏறு நெற்றி. கம்பிக் கண்ணாடி, காதில் மாட்டி, நெற்றியில் ஏறிநிற்கும். வாசிக்க கண்ணுக்கு நேரே இறக்கி விடுவார். உடம்பு வேர்க்கும். பார்த்தால் எண்ணெய் ஒழுகும். நல்லெண்ணெய்க் கறுவல்.

வகுப்பில் இடையிடை ஆண்பிள்ளைகள் பக்கம் வருவார். பின்னுக்குப் பிடித்துப் பார்ப்பார். எல்லாரும் கோவணம் கட்டி இருக்க வேணும். திரணையாக

வைத்திருப்போம். அவருக்கு திருப்தியாக இருக்கும். இல்லாது விட்டால் உறைப்பாக அடிவிழும். கட்ட மறந்தால் சீலைத்துண்டு எடுத்து, அரைநாண் கொடியில் கட்டி இருப்போம். பிடித்துப் பார்த்து ஏமாந்து போவார். நாங்கள் தப்பி விடுவோம்.

றோட்டோரம் வகுப்பு. காலையில் றோட்டை... றோட்டைப் பார்ப்பார். மீன்காரியைக் கண்டு விடுவார். "எனேய்!... நில் வாறன்" ஓடிப்போவார். விலைபேசி வாங்கி வீட்டுக்கு அனுப்புவார். சில நேரம் கொண்டு போவார். வீடு பக்கத்தில்.

தமிழ் நெடுங்கணக்குப் படிப்பிக்கிறதில் வலுகெட்டிக் காரன். கரும்பலகை ஆணியில் நெடுங்கணக்கு படத்தைத் தொங்கவிடுவார். கையில் ஒரு கம்பு பிடித்து நாங்கள் தொட்டுத் தொட்டுச் சொல்ல வேணும். நாங்கள் சொல்லிக் கொண்டிருக்க அவர் தூங்கி விழுவார். திடீரெனக் கண்விழித்து தலையில் ஒரு குட்டு.

வகுப்பறை நிலத்துக்கு அப்ப சிமெந்து போடவில்லை. வட்டமாக மணலில் இருப்போம். கையில் பிடித்து விரலில் தோல் கிழிய மணலில் எழுதுவார்.

அவருக்கு அலுப்புத் தட்டினால் பாட்டு வகுப்புத் துடங்கி விடும். அவருக்கு வாலாயமான ஒரு மாணவி இருந்தாள். அவளைக் கூப்பிட்டு விடுவார். அவள் பாடத்துடங்குவாள். இடம் வலமாகத் தலையை ஆட்டி, ஆட்டி முன்னும் பின்னும் கைகளை வீசிப்பாடுவாள். "சாய்ஞ்சாடம்மா... சாய்ஞ்சாடு... சாயிலிமயிலே சாய்ஞ்சாடு... சாய்ஞ்சாடம்மா..." சாவி கொடுத்த பொம்மை போல இருப்பாள். சொற்ப நேரத்தில் அவர் ஆடத்துடங்கி விடுவார். இடையில் கண்விழித்து "படிங்கோடா" என்பார். என்ன படிக்கச் சொல்கிறார்? பாடமா? இந்தப் பாட்டா? நாங்கள் விழிப்போம். மத்தியான வெயில் வெக்கை அவரைக் கண்விழிக்க விடாது. அவர் தூங்கி ஆடுவார். நாங்கள் அவளுக்குப் பிற்பாட்டுப் பாடுவோம். ஒரே சத்தமாக இருக்கும்.

தடிஎடுத்து முன்வரிசைக்காரருக்கு இரண்டு விளாசு விளாசுவார். எல்லோரும் கப்சிப் அடங்கிவிடுவோம். அவள் பாடுவாள்.

"சாய்ஞ்சாடம்மா... சாய்ஞ்..."

தமிழ் நெடுங்கணக்கு அப்பவே எனக்கு கரையல் பாடம். ஒரு அட்சரம் பிசகாமல் பாடம் பண்ணுவித்தார். சில எழுத்துக்கள் பாடம் பண்ணினதோடு சரி. பிறகு பயன்படவே இல்லை. ஏன் பாடம் பண்ணினேன் தெரியாது! உயிர் எழுத்துப் பன்னிரண்டு என்றார். ஒப்புவிக்கிறபோது ஆய்தத்தையும் சேர்த்து பதின்மூன்று சொல்ல வைத்தார். ஏனென்றுதான் விளங்கவில்லை. அவர் பழைய தலைமுறை. அவர் அப்படித்தான். இப்பவும் அவரில் நான் நல்ல பயபக்தி.

மத்தியானம் வகுப்பு விட்டுப்போகிற போதும் அந்தப்பயம் என்னோடு கூட வந்தது.

எனக்குப் பக்கத்து வீட்டுக்காரன் சின்ன முதலில் இருந்து பெரிய முதலுக்குப் போனான். என்னைக் கூட்டிக் கொண்டு போகிறதுக்காக மூன்று வருஷம் அங்கே இருந்து விட்டான். மத்தியானம் அவனோடு கூடிப்போவேன். கொஞ்சத்தூரம் போனால் பெரிய ஒரு வெட்டைவெளி. அவன் நடக்க மாட்டான். டுர் டுர் என்று கார் ஓடித்திரிவான். வாயாலே தும்பறக்கும். அவன் நாலுமுழ வேட்டி கட்டி இருப்பான். களிசான் போட்டது நான் பார்க்கவில்லை. வெட்டை துடங்க வேட்டியை உரிவான். தோளில் போடுவான். கோவணத்தோடு டுர் டுர்... என்று கார் புறப்பட்டு விடும். நான் அழுது கொண்டு ஓடுவேன். வேறு ஆரும் வந்தால் கூட்டிக்கொண்டு போவார்கள். போய் அம்மாவுக்குச் சிணுங்குவேன். அந்த ஒரு வருஷமும் எனக்கு ஒரே சிணுக்கந்தான்.

நான் அழுதால் ஆத்தைக்கு மனம் பொறுக்காது. ஆத்தை நல்ல வாரப்பாடு. ஆத்தைக்கு ஐயா கடைசித்தம்பி. எங்களுக்கு மாமி, பாட்டி மாதிரி. நாங்கள் ஆத்தை என்று கூப்பிடுவோம். பேரப்பிள்ளைகள் இல்லாத வீடு. ஆத்தைக்கு நாங்கள் பேரப்பிள்ளைகள் போல. ஆத்தை பொல்லாத ராங்கிக்காரி. எல்லாரும் பயம். எங்களுக்கு மேலே ஆரும் தொட்டால்



2

போதும். வீடு தேடிப்போய் விடுவா, சண்டைக்கு. ஆத்தையின் எண்ணத்தில் நாங்கள் ராசகுமாரர்கள்.

ஆத்தை நல்ல துப்பரவு, தினமும் குளிப்பா. தலைக்கு எண்ணெய் வைப்பா. அடிக்கடி சுடுதண்ணி வைத்துக் குளிப்பா. எந்த நேரமும் நெற்றியில் திருநீறு. விளக்குமாறு வைத்து எல்லா இடமும் கூட்டுவா. வீட்டுக்கு வெளியிலே எங்களுடைய கிணறு, பொதுக்கிணறு மாதிரி. கிணற்றடி கூட்டுவா. ஆத்தை நிற்கிறபோது ஒருவரும் தண்ணீருக்கு வருவதில்லை. "குடத்தை அங்கேவை. இஞ்சைவை. துப்பாதே!" ஏதாவது சொல்லுவா, ஏன் வீண்சோலி என்று விலகிடுவார்கள். ஆத்தைக்கு சீனியப்பம், வாழைப்பழம், என்றால் நல்ல விருப்பம். சீனியப்பம், பணிஸ், காலைச்சாப்பாடு சீனியப்பந்தான். வெள்ளையாக இருக்கும். சீனியப்பக்காரன் காலையில் வருவார். தேயிலைபெட்டிக்கு கூம்பு போல மூடிபோட்டு தலையில் சுமந்து வருவார். கோயிலில் சூரன் வருகிறது போல இருக்கும். சீனியப்பக்காரர் வருகிறார் என்றால் நான் அம்புலோதிப் படுவேன். ஆத்தை உடனே வாங்கித்தருவா. பள்ளிக்கூடம் வெளிக்கிட்டால் ஆத்தையிட்டைக் காசு கேட்போம். ஐந்துசதம் போதும். பல்லி முட்டாசி, கறுவாய்ப்பட்டை, வெள்ளைச் சக்கரை, றப்பர்முட்டாசி எல்லாம் வாங்கலாம். பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் தும்புக்கட்டையின் கடை. தும்புக்கட்டைக்கு பெரியமீசை. சின்னக்குடும்பி. லொக்கு லொக்கென்று இருமுவார்.

அன்றைக்கு ஆத்தை முற்றத்து நிழலில் இருந்தா. முந்தானைச் சீலையாலே போர்த்திருந்தா. ஒரு கிழமைக்கு மேலே காய்ச்சல், இப்பதான் விட்டது. பள்ளிக்குப் போகிற நேரம், அண்ணா கேட்டார். ஆத்தையிடம் காசு இல்லைப்போல "பிறகு வா தாரேன்" என்றா. "இல்லை இப்பதா" வில்லங்கமாக நிற்கிறார். "கொத்தான் வரட்டுக்கும் வாங்கித்தாரன்." தவணை சொல்லக் கோபம் வருகிறது. அடிக்க ஓங்கிவிட்டு நடக்கிறார். நான் இழுப்படுகிறேன்.

பள்ளிவிட்டு வருகிறோம். ஆத்தைக்குச் சுகமில்லை. படுத்திருக்கிறா. தலை கொதிக்கிறது என்று எண்ணைய் வைத்தா. பிறகு காய்ச்சல். மகன் வந்தார். கடதாசி எடுத்து

பேசிப் பேசித் துடைக்கிறார். எண்ணெய் சுழன்றால்தானே! கடதாசி எண்ணெய் குடிக்கிறது. மாலைக்குள்ளே வயிற்றாலே போகத் துடங்கியது. பரியாரிமார் வந்து பார்த்தார்கள். மருந்துக்குக் கட்டுப் படுகிறதாக இல்லை. சொந்தக்காரர் அறிந்து வந்தார்கள். அயலில் உள்ளவர்கள் வந்தார்கள். யார் வந்தும் என்ன? போய்க் கொண்டிருக்கிறது.

நான் படுத்து விட்டேன். விடியப்புறம் எல்லாரும் குழறி அழுகிறார்கள். திடுக்கிட்டுப்போனேன். கண்விழிச்சிட்டேன். ஆத்தை செத்துப்போனா. எனக்கு அழுகை வருகிறது. அம்மாவிடம் போய் அழுகிறேன். பந்தல் போட்டார்கள். வெள்ளை கட்டுவித்தார்கள். ஆட்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைய வந்துவிட்டார்கள். பெண்டுகள் ஒப்பாரி சொல்லி அழுதார்கள். கொஞ்சம் செல்ல, உறுமி மேளம் வந்தது. பந்தலுக்குள்ளே வட்டமாக நின்று சுற்றிச்சுற்றி ஆடினார்கள். ஆத்தை செத்தது நான் மறந்து போனேன். அந்த மேளம் நான் ஒரு இடமும் பார்க்கவில்லை.

தோளில் தூங்குகிற மேளத்தில் வளைந்த கம்பாலே உரோஞ்ச, உரோஞ்ச, அது உறுமுகிறது. சின்னக் குழல் பீப்பீ... என்று ஊதுகிறது. மத்தளம், தாளம் எல்லாம் ஒரே சத்தம். எல்லாரும் ஆடுகிறார்கள். கள்ளுக் குடித்திருக்க வேணும், மணக்கிறது. நல்லபுளுகமாக ஆடுகிறார்கள். ஆத்தை செத்தது புளுகம்போல. எனக்குக் கோபம் வருகிறது. பல்லைக் கடித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

தேர்போல ஒரு பாடை. அதுக்குள்ளே ஒரு கதிரை. கதிரையிலே சமாதிருத்தி ஆத்தையைக் கொண்டுப் போனார்கள். அவர்கள் நடக்க நடக்க ஆத்தையின் தலை ஆடிக்கொண்டிருந்தது. பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. உறுமிமேளக் காரர் ஆடிக்கொண்டு முன்னுக்குப் போனார்கள். எனக்குப் பொறுக்கவில்லை. "ஆத்தை... ... ஆத்தை... ..." என்று அழுதேன். பிறகு ஒரு காலமும் நான் ஆத்தையையும் காணவில்லை. உறுமிமேளத்தையும் காணவில்லை.

ஆத்தையை மறந்து போனார்கள். உறுமிமேளம் பிடித்ததும் சமாதிருத்திக் கொண்டுபோனதும்தான் கதைத்துக்

கொண்டிருந்தார்கள். நான் ஆத்தையை மறக்கவில்லை. ஆத்தை என்னிலே வலு வாரப்பாடு.

மூன்றாம் வகுப்புக்கு வந்துவிட்டேன். நான் பொம்மை இல்லை. சின்னச் சின்னக் குழப்படிகள். வயதுக்குரியது செய்வேன். ஒரு நாள் வாத்தியார் கனக்க வேலைதந்தார். "நான் திரும்பிவர இவ்வளவும் செய்து முடித்திருக்க வேணும்" கட்டளை போட்டுக் போனார் கனநேரம் அவரைக் காணவில்லை. நாங்கள் சும்மாயா இருப்போம். குழப்படி துடங்கிவிட்டோம். அவர் திரும்பி வந்தார் பின்பக்கத்தால். எதிர்பார்த்ததுபோல வகுப்பு அமைதியாக இல்லை. சத்தம் போட்டு கதைத்தோம். நான் எழுந்தேன். முன்வரிசைக்காரன் புத்தகத்தைப் பிடித்து இழுத்தேன் பளார் என்று ஓர் அடி பிருஷ்டத்தில் விழுந்தது. நான் துடித்துப்போனேன். இரத்தம் பீறிடுகிறது. மண்நிறக்களிசான். நனைந்து வழிகிறது. ஆசிரியர் திகைத்துப் போனார். அவர் எதிர்பார்க்கவில்லை. ஒரு அடிக்கு இவ்வளவு இரத்தமா? ஆனால் அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தோளில் பிடித்து ஆதரவாக கேட்கிறார். "இரத்தம் ஏன் வருகிறது?" "கட்டு ஸேர்" என்கிறேன்." "எட மொக்கா! எனக்கேன் சொல்லவில்லை" கேட்கிறார். "ஆசிரியரின். சாதுரியம் அப்ப எனக்கு விளங்கவில்லை" "சொல்லிப்போட்டேன். அடிக்கயில்லை?" என்று நான் கேட்கவில்லை. ஆசிரியரிடம் கேட்கமாட்டேன். வீட்டுக்குப் போனேன். அம்மா பதறிப்போனா. ஐயா பார்த்தார். முகம் சுண்டிப்போச்சு. ஆனால் ஆசிரியர் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவரிடம் கேட்கவுமில்லை. ஆசிரியரை அப்படி மதித்தார்கள்!

சின்னனிலே நான் சினிமாவுக்குப் போனேன். அது நல்ல முசுபாத்தி. ஊரில் ஒரு பல சரக்குக்கடை. ஊருக்கெல்லாம் அது ஒன்றுதான். கடைகாரன் ஒரு வண்டில் வைத்திருந்தார். ஒன்றைத் திருக்கல் வண்டில், கூடாரம் போட்டது. பக்கத்துப்பட்டினத்தில் கடைச்சாமான் வாங்கி வண்டியில் ஏற்றிக்கொண்டு வருவார். அவர் எங்களுடைய ஐயா வழியில் சொந்தம். ஐயாவின் மருமகன். அத்தானோடு நல்ல சிநேகிதம். அப்ப வாகன வசதிகள் இல்லாத காலம், எல்லாரும் நடைதான்.

இரண்டுபேரும் கிட்டயுள்ள பட்டினத்துக்குப் படம் பார்க்கப் போவார்கள்.

திருக்கல் வண்டியைப் பூட்டுவார்கள். நான், அண்ணா, கடைக்காரன் மகன் மூன்று பேரையும் ஏற்றிவிடுவார்கள். அவர்கள் முன்னுக்கு நடப்பார்கள். மாடு அசைந்து அசைந்து மெல்லப் போகும். மாறி மாறி நாங்கள் நாணயம் பிடிப்போம். வீதியில் வாகனம் அதிகம் வராது. வந்தால் அவர்களில் ஒருவர் நுகத்தில் பிடித்து மாட்டை அணைத்துக்கொண்டு வருவார். பின்னர் விட்டுவிடுவார். நாங்கள் ஓட்டிக்கொண்டு போவோம். வண்டில் விடுகிறதுதான் எங்களுக்கு நல்ல சந்தோஷம். தியேட்டர் வளவுக்குள்ளே மாட்டை அவிழ்த்துக் கட்டுவார்கள். அங்கே வண்டில்கள் வேறு வந்திருக்கும்.

படம் முடிந்த பிறகு வண்டியைப் பூட்டுவார்கள். எங்களுக்கு வடை வாங்கித்தருவார்கள். சுருட்டு வாங்கிப் பற்றிக் கொள்ளுவார்கள். கடைக்காரன் முன் ஆசனத்தில் இருந்து நாணயம் பிடிப்பார். அத்தான் பின்னே இருப்பார். நாங்கள் நடுவில். இரண்டு பேரும் படம் பற்றிக் கதைப்பார்கள். எங்களுக்கொன்றும் விளங்காது. நாங்கள் தூங்கி விடுவோம். போன சந்தோஷம் திரும்ப இருக்காது. வண்டில் சவாரி நல்ல குசி. மனதில் நிற்கிறது. படத்தில் ஒரு பெண் சுளகில் புடைத்தாள். வேறு ஒருடத்தில் புறா ஒருத்தி பறக்கவிட்டாள். அந்தக்காட்சிகளும் வண்டில் சவாரியுந்தான் பிஞ்சு நெஞ்சில் மிஞ்சிக்கிடக்கிறது. வயதுக்கேற்ற அனுபவந்தான் வாழ்க்கையில் மிஞ்சுமோ!

# 4

முதலில் சொல்லிப் போட்டேன். பெண் சகோதரப் பொருத்தம் இல்லாதவன் நான். தம்பி அப்படி அல்ல. அவனுக்குப் பிறகு மூன்று தங்கைகள். பெண் குழந்தை இல்லாத குறை தீர்ந்து போச்சு. பெண் சந்ததிப் பெருக்கத்துக்கு மூன்றுபேர். மொத்தம் நாங்கள் ஆறுபேர். எங்களை வளர்க்க அம்மா பட்டபாடு! இருந்த ஆத்தையும் செத்துப்போனா. அம்மா ஓராள்தான். பெத்தாச்சி பிள்ளைப் பெத்துப் பாக்க வந்திருப்பா. முப்பத்தொன்றுக்கு முழுகி தொட்டிலில் போட்டால் வெளிக்கிட்டுவா. ஆசை குடும்பத்தோடு இருந்தார். பெத்தாச்சியும் அங்கேதான். பிறகு எப்பவாவது எட்டிலே பத்திலே வருவா. வந்தால் அம்மா விடமாட்டா, பெத்தாச்சிக்குத் தரிக்காது. "அவன் பிள்ளை குட்டி இல்லாதவன். அவன்ரை பாடுபறப்பு என்னவோ!" என்று இரண்டொரு நாளிலே வெளிக்கிட்டிருவா. மருமகனின் உழைப்பில் சாப்பிட விருப்பமில்லாதவ.

அம்மாவுக்குப் பெரிய சுமை. எங்களைப் பார்க்கிறது; மேய்க்கிறது. பசி கிடக்க விடமாட்டா. எங்களுக்குப் பலகாரம் தீத்தவேணும், சோறு தீத்தவேணும், தங்கச்சிக்கு பால் கொடுக்க வேணும். பம்பரமாகச் சுழலுவா. அப்ப பால்மா வராத காலம். அம்மாதான் பால் கொடுக்க வேணும். பால் இல்லை என்றால் பசுப்பால் பருக்கிறதில்லை. பசுப்பால் விக்கினமாம். பொல்லாத வாய்வு. கல்லக்காரம் கரைத்துப் பருக்கலாம். பனம் பாணியில் கல்லக்காரம் விளையும். அது பனங்கற்கண்டு. கல்லக்காரம்

விக்கினமில்லை. ஆனால் மூத்திரந்தான் போகும். தாய்ப்பால் நல்லது. கோயிலுக்குக் கொண்டுபோய் 'பால் பருக்கும்' வரை அம்மா கொடுக்கிற பால் தான். கோயிலில் சோறு தீத்துகிறதுக்கு "பால் பருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். அப்படி ஏன் சொல்லுகிறார்களோ தெரியாது!

தாய்ப்பால் முக்கியம். தாய்ப்பாலை முலைப்பால் என்பார்கள். முலைப்பால் மருந்துக்கு அனுமானம். தமிழ்ப்பரியாரிமார் முலைப்பாலில் உரைத்துக் கொடுக்க குளிகை கொடுப்பார்கள். இஞ்சி, தேன், முலைப்பால் எப்பவும் அனுமானமாக இருக்கும். முலைப்பால் கறந்து அப்ப மருந்து செய்கிறவர்களாம். முலைப்பால் கறக்கிறதுக்கு ஒரு கதை சொல்லுவார்கள். யாழ்ப்பாண நகரத்துக்குக் கிட்ட உள்ள ஒரு ஊர். அந்த நாளையில் பெண்டுகள் சந்தைக்குள்ளே மீன் விற்றுக் கொண்டு இருப்பார்களாம். மருந்து காய்ச்ச முலைப்பால் தேவையென்று போனால் ஒரு முலையைத் தூக்கிக் கொடுத்துவிட்டு தங்கடைபாட்டில் வியாபாரம் செய்து கொண்டிருப்பார்களாம். தேவையான பாலைக் கறந்து கொண்டு போகலாமாம். கதை உண்மையோ பொய்யோ! ஆனால் பால் அப்படிப் பெருகும். முலைப்பாலின் தேவையும் அப்படித்தான்!

அம்மாவும் பால்கறந்து கொடுத்தவ. சொன்னால் நம்பமாட்டார்கள். நான் கண்டிருக்கிறேன். ஆனால் மீன் சந்தையில் பால் கறந்து கொடுத்தது போல அல்ல. அப்ப தங்கச்சி பிறந்திருந்தவள். காலையில் "அம்மா" என்று குரல் கேட்கும். கம்மின குரல், பாவமாக இருக்கும். படலையைத் திறந்து உள்ளுக்கு வந்து, அந்தக் கிழவி நிற்கும். நல்ல கருத்த கட்டைக்கிழவி, ஊத்தைச் சீலை. சட்டை இல்லாமல் மாறாடி போட்டிருப்பா. செம்பட்டை மயிரில் சிலுப்பின கொண்டை மருந்துக்கையில் மாதிரி கொஞ்சம் பெரிதாக நல்ல வளித்த சிரட்டையை ஒரு கை விரல்களை விரித்து தாங்கிப் பிடித்திருப்பா. ஊரின் ஒரு மூலையில் அவவின் வீடு. பெற்ற வீட்டுக்குள்ளே மகள் செத்துப்போனா. பேரக் குழந்தைக்குப் பால் வேணும். பெற்றிருக்கிற அம்மாமார் வீடுகளுக்கு வருவா. பாவம் என்று கொஞ்சம் கொஞ்சம் கறந்து கொடுக்க,

கொண்டுபோய் பருக்குவா. முதல் குரலுக்கே பதில் குரல் கொடுக்க வேணும். இல்லையென்றால் "அம்மா... அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே இருப்பா.

காத்திருந்தது போல முதல் குரலுக்கே அம்மா போய் விடுவா. கையில் வேலையாக இருந்தால் 'வாறன்' என்று சொல்லுவா. சுணக்கமாட்டா. சிரட்டையை வாங்கி பால் கறந்து கொடுத்துவிடுவா. எப்பவாவது "பிள்ளை குடிச்சிட்டுது" என்று சொல்லுவா. அப்படிச் சொல்லுகிறது அம்மாவுக்குக் கவலையாக இருக்கும். "குழந்தை பாவம்" என்று சொல்லுவா. "அம்மா பசிக்குது" கிழவி சிலநேரம் கேட்பா. காலைப் பலகாரம் தேத்தண்ணி அம்மா கொடுக்கப்போறா என்று அப்ப நான் நினைப்பேன். அரிசி, ஒடியல், சிலநேரம் காசுதான் கொடுப்பா. ஏனென்று கேட்டால், கிழவி நாங்கள் கொடுத்தால் தின்னாவாம். பெரிய சாதியாம், 'அப்ப பால்?' அம்மாவுக்கு ஒன்றும் சொல்லத்தெரியாது, என்னை ஒரு மாதிரிப் பாப்பா. 'இதென்னடா...!' இந்தக் கிழவி பெரிய சாதி என்றால்...? நான் அப்பவே யோசிப்பேன்.

அம்மா எங்களுக்கு பால் தந்தவ, தங்கச்சிக்கு பால் கொடுக்கிறவ, தாய் இல்லாத பிள்ளைக்கும் பால் கறந்து கொடுக்கிறா. 'ஊரார் பிள்ளை தலை தடவ, தன் பிள்ளை தானே வளரும்' என்ற எண்ணம் போல. ஆனால் அம்மா படுகிறபாடு! விடியுது விடியுதென்ன வெள்ளாப்பிலே எழுப்பி விடுவா. எங்களுக்கு மூன்று நேரமும் தீன் தேடவேணும். குளிக்க வார்க்க வேணும். பள்ளிக் கூடத்துக்கு வெளிக்கிடுத்த வேணும். சாப்பாடு தீர்த்த வேணும், வீடுவாசல் கூட்ட வேணும். ஐயாவின் காரியங்கள் பார்க்கவேணும். அப்பப்பா! அந்த இரண்டு கைகளாலேயும் எப்டித்தான் செய்து முடிக்கிறாவோ? இரவு எல்லாரும் படுத்தாப்போலதான் வந்து படுப்பா. சாமமாகும், அம்மா பாவம்!

அஞ்சுநாள் மாதத்திலே அம்மாவுக்கு லீவு. அந்த அஞ்சு நாளும் அம்மா பெரிய பாவம்! அம்மாவுக்கென்று ஒதுக்கின இடத்தில், கரிக்கோடு போட்டிட்டு அம்மா இருப்பா. கோடு தாண்டி நாங்கள் போகக்கூடாது. ஐயா ஏசுவார், அம்மாவுக்கு அந்தரமாக இருக்கும். வேலை செய்யாமல் குந்திக்

கொண்டிருக்கிறது. அம்மாவுக்குப் பனை ஓலைப் பாய் இழைக்கத் தெரியும். இழைக்கத்தான் நேரமில்லை. கரிக்கோடு போட்டிருந்தால் பாய் இழைக்கத் துடங்கி விடுவா.

ஐயா தொழில் முடிய வந்து மத்தியானம் சோறு, கறி காய்ச்சுவார். ஐயாவுக்கு ருசியாக கறிகாய்ச்சத் தெரியாது. தூள் போட்ட கொடுகொடுத்த தண்ணிக்கறி. அம்மா அம்மியில் அரைத்து குளம்பு வைத்துத் தருவா. அதென்ன கறி! இப்ப உள்ள பெண்களுக்கு அப்படிக் கறிகாய்ச்சத் தெரியாது. உயிர் மீன் கடற்கரையில் வாங்கி ஐயா அனுப்புவார். மீன் சட்டிக்குள்ளே போட்டு தண்ணீர் விட்டால் துள்ளிக்குதிக்கும். விளை மீன் நல்லருசி. அம்மாவின் விளைமீன் குளம்பு என்றால் நான் ஒரு பிடிபிடிப்பேன்.

ஐயா சோறு காய்ச்சி அம்மாவுக்குச் சோறு கொடுக்கிற ஏதனம் எது தெரியுமா? அது பெரிய புதினம். எல்லாரும் பானடியில் தான் அப்ப சாப்பிடுவார்கள். பெரியாக்களுக்குச் சட்டி, கொட்டியாரம் சட்டி நல்ல வடிவு. மினு மினென்று. வெள்ளிக்கிழமை, விரத நாள்களிலே தீய சட்டியில் அம்மா சமைப்பா. சுத்தமாக மெத்தக் கவனமாக வைத்திருப்பா. அதெல்லாம் கொட்டியாரம் சட்டிதான். பானடி உலமுடி அளவு. அப்ப கோப்பை இல்லை. ஆரும் வந்தால் சாப்பாடு கொடுக்கிறது வட்டில். அது வெங்கலம். தம்பி தாளம் போட்டுத் திரிவான். பிறகு தகரக் கோப்பை மாக்கோப்பை வந்துவிட்டது. அது நல்ல வசதி. பானடி மாதிரி உடையாது.

ஐயா சோறு காய்ச்சி, அம்மாவுக்குச் சாப்பிடுகிற கோப்பையில் போட்டுக் கொடுக்கிறதில்லை. முதல் எங்களுக்குத் தருவார். பிறகு பக்கத்து வடலிக்குப் போய் ஒரு இளமோலை வெட்டி வந்து, அளவாக வெட்டி எடுப்பார். அதை அடுப்பு வெக்கையில் லேசாக வாட்டி எடுப்பார். வாட்டி எடுத்தால் தட்டுவம் கிழியாதாம். தட்டுவம்கோலி அதில் சோறுபோட்டு பிறம்பான பாத்திரத்தில் தண்ணீரும் கொடுப்பார். அம்மா சாப்பிட்டு முடிய இறப்பிலே செருகி வைப்பா. அஞ்சு நாளும் சாப்பாடு தட்டுவத்தில்தான். ஐயா வலு கவனமாக இருப்பார். "தூமை துடைச்சுப் போடும்" என்று

சொல்லுவார். அம்மா மறுக்கிறதில்லை. ஒத்துக் கொள்ளுவா. பிறகுதான் தெரியவந்தது. (செல்வத்தை, சுகத்தை, நன்மையைத் துடைச்சுக் கொண்டு போய் விடுமாம்.) ஆறாம் நாள் அம்மா தான் இருந்த இடம் மெழுகி, தலைக்கு அரைப்பு வைத்து முழுகுவா, அதுக்குப்பிறகு அம்மா பழையபடி இயந்திரந்தான்.

அம்மாவைப் பார்க்க பெரிய பாவமாக இருக்கும். ஆனால் அம்மா தின்னுகிற தட்டுவத்தில் தின்ன எனக்கு நல்ல விருப்பம். பச்சை வாழைத் தடல், பச்சை ஓலைச் சோறு நல்ல ருசி. ஆனால், அம்மாவின் தட்டுவத்தில் நான் சாப்பிட இயலாது. கேட்டால் அடிதான் விழும். தொடவும் விட மாட்டார்கள். தட்டுவம் கோலித்தரும்படி எப்படிக் கேட்கிறது? ஆனால் ஆசையாகத் தான் இருக்கும். எப்ப சாப்பிடுவேன்? என்று நினைத்துக் கொண்டிருப்பேன்.

பனையில் இருந்து பனங்காய்கள் விழத் துடங்கும். விழுகிறது காயல்ல; பழம், பனங்காய் என்றுதான் சொல்லுகிறது. பனங்காய்களைக் கொட்டைகளாகப் பிரித்துப் போட்டு பாத்தி போடுவார்கள். அனேகமாக ஆடி, ஆவணியிலேதான். எங்களுடைய வீட்டில் இரண்டு பெரிய பாத்தி போடுவார்கள். சில நேரம் மூன்று பாத்தி. அப்ப ஒரு பாத்திப் படையல் நடுக்கும். அதென்ன படையல்! ஒடியல், குரக்கன், தினை, சாமை... எல்லாப் புட்டும் அம்மா அவிப்பா. மீன் கறி, பொரியல், வறுவல்... செய்து பெரிய தட்டுவத்தில் போட்டு மாலைப்படுகிற நேரம் பாத்தியடியில் வைத்து படைப்பா. படையல் முடிய தட்டுவம் எனக்குத்தரவேணும் என்று நிற்பேன். யார் கேட்டாலும் விடமாட்டேன். தட்டுவம் எனக்குக் கிடைக்கும். நான் நல்ல புளுகத்தோடு தட்டுவத்தில் தின்பேன். கிழங்கு கிண்டுகிற நேரம் பிறகு ஒரு படையல். முந்தின மாதிரித்தான். அது மாசிமாதம். சிவராத்திரிக்கு முன் பின்னாக, அப்பவும் நான் தட்டுவம் எனக்குத்தான்.

தவப்பேய்க்கும் இப்படி ஒரு படையல். செத்துப் போனவர்கள் தவத்துக்குப் போவார்களாம். நடந்துதான் போவார்களாம். பசியோடு போனால் நடக்க இயலாது. நடைக்களைப்பு கிளைப்பு இல்லாமல் போகிறதுக்கு அந்தப் படையல், படைக்காமல் விட்டால் செத்தவை மண்ணைக்

கிள்ளிச் சாபம் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள் என்று பயம். கார்த்திகை மாதளவில் அந்தப் படையல் வைக்கிறது. அடுத்த நாள் மார்கழிப் பிறப்பிலே பிறிதொரு படையல், கெதியாக நடக்கமாட்டாத சொத்தி குருடுகளுக்குத்தான் அந்தப்படையல். தவப்பேய்க்கு செத்தவர்கள் தின்றது குடிச்சதெல்லாம் வைப்பினம். கள்ளு, சாராயம், சுருட்டு, பீடி, வெற்றிலை, பாக்கு... எல்லாம். வீட்டுக்குள்ளே வைக்கிற படையல் இது. தட்டுவம் கோலுகிறதில்லை. கோப்பையிலே வைக்கிறது. தட்டுவம் இல்லாதது எனக்கு ஏமாற்றமாக இருக்கும்.

எனக்கு வேறுமொரு ஏமாற்றம் வந்தது. ஆசை முருகனில் நல்ல பக்தி. ஒவ்வொரு வெள்ளியும் சன்னிதி முருகனிடம் போவார். ஒருக்கால் கதிர்காமம் போனார். திரும்பி வரும்போது மொட்டை அடிக்கவில்லை, கழுத்தில் உருத்திராக்கம், பட்டுப்போல திருநீறு, சுட்ட தேங்காய்ச் சொட்டுப்போல மாவடு, மாணிக்க கங்கைத் தீர்த்தம் எல்லாம் கொண்டுவந்து தந்தார். வீட்டில் அன்னதானம் கொடுத்தார். அப்படிக் கொடுக்க வேணுமாம். அது புண்ணியமாம்!

அப்ப எனக்கு பாவம்! புண்ணியம் ஒன்றும் தெரியாது. ஆசை வீட்டில் ஒரு புத்தகம் கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். அப்பதான் விளங்கிச்சுது. பாவம் செய்தவர்களை யமன் பிடித்துக் கொண்டு போவான். கழுமரத்தில் ஏற்றுவான். கொதிக்கிற எண்ணெய்க்குள்ளே தூக்கிப் போடுவான். எனக்குப் பயமாகவே இருந்தது. பாவம் செய்யக்கூடாதென்று நினைத்தேன்.

கதிர்காமப்பூசை எல்லாம் முடிந்ததென்று நினைக்க, இடும்பன் பூசை என்றார்கள். என்ன இடும்பன் பூசை. இடும்பன் ஒரு அரக்கன். முருகக் கடவுளுக்கு ஏவல் செய்யும் படைத் தலைவன், பொல்லாத செருக்கன், துன்பம் செய்கிறவன். கதிர்காம யாத்திரை போய் வந்தவர்களுக்கு அவனைத் துணையாக முருகன் அனுப்புவார். வந்தவனுக்குப் பூசைவைத்து, திருப்திப்படுத்தி அனுப்பி வைக்க வேணும்.

அரக்கனென்ன கத்தரி, வேண்டியா தின்னுவான்? இறைச்சி, மீன், புட்டுகள், கள்ளுச் சாராயம்... எல்லாம். பாத்திப்படையல், தவப் பேய்ப் படையல்... தோற்றுப் போய்விடும். புதுப்பாய் விரித்து அதிலே எல்லாம் படைக்கிறது. படையல் முடிய தட்டுவத்தில் கொஞ்சம் கொஞ்சம் எல்லாம் கிள்ளிப் போட்டார்கள். அப்ப எனக்கு நல்ல புளுகம் தட்டுவம் கிடைக்குமென்று.

வைக்கோலில் ஆள் செய்து, அதுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்தி இழுத்துக் கொண்டு, பந்தம் பிடித்துக் கொண்டு இளநீரும் எடுத்துக் கொண்டு , ஐயோ! அந்தத் தட்டுவத்தையும் தூக்கிக் கொண்டு போனார்கள். சந்தியில் வைத்து இடும்பனுக்குக் கழிச்சுப்போட்டு வந்தார்கள். அதுக்குப் பிறகுதான் சாப்பாடு. ஆசை கதிர்காம யாத்திரைக்குக் கிளம்பி அன்றைக்குத்தான் மச்ச மாமிசம் வாயிலே வைத்தார். அதுக்குத்தானோ இந்த பூசை!

நான் ஆசைப்பட்ட தட்டும் எனக்குக் கிடைக்கவில்லை. ஏமாற்றந்தான். ஆனால் யார் அந்த இடும்பன் என்ற அரக்கன்? என்றது பிறகு விளங்கிவிட்டது. கதிர்காமம் போய்வந்தால் செருக்கை அழிக்க வேணும். அதுதான் அரக்கன்; இடும்பன். அதுக்குத்தானே நெருப்பு வைத்துக் கொளுத்துகிறது.

# 6



எனக்கு முடி இறக்கினார்கள். நான் ஏதோ ஒரு நாட்டு அரசன். பகைவர்கள் படை எடுத்து வந்தார்கள். நாட்டைப்பிடித்தார்கள். முடி இறக்கினார்கள் நான் ஆட்சி அதிகாரங்களை இழந்துபோனேன் என யாரும் எண்ணக்கூடும். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. வேண்டுமானால் "நானும்கூட ராசாதானே நாட்டுமக்களிலே இதில் நாணமென்ன வெட்கமென்ன காசு கேட்பதிலே" என்று பாடிக்கொள்ளலாம். ராசாஆக இது ஜனநாயக நாடாம். வாக்காளப் பெருமக்கள்தானே ராசாக்கள். ஜனநாயகங்கள். ஜனத்தின் தலைவர்கள். அது யார்? ஜனந்தான். அந்த ஜனத்தில் ஒருவன் நான். நானும் ராசாதான். எல்லாம் தேர்தலில் வாக்களிக்கும் மட்டும் தேர்தல் முடிந்து போனால் நான் ராசாவாக இருக்க முடியாது. தேர்தல் முடிந்து, முடியிறக்கின சங்கதியல்ல நான் சொல்லப்போவது. ஆனால் எனக்கு முடியிறக்கப்பட்டது உண்மை. அது தலைமுடி.

முடியைத்தலையில் சூட்டுவார்கள். தலையில் சூட்டப்பெறுவதால், அது தலைமுடி என்றுதானே ஆகும்! கழுத்தில் அணிவது கழுத்துச் சங்கிலி கையில் அணிவது கைச்சங்கிலி என்பது போல என யாரும் கருதக்கூடும். நான் இங்கு சொல்ல வந்தது மயிர் பற்றி. தலைமயிர்பற்றி. மயிர் என்பது கெட்ட வார்த்தை என சிலபகுதிமக்கள் நினைக்கிறார்கள். அவர்களுக்கு அது தூக்ஷணம். அது பிழையென்று சொல்ல இயலாது. அது அவர்கள் மொழி வழக்கு. அவர்கள் தலைமயிரைத் தலைமுடி என்று சொல்கிறார்கள்.

தலைமுடி என்று சொல்வதிலும் ஓர் உண்மை பொதிந்து கிடக்கிறது. முடியப்பட்ட மயிர் முடியாயிற்று. அந்த முடியைப் பார்த்து அவன் சாதியைச் சொல்லலாம். தமிழனுக்கு உயிரிலும் மேலானது சாதி, இன்னொருமனிதனைச் சந்திக்கும்போது, முதல் அறிந்துகொள்ள விரும்புவது புதியவனின் சாதி. புதியவனை சாதிவரன்முறைக்கு அமைய நடத்தவேணும், தீண்டாமை பேணவேணும் சந்தித்ததும். அவன் சாதியைத் தலைமுடிசொல்லும். அப்படி மேலாண்மைக்காரர் பணித்து வைத்திருந்தார்கள். மயிரைக் கூட்டிக் கட்டி பின்குடுமி போடுகிறது. பின் குடுமியோடு முன்தலையை மழுங்க வழித்து பிறைபோல விடுகிறது. நடுத்தலை மயிரை குடில்போலவிட்டு, உச்சியில் சின்னக் குடுமிமுடிந்து ஓரங்களை சுற்றிவர வழித்து விடுவது.

இவைகள் உயர்சாதியார் என்பவர்களின் முடி அலங்காரம். சாதி அடையாளம் தலைமயிரை மேலே அள்ளி, சரிவாக தலையில் குடுமியைப் போட்டுக்கொள்ள வேணும் தாழ்த்தப்பட்டவர்கள். பெண்களே தலைமயிர் நீளமாக வளர்க்கிறார்கள். நீளமாக இல்லாதவர்கள் வைத்துக் கட்டுகிறார்கள். அதற்குப் பெயர் முடிமயிர் அவர்கள் மாத்திரமல்ல ஆண்களும்தான் வளர்த்தார்கள். பெண்கள் நீளநீளமாக தலைமயிரை வளர்த்து வைத்திருக்கிறார்கள். அது ஒரு தனி அழகு. பெண்கள் தலையில் இருப்பது முடி என்றோ மயிர் என்றொ அழைப்பதில்லை. அதுக்குப் பெயர் கூந்தல். தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் கூந்தல் மடித்து சுருட்டி பின்கொண்டை போடலாம். இப்போது அப்படி இல்லை. பெண்களின் கூந்தல் நீண்டு நீண்டு முழங்கால் தொட்டால் அழகு. பெண்கள் கூந்தல் பற்றி புலவர்கள் மாய்ந்து மாய்ந்து பாடி இருக்கிறார்கள். விரித்த கூந்தல் தோகை என்றார்கள். மழை மேகம் என்றார்கள். நீலப்பட்டாடை என்றார்கள். பின்னிய கூந்தல் கருநாகம் என்றார்கள். ஆண்களைக் கட்டும் கயிறு என்றார்கள் இப்படி கனக்க... கனக்க...

கவிஞர் ஒருவர் பெண்கள் பண்ணும் தலை அலங்காரங் களைப் பார்த்து பார்த்து ரசித்து வந்திருக்கிறார். இறுதியில் பார்த்து ரசித்ததைப் பாடியும் இருக்கிறார். சுளகு, முறுக்கு, சும்மாடு, இடியப்பத்தட்டு, துடைப்பம் என்றெல்லாம்

சொல்லித் தீர்த்திருக்கிறார். பெண்கள் கூந்தலைக் கத்தரித்தால் இவருக்கு எப்படி இருந்திருக்கும்? ஐயோ! என்று இருக்குமல்லவா! பொப்பாக கூந்தல் வெட்டின தலையைக் கண்டுவிட்டார். "கத்தரித்தாள் தலைக்கோலமிது" என ஏங்குகிறார். கூந்தலில் இன்னும் பலவகை அலங்காரங்கள் பண்ணுவார்கள் பெண்கள் கோடாலிக் கொண்டை. தூக்கணாங் குருவிக்கூட்டுக் கொண்டை. தேன்வதைக் கொண்டை, படையப்பா கொண்டை. இப்படிப்பலபல எல்லாம் கூந்தல் மான்மியம்.

இந்தக் கூந்தல் எழில் சினிமாக் கவிஞர்களைச் சும்மா விடுமா? அரசிளங்குமரி, அமராவதி மீது மையல் கொண்டு மயங்கிக் கிடந்தானல்லவா. கம்பன்பெற்றமைந்தன் அம்பிகாபதி? அமராவதியைக் கண்டு அம்பிகாபதி பாடுகின்றான். "தலையலங்காரம் புறப்பட்டதே!" என அவன் கண்களில் விழுந்தது அமராவதியா? அவள் அழகுவதனமா? இல்லை இல்லை அவள் தலை. அழகுபடுத்திய அவள் கூந்தல், தலையலங்காரம். அவளை அவள் தலையலங்காரத்திலேயே அவன் காணுகின்றான். தலையலங்காரமே தலையாய அலங்காரமாகத் தோன்றுகிறது.

பாஞ்சாலி கூந்தலை மறக்க முடியுமா! அது என்ன சாதாரண கூந்தலா? மகாபாரதப்போரை நடத்தி முடித்த கூந்தல் அது கற்றைக் குழலல்லவா! கண்ணில்லாதவன் பெற்ற புத்திரன் துச்சாதனன் பற்றிப்பிடித்து சபைநடுவே இழுத்துவந்த கூந்தல் துரியோதனன் உதிரம் நெய்யாகத் தடவி முடிக்கும் வரை விரித்த கூந்தல் சோகத்தின் வெளிப்பாடு அதனால்தான் தலைவிரிகோலம் என்கிறார்களோ! தலை கூந்தலைக் குறிக்கிறது. கோலம் தோற்றம் மாத்திரமா? அழகு எனவும் பொருள் கொள்ளலாம். மங்களகரமான வைபவம் திருமணம். திருமண வைபவங்களில் பெண்கள் இப்ப தலைவிரிக்கோலமாக நிற்கிறார்கள். மகிழ்வுக்கோலம், அழகுக்கோலம்.

ஆனானப்பட்ட முழுமுதற் கடவுள் பரமசிவன். அவரே கூந்தல் விவகாரத்தில் குழம்பி இருக்கிறார். குழப்பி அடித்திருக்கிறார். பெண்கள் தலையில் இருப்பது கூந்தல் என்று சொன்னேன். சிவபிரானும் பெண்கள் போல வளர்த்திருந்தார். ஆனாலும் அது முடிதான். அழகிய

கூந்தலாகிவிட முடியாது. சிவன் திரிசடைக்கடவுள் அவருக்கு முடி எல்லாம் சடைத்துப் போய்விட்டது. அது சடாமுடி அந்த முடியில் தங்கி இருக்க கங்கைக்கு பிறைச்சந்திரனுக்கு அபயம் அளித்திருக்கிறார். தலைமுடிக்கும் சிவனாருக்கும் அப்படி ஒருநெருக்கம்.

செண்பக பாண்டியன் மனதில் எழுந்த ஐயத்தைத் தீர்க்க சிவனைத் தவிர தகுந்தவர்கள் வேறுயார் இருக்கிறார்கள்? தருமிக்கு அருள்பாலிப்பதைச் சாட்டாகக் கொண்டு பாட்டாக எழுதிக் கொடுத்துவிட்டார். "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி"யை... சாட்சி ஆக்கினார். விருப்பு வெறுப்பின்றி உண்மையைச் சொல் என்றார். பாண்டியன் மனைவி கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் உண்டு என அவரே பாட்டெழுதிக் கொடுத்தார்.

வந்ததே வினை! நக்கீரன் பாண்டியன் அவையில் இருப்பது சிவனாருக்கு மறந்து போனது போலும்! அரச அவைத் தலைமைப்புலவன், எவருக்கும் கிறுங்காதவன். வித்துவச் செருக்குள்ளவன். சிவன் எழுதிய பாடலில் குற்றம் கண்டான். எந்தப் பெண்ணுக்கும் கூந்தலில் நறுமணம் இல்லை என்றான். சிவனார் விடுவாரா? தனது இடது பாகத்தில் வீற்றிருக்கும் உமையவள் கூந்தலிலுமா...? என ஒரு போடு போட்டார். நக்கீரன் வெலு வெலுத்துப் போவான் என்பது சிவனார் எதிர்பார்ப்பு. அவர் எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது. சிவனார் நெற்றிக் கண்ணைக் காட்டினார். அதிகாரவர்க்கத்தின் வடிவத்தை வெளிப்படுத்தினார். நக்கீரன் துவண்டுபோக வில்லை. "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே!" என்றான். சிவனாருக்குச் சினம் பொங்கியது. எடுத்துவிட்டார் இறுதி அஸ்திரம் அவன் சாதியைச் சொல்லி அடிக்கிறது. இழிவுபடுத்துகிறது.

"அங்கம் குலுங்க அரிவாளில்
நெய்தடவிபங்கப்படவிரண்டு கால்பரப்பி -
சங்கதனைகீர்கீர்என அறுக்கும் கீரனோ
என்கவியைபாரிற் பழுதென் பவன்"

சாதி சொல்லி இழிவுபடுத்த எண்ணுகின்றவனைத் திருப்பி அடித்த முதல் தீரன் நக்கீரன். அவன் நிலைகுலையாது

தனது சாதியைச் சொல்லியே சிவனாரின் முறைமையில் பேசுகிறான்.

“சங்கறுப்ப தென்குலமே தம்பிராற்
கேதுகுலம்பங்கமறச் சொன்னாற் பழுதாமே -
சங்கைஅரிந்துண்டு வாழ்வோம்
அரனாரைப்போலஇரந்துண்டு வாழ்வ தில்லை.”

இளக்காரமாகப் பேசிய சிவனுக்கு உழைத்துண்பதன் மகத்துவத்தையும் நக்கீரன் சொல்கிறார்.

சிவனைச் சாதிபேதம் பேசவைத்தது இந்தக் கூந்தல்
மங்கையர் கூந்தலுக்கு இத்தனை மகிமையா?

ஆத்திரக்கார கணவன் கையில் சிக்கும் அதை அறுக்கவும் செய்யும். அரிந்தெறியும் சிந்தனையை முதலில் தோற்றுவித்தும் பாஞ்சாலி கூந்தல்தான் கார்குழல் களைந்து என அவள் கூந்தலைக்களைய வேண்டுமெனப் பேசிக் கொண்டார்கள்.

பெண்கள் கூந்தல் பற்றி பாடிவைத்தார்கள் புலவர்கள். அவர்கள் ஆண்கள். பெண்கள் பாடி இருந்தால், சில சமயம் ஆண்கள் முடிபற்றிப் பாடி இருக்கக்கூடும். ஆண்கள் முடியுலும் அழகு கண்டிருக்கின்றார்கள். அதனால்தான் “குஞ்சி அழகும்...” எனச் சொல்லி இருக்கின்றார்கள். ஆண்கள் தலைமயிர் குஞ்சி. அது கத்தரித்து அழகு படுத்த வேண்டியது. முனிவர்கள், சாமிகளுக்கு அழகு தேவை இல்லைப்போலும், மயிர் வளர்க்கிறார்கள். அழகைக் குறைத்துக் கொள்ள. ஆனால் அதுவே ஒரு அழகு; எனக்கும் முடி அழகில் இல்லாமல் இல்லை.

எனக்கும் முடி இறக்கினார்களாம். அம்மா சொல்லியே எனக்குத் தெரியும். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனுக்கு நேர்த்தி. அங்கே கொண்டு போய் மழித்தார்கள். பளபளத்த பச்சை மண்டையில் சந்தனம் தடவிவிட்டார்கள். எனக்கது ஒன்றும் தெரியாது. நான் சின்னஞ்சிறிசு. பிறகு பள்ளிக்குப் போனேன். அங்கே ஒருவன் குடுமி கட்டி இருந்தான். பெரிய குடுமி. கதிர்காமக்கந்தனுக்கு நேர்த்தியாம். பெருமையாகச் சொல்லுவான். நாங்கள் குடுமியில் பிடிப்போம். பாம்... பாம்... என்று ஹோன் அடிப்போம். குலைத்துவிட்டு ஓடுவோம். குடும்பாஸ் எனக் கூப்பிடுவோம். இன்னொருவன்

பக்கத்துப் பள்ளியில் படித்தான். பெண்கள் போல ஒற்றைத் திரியலாகப் பின்னி இருப்பான். அதைப்பிடித்து மேலேதூக்கி நடுத்தலையில் நிட்டி வைத்து கிளிப் குத்தி இருப்பான். நாங்கள் பழிப்போம். பெண்டுகள் கந்தியா னென்று.

இந்தக் கரைச்சல்கள் எனக்கில்லை. சிறிசிலே முடி இறக்கிப் போட்டார்கள். எனக்கு வேறு பிரச்சினை. ஒவ்வொரு மாதமும் பிரச்சினை மாதம் ஒருக்கால் முடிஇறக்கிறக்க வேணும். யார் எங்களுக்கு முடி இறக்கிறது? ஆதிக்கசாதிக்கு குடிமக்கள் இருக்கிறார்கள். வீடு தேடிப்போய் குடிமை பார்ப்பார்கள் குடிமைத் தொண்டு செய்யாமல் இருக்க இயலாது விடமாட்டார்கள்.

ஐயா இறக்கிறவர். கள்ளுச் செய்யாத காரியம் என்ன இருக்கு? ஐயா நையிட்டாப் போதும் இரகசியமாக வந்து வெட்டிப் போட்டுப் போவார்கள். அவர்களை எப்பவும் எதிர்பார்க்க இயலாது. குடும்பத்துக்குள்ளே சிலர் வெட்டுவினம். அவர்களுக்கு வடிவாக வெட்டத்தெரியாது. தலையைச் சுற்றி பனையோலைச் சட்டத்தைக் கட்டிவிட்டு. கீழ்ப்பகுதியை வழிச்சமாதிரி இருக்கும். பார்ப்பவர்கள் பகிடி பண்ணுவார்கள். பள்ளிக்கூடம் போக இயலாது.

பெண்கள் கூந்தலை அவர்கள் தங்கள் கைகளினால் அழகுபடுத்திக் கொள்வார்கள். அல்லது வீட்டில் உள்ளவர்கள் அதைச் செய்துவிடுவார்கள்.

ஆண்களுக்குத்தான் இந்த அவலம். குஞ்சியை அழகுபடுத்த கத்தரித்து அழகுபடுத்தாது விட்டால் பரட்டைக் காடாகிப் போகும். இதெல்லாம் எங்களுக்குத்தான். ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவர்களுக்கு.

எங்களுக்கு மயிர் வெட்ட ஆளில்லை. வெட்டாமல் பள்ளிக்குப்போனால் வாத்தியார் அடிப்பார். நான் மத்தளமாவேன்.

நான் கொஞ்சம் வளர்ந்துவிட்டேன்.

அந்த நாளில் பட்டினங்களில் சலூன்கள் திறந்து விட்டார்கள். அதற்குள்ளும் நாங்கள் போகவியலாது. நெல்லியடிப் பட்டினத்தில் அப்படி இரண்டு சலூன் பிறகுதான் அறிந்தேன் எங்களுக்கும் ஒரு சலூன் இருப்பதாக. அங்கே

போகலாம். வீட்டில் அனுமதிக்கவேணுமே! இரண்டு மைல் தூரம் றோட்டில் கார் வரும் லொறி வரும் அம்மாவுக்கு மனமில்லை. போகவேண்டாம் என்றா.

அம்மாவுக்கு என்ன தெரியும்! பள்ளிக்கூடத்தில் அடி அவவுக்கே விழப்போகுது!

ஐயா சம்மதிச்சார். வழியும் சொன்னார். ஒழுங்கை வழியே போய் தோட்டங்களுக்கூடாகப் போகச் சொன்னார். எங்கள் சலூன் இருக்கும் இடமும் சொன்னார். மற்ற சலூன் இருக்கும் இடமும் சொன்னார். மற்றச் சலூனுக்குள்ளே போகக் கூடாதென்றார். போனால் அடிப்பார்கள் என்று எச்சரிச்சார்.

நான் முடி இறக்கப் புறப்பட்டேன். தம்பியும் உடன் வந்தான். விளையாடி விளையாடிப்போனோம். நெல்லியடிப் பட்டனம் போய்ச் சேர்ந்தோம். சலூன்கள் இரண்டு கண்டோம். வாசலில் திறந்து விட்டிருக்கும் முழுக்கதவு தள்ளிக் கொண்டு உள்ளேபோக வசதியாக வாசலில் இன்னொரு ஆடும் அரைக்கதவு அந்தக் கதவில் பச்சை வண்ணத்தில் தடித்த கண்ணாடி பளபளக்கும் சுத்தம். கமகமக்கும் சாம்பிராணி உள்ளே கிடுகிடு கத்தரிக்கோல் சத்தம்.

பெற்றவர்கள் பிள்ளைகளை எச்சரிப்பார்கள். தீயார் இடம் சேராதே என்பார்கள் போகக் கூடாதென ஐயா சொன்ன இடம் இது தவிர்த்து விட்டு சந்தியில் இருந்து கிழக்கு நோக்கி நடக்கின்றோம். நூறுயார் தூரத்தில் ஒரு சலூன். பார்த்ததும் புரிகிறது. இதுதான் எங்களுக்குரிய சலூன். தென்னோலைக் கிடுகினால் கூரை மேய்ந்த ஒரு கொட்டில். சுற்றிவர சின்னஞ்சிறிய மண்புட்டி. சுவர் என்று ஒன்றில்லை. சுற்றிவரச் சாக்குத் தட்டி அதே தட்டியில் சாக்குக்கதவு அது திறந்த படி இருந்தது.

உள்ளே காலடி வைக்கிறேன். பதுங்கிப் பதுங்கி. தம்பி பின்னால்.

கதவுக்கு நேரே நடுக்கப்போடு சேர்த்து ஒருமேசை. அதன்மேல் நீளமான கண்ணாடி அதற்கு முன்னுள்ள கதிரையில் ஒருவர் தலைகுனிந்து இருக்கின்றார். கத்தரிக்கோல், சீப்பு கைகளிலில் பிடித்து அவர் தலையில் ஒருவர் மயிர் வெட்டுகிறார்.

மயிர்வெட்டிக் கொண்டு நிற்பவர் கண்ணாடியில் எங்களைக் கவனித்து விடுகிறார். "வாருங்கோ" "வாங்கிலே இருங்கோ!" எனச் சொல்லிக் கொண்டு வேலையில் கவனமாக இருக்கிறார். பக்கங்களுக்கு ஒன்றாக இரண்டு வாங்குகள். அவைகள் நிரம்பி சிலர் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

மயிர் வெட்டிக் கொண்டு நிற்பவர் நல்ல கறுவல். நெடுவல் சின்னவண்டி வாயில் பீடி தொடர்ந்து பீடி வைத்துப் புகைத்துப்புகைத்து உதட்டில் ஒரு வெள்ளை ஓயாத பேச்சில் உதட்டு பீடி நர்த்தனம் ஆடும்.அதற்குச் சின்னத்தம்பிசலூன் என்று பெயர் சின்னத்தம்பி என்று சொன்னார். பின்னர் தெரியவந்தது அவர் மாயாண்டி என்று இந்தியாவில் இருந்து வந்தவர். ஊர் பரமக்குடி தான் மயிர் வெட்டுகிற சாதி இல்லை என்பார். இலங்கைக்கு வந்து பழகினது என்பார். சில சமயம் இந்தியாவில் பெரிய சாதிக்காரன்களுக்கு மயிர் வெட்டிகிற ஆள் என்பார்.

அவர் சொல்லாமல் சொல்வது எங்களுக்கு மயிர் வெட்டினாலும் தான் குறைந்த ஆளில்லை. பட்டினத்துக்கே மின்சாரம் வராத காலம். காலையில் ஆரம்பிப்பார் இரவு பெற்றொமாக்ஸ் கொளுத்தி அந்த வெளிச்சத்திலும் வேலை செய்வார். யாழ்ப்பாணத்தில் வடமராச்சிப்பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே சலூன் இரவு ஒன்பது மணி ஆகும். சலூன் மூட.

எல்லோரும் அங்கு போய்ச் சேர்ந்த ஒழுங்கில் வேலை செய்வேன் என்பார். ஆனால் சின்னப்பிள்ளைகளை ஏமாற்றி ஏமாற்றி நீண்ட நேரம் தாமதிக்க வைப்பார். மயிர் வெட்ட எங்களை அனுப்பும் போது தின்பண்டத்துக்கும் காசு தருவார்கள். நெல்லியடிச்சந்தியில் ஒரு தேநீர்க்கடை, ஆசைப்பிள்ளை கடை நல்ல மனிஷன் என்று சொல்லுவார்கள். நல்ல மனிஷனாக இருக்கலாம். அவர் கடைக்குள்ளே நாங்கள் போகலாமா?

அம்மா தந்த காசுக்கு அந்தக் கடையில் வடை வாங்குவோம் தின்றுதின்று குறுக்குப்பாதையில் வீடு வந்து சேர மதியம் திரும்பி விடும்.

சயிக்கிள் ஓட்டப்பழகும் வரை இதுதான் வழமை எனக்கு முடி இறக்க-மயிர்வெட்ட இப்படி ஒருபாடு.

# 6



தட்டுவம்போல பச்சை ஓலைப்பிளாவில் பதநீர் குடிக்கிறது ஒரு ருசி. "ஐஸ் வாட்டர்" மாதிரி குளு குளென்று... தேனாக இனிக்கும். பனையில் இருந்து எத்தனை பிரயோசனம்! தாலவிலாசம் என்ற நூல் நூற்றுக்கு மேலே சொல்லி இருக்கு. தோட்டத்துப் பயிருக்கு பனையோலைப் பட்டையில் தண்ணீர் அள்ளி வார்ப்பார்கள். துலா மிதித்து இறைக்கிறதுக்கும் பனையோலையில் இழைத்த பெரியபட்டைதான். ஈர்க்கை நெருக்கமாக அடுக்கி இணைத்து தலைக்குத் தொப்பி. எந்த மழைக்கும் ஒழுகாது. பனை ஓலையில் குடை செய்யாமல் விட்டுவிட்டார்கள். சிலர் காவோலையைத் தூக்கி தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு மழைக்குள் திரிவார்கள்.

எங்கள் வீட்டில் ஒரு தாழங்குடை இருந்தது. பெரியகுடை. மூன்று பேர் சேர்ந்து போகலாம். வட்டக்குடை. தாழை இலைகளை அடுக்கி மூங்கிலைப் பிளந்து இணைத்துக் கட்டினகுடை. தாழை இலையை மடல் என்றும் சொல்வார்கள். எல்லோரிடமும் அந்தக் குடை இருக்கவில்லை. இரண்டொருவர் தான் வைத்திருந்தார்கள். மழை இல்லாத காலத்தில் வீட்டுக்குள்ளே கட்டித் தூக்கி விடுவார்கள். நான் அதைப் பார்த்து எப்ப மழை வரப் போகுது... எப்ப மழை வரப் போகுது... என்று ஏங்கிக் கொண்டிருப்பேன். அதைப் பிடித்துக் கொண்டு திரிகிறதுக்கு நல்ல ஆசை. தூக்கிறது கொஞ்சம் கஷ்டம் தான். நான் தூக்கினால் "முறிக்கப் போறான்... முறிக்கப் போறான்..." என்று பெரியையா சத்தம் போடுவார். அவசர

தேவைக்கு மழை நேரம் சிலர் இரவல் கேட்பார்கள். ஐயா கொடுத்து விடுவார். பெரியையா சத்தம் போடுவார். ஐயாவை ஏசுவார். ஐயா வாய் திறக்க மாட்டார். தமையனுக்கு அப்படி ஒரு மதிப்பு, மரியாதை. பெரியையா குடும்பத்தில் மூத்தவர். அவர் போட்டதுதான் சட்டம்.

பெரியையா கொஞ்சம் வித்தியாசமான ஆள். ஐயாவுக்கு நேரே மூத்தவர் செத்துப் போனார். அவருக்கு மூத்தவர் பெரியையா. ஐயாவைச் சின்னப்பிள்ளையாக எப்பவும் நினைப்பார். ஐம்பது வயதிலும் ஐயா அவருக்கு ஐந்து வயதுப் பொடியன் மாதிரி. அவர் சொல்லுக்கு மறுப்புச் சொல்லுகிறதில்லை. நேருக்கு அவர் நிமிர்ந்து கதைப்பதுமில்லை. அப்படி ஒரு பண்பாடு.

பெரியையாவுக்கு யாருக்கும் தலைகுனியாத குணம். எவரையும் எடுத்தெறிந்த பேசுவார். ஆள் ஒரு நெருப்பன். ஐயா அப்படியல்ல. எல்லாரையும் மதித்து நடப்பார். இல்லாதவர்களுக்கு இரங்குவார். இட்டிடைஞ்சலக்கு உதவுவார் நல்லுறவைப் பேணுவார்.

புதுவருஷம் பிறக்கிறதுக்கு முன்னம் பெரியையா பஞ்சாங்கம் வாங்கிப் போடுவார். வாக்கிய பஞ்சாங்கம், காண்டாவனம், கெற்போட்டு, அமாவாசை பறுவம், அட்டமி நவமி எல்லாம் அறிந்து வைத்திருப்பார். திவஷம் கொடுக்கிறவை, நாள் நட்சத்திரம் பார்க்கிறவை, நாட் காரியம் செய்கிறவை எல்லாரும் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் பெரியையா பஞ்சாங்கம் பார்த்துச் சொல்வார். பஞ்சாங்கம் ஒரு கை ஏடு, வாழ்க்கையில் பல காரியங்களுக்கான திசைகாட்டி. ஒழுங்கு முறைப்படி வழிநடத்தும் சட்டப் புத்தகம்.

பெரியையா எல்லாரோடும் சங்காத்தம் வைத்துக் கொள்ள மாட்டார். அவரோடு அளவாகத் தான் நடப்பார்கள். அவரை "மலடன்" என்று சொல்வார்கள். அவருக்கு மகன் பிறந்து செத்தது பலருக்குத் தெரியாது. பெரியையா எங்களிலே நல்ல பட்சம். தம்பியிலே வலு வாரப்பாடு. எங்களுக்குச் சூரன் போர் பார்க்க நல்ல ஆசை. மாலைப்பட்ட பிறகுதான் சூரன் ஆட்டுவார்கள். பந்தங்களைக் கொளுத்திக் கொண்டு சூரனுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் ஓடுவார்கள். அந்த வெளிச்சத்தில் தான் சூரனைப் பார்க்க வேணும். பெரியையா எங்களைச்

சூரனுக்குக் கூட்டிக் கொண்டு போவார். நாங்கள் சின்னப் பிள்ளைகள். சனத்துக்குள்ளே எங்களுக்கு வடிவாக தெரியாது. சனம் மறைத்துப் போடும். பெரியையா என்னைத் தோளில் தூக்கி இருத்துவார். பிறகு தம்பியைத் தோளிலே சுமப்பார். கன நேரம் அவன் இருப்பான். நான் பாரம். அவனோடு அவர் நல்ல ஒட்டு. நல்ல பாந்தம். நாங்கள் சூரன் பார்க்கிறது, தோளில் இருந்து பெரியையாடிவைச் சூரன் ஆட்டுகிறது போல இருக்கும். இன்றும் சூரன் போர் பார்க்கப் போனால் பெரியையா தோளில் இருந்தது ஞாபகம் வரும்.

எங்களுக்குப் பாரம்பரியமான ஒரு கோயில். எங்களுடைய பாட்டனுடைய பாட்டன் கட்டினது. செட்டிதறை அண்ணன்மார் கோயில். அப்ப ஒவ்வொரு வருஷமும் வேள்வி நடக்கும். நாங்கள் போவோம். காலைப் பூசை நேரம் பெரியையா ஒரு பாட்டுப் பாடுவார். அந்தப் பாடலை வேறு எங்கேயும் கேட்கேலாது. "மடந்தையன் செய் தவத்தினாலே..." எனப் பாடலிலே வரும். மடந்தையன் கட்டின கோயில் வரலாறு சொல்லும் பாடல். சுவாமிக்குத் தீபம் காட்டுகிற நேரம் என்னை, தம்பியை மாறி மாறித் தூக்கி அந்தத் தீப ஒளியைக் காண்பிப்பார். அந்த ஒளி எங்கள் மீது விழ வேண்டும். அந்த ஒளியை நாங்கள் காண வேணும் என்று அவர் எண்ணினார்.

பெரியையா வசதியான ஆள். அவரிடம் பணம் இருந்தது. மூன்றடி உயரத்தில் ஒரு பெட்டகம் இருந்தது. அது காணாதென்று ஏழாலையில் ஒரு பெட்டகம் செய்வித்தார். ஏழாலைப் பெட்டகம் வலுகிறமாம். வடக்கன் மாட்டுச் சோடி பூட்டின வண்டிலில் அதை ஏற்றி வந்தார்கள். அதை இறக்க, தூக்கி வைக்கப் பட்ட பாடு ஐந்தடி உயரமிருக்கும். அதை எல்லாரும் திறக்கேலாது. இரும்புப் பெட்டி தோற்றுப் போய் விடும்.

பெரியையா வட்டிக்குக் கொடுக்கிறவர். நகை அடைவாக வாங்குவார். கடனைக் கொடுத்து நகையை மீட்க ஐயா இருக்கிற நேரம் பார்த்து வருவார்கள். பெரியையா வட்டி காசில் ஒரு சதம் கழித்து விட மாட்டார். வட்டியும் முதலும் கணக்குப் பார்த்து முழுவதும் வைக்கும் படி கறாராக நிப்பார். ஐயா வட்டியில் ஒரு பகுதியைக் கழித்துச் சொல்லி மிச்சத்தைக் கொடுத்துப்போட்டுப் போகச் சொல்லுவார். அப்ப...

பெரியையா ஒரு பார்வை பார்ப்பார், ஐயாவை. நெற்றிக்கண் திறந்து நக்கீரனைச் சிவன் பார்த்த பார்வை இதுவாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு வார்த்தை பேச மாட்டார். வந்தவர் போன பிறகு. "உனக்கேன் இந்த வேலை?" என்று மாத்திரம் கேட்பார்.

"அநியாய வட்டி என்ரை பிள்ளைகளுக்கு வேண்டாம்" என்னுவார் ஐயா.

தம்பி, தம்பியின் பிள்ளைகளில் எப்பவும் கரிசனையாக இருந்தார் பெரியையா. இப்ப, அப்படி ஒரு தமையனை, பெரியையாவைக் காண இயலாது.

நான் மூன்றாம் வகுப்புப் படித்த காலம், வகுப்பு வாத்தியார் எங்களை ஒரு வரிசையில் போக விட்டு பின்னாலே தடியோடு வந்தார். பக்கத்துச் சனசமுக நிலையத்துக்கு போய்ச் சேர்ந்தோம். அங்கே தான் ஒரு ரேடியோ பெட்டிக் கிடந்தது. பிலிப்ஸ் ரேடியோ. வாத்தியார் அதைப் போட்டுக் காட்டினார். பாட்டு வந்தது. பேச்சு வந்தது. எங்களுக்கு நல்ல புளுகம். அதற்கு முந்தி "பொன்னுக்கிராம்" பெட்டி எனக்குத் தெரியும். எங்கள் வீட்டிலும் கொஞ்சக் காலம் ஒரு பெட்டி கிடந்தது. அந்தப் பெட்டிக்குள்ளே ஓராள் இருந்து பாடுகிறார் என்று பெரியாக்கள் சொல்லுவினம். நான் நம்பவில்லை. அது பொய்யென்று எனக்குத் தெரியும்.

அப்ப நாங்கள் இருந்தது ஓலை வீடு. இரண்டு வருஷத்துக்கு ஒருக்கால் ஓலையாலே வேய்கிறது. ஊரவை எல்லாரும் வந்து ஓலை வெட்டி, கரம் போட்டுத் தருவார்கள். பிறகு ஒரு நாள் விடியற்புறம் வந்து எல்லாரும் ஒண்டுகூட்டாக வேய்ந்து முடிப்பார்கள். முடிய, காலைச் சாப்பாடு, பலகாரம். யாரும் கூலி வாங்குகிறதில்லை. எல்லா வீடுகளிலும் வீடு வேய்கிறது இப்படித்தான்.

ஓலையில் செய்கிற ஒரு ஏதனம் பிளா. அது கள்ளுக் குடிகிறதுக்கு. பிளாவில் மூன்று வகை. பிளாவைக் கோலி ஒரு கட்டுப் போட்டு, தளிரை கீழே மடித்துக் கட்டி நறுக்கினால், அது கொண்டைப் பிளா. அது உயர் சாதிக் குடிகாரருக்கு. தளிரை நீட்டி இரண்டு கட்டுக் கட்டி விட்டால் அது இடைச்சாதிக்காரருக்கு. ஒரு கட்டுப் பிளா தாழ்ந்த சாதிக்காரருக்கு.

ஊரில் கடற்கரை ஓரமாகவுள்ள பிரதான வீதி அருகில் எங்களுடைய கள்ளுக் கொட்டில். சின்னத் தவறணை போல. அங்கே தான் நாங்கள் கள்ளு விற்கிறது. ஐயா, பெரியையா கள்ளிறக்கினார்கள். அத்தான் எஸ். எஸ். ஸி. படித்தவர். படிப்பைக் குழப்பிப் போட்டார். அவரும் கொஞ்சக்காலம் தொழில் செய்தார். நான் ஓய்வு நேரம் உதவிக்குப் போவேன். மத்தியானம் என்னை விட்டுவிட்டு சாப்பிட வந்து விடுவார்கள்.

கள்ளுக் கொட்டிலுக்கு முன்னுள்ள வீதியைத் தாண்டினால் கடற்கரை. நான் கடற்கரை மணலுக்குப் போய் நின்று விளையாடுவேன். கள்ளுக் கொட்டிலைக் கவனித்துக் கொள்வேன். ஒரு நாள் நான் விளையாடிக் கொண்டு நிற்க, பக்கத்து வீட்டுக்காரன் அங்கே போய் போத்திலோடு கள்ளைத் தூக்கிக் கொண்டு போனார். நான் கண்டு விட்டேன். போய்க் கேட்கப் பயம். பெரிய உருவம். வழுக்கைத் தலை. தொந்தி வயிறு, சண்டியன் என்று பேர். றோட்டில் நின்று ஆதாளி போட்டு துள்ளிக் குதிப்பார். அவர் பொலிசுக்கும் பயமில்லையாம். அவருக்கு ஒரு அக்கா இருந்தவ. பொலிசுக்காரர் அவளின் சொல்லுக் கேட்டு நடப்பினமாம். நான் பயந்து பயந்து கொண்டிருந்தேன்.

மாலைப் படுகிறதுக்கு முந்தி ஐயா, பெரியையா, அத்தான் எல்லோரும் வந்தார்கள். நான் ஐயாவுக்கு மெல்லச் சொன்னேன். விளையாடப் போனதுக்கு ஐயா ஏசப்போகிறார் என்று பயந்தேன். ஐயா அப்படி ஒன்றும் சொல்லவில்லை. “ஆ வரட்டும்” என்று மட்டும் சொன்னார்.

பொழுதுபடுகிற நேரம் அவர் ஒரு போத்தலோடு வந்தார். ஒரு பத்து பேர் வரை அப்ப அங்கே இருந்தார்கள். ஐயா போத்தலில் கள்ளு அளந்து கொண்டிருந்தார். அவர் போத்தலை ஐயாவுக்கு முன் வைத்தார். கொண்டைப் பிளா ஒன்று கையில் எடுத்துக் கொண்டு நிலத்தில் குத்தினார். பெரியையா, அத்தானும் அங்கே நிற்கிறார்கள்.

“செய்தது சரியான காரியமே?” ஐயா அந்தச் சண்டியனைப் பார்த்துக் கேட்கிறார்.

“என்ன காரியம்” சண்டியன் முறைக்கிறார்.

“அட்ட மருகிலே இருக்கிறவையளை நம்பித்தானே என்ரை குழந்தைப் பிள்ளையைத் தனியே விட்டிட்டுப் போறனான்”

“அதுக்கு”

“அதுக்கோ...? செய்கிறதையும் செய்து போட்டு ஒண்டும் தெரியாதது போல”

“என்ன செய்து போட்டன் நான்...?”

“கள்ளுப் போத்திலைத் தூக்கிக் கொண்டு போய்விட்டாய்”

“என்ன கதைக்கிறாய் நீ...” பிளாவைக் கீழேப் போட்டுவிட்டு சண்டியன் கெம்பி எழுப்புகிறார்.

அப்ப அத்தான் பட்டென்று பாய்ந்து அவர் கொண்டு வந்து வைத்த போத்தலைக் கையில் எடுத்து, பளார் பளார் என்று இரண்டு மூன்று அடி மின்னல் வேகத்தில் அவர் பளுவில் போடுகிறார். பிறகு போத்தலை நிலத்தில் எறிந்து விட்டு, “எடுத்துக் கொண்டு போ” எனக் கையைக் காட்டுகிறார்.

அவர் ஒரு தடவை நிமிர்ந்து பார்க்கிறார். பிறகு போத்தலைக் கையில் தூக்கிக் கொண்டு தலை குனிந்து திரும்பி நடக்கிறார். அவருக்குத் தெரியும், இவர்களிடம் பாளை சீவும் கூர்மையான கத்தி இருக்கிறதென்று. ஆனால், இவர்கள் யாரோடும் சண்டை போடுகிறவர்கள் அல்ல. வெட்டுக் கொத்துக்காரரல்ல. “கோடே”றி வழக்காடுகிறவர்களுமல்ல. அடக்குமுறை அதிகாரம் கண்டு பணிந்துபோகின்றவர் களுமல்ல.

மூன்று நாள் கழிந்தது. அடங்கி, ஒடுங்கி வந்தார். சண்டியன். ஐயா இருக்கிற நேரம் பார்த்து “அண்ணை நான் பிழை செய்து போட்டேன்” என்றார். “சரி சரி... அதைவிடு” ஐயா சமாதானப்படுத்தினார்.

எனக்கென்றால் பெரிய புதுமை. பெரிய சண்டியன் மடங்கிப் போனார். யாரும் வாலாட்டேலாது. ஆனால் தனித்து நிற்கப் பயம். நான் தானே சண்டியனைக் காட்டிக் கொடுத்தது. அதை மனதில் வைத்து... கூப்பிட்டு ஏவல் சொல்லுவார். வேறு ஒன்றுமல்ல. கடைக்குப் போய் டி வாங்கி வரச் சொல்லுவார். நான் தயங்குவேன். “நான் பாக்கிறன் நீ போய்விட்டு வா, மருமேன்” என்று நெருக்கம் காட்டுவார் எனக்கு மறுக்க முடியாது. அரைகுறை மனத்தோடு போவேன். இது அடிக்கடி நடக்கும். கள்ளும் வீடியும் தான் அவருக்குச் சாப்பாடு.

"கள்ளுக்கொள்ளாத வயிறுமில்லை. முள்ளுக் கொள்ளாத வேலியுமில்லை" என்பது பழமொழி. அவர் வயிற்றைப் பார்த்துத் தான் அந்தப் பழமொழி வந்திருக்க வேணும். கள்ளு எங்கே போகிறதோ தெரியாது. ஊற்ற ஊற்ற உள்ளே போய்க் கொண்டிருக்கும். அதுக்கு இசைவாக வீடிப்புகை. கட்டுகட்டாக பீடி வாங்குவார். கையிருப்புத் தீர்ந்ததும் உடன் தேவைக்குச் கொஞ்சம் வாங்குவார். அது எனக்குத் தொல்லை. மறுக்கவும் மனத் தைரியம் இல்லை. கடையை நோக்கி நடப்பேன். மனம் கறுவிக் கொண்டிருக்கும். கடையில் வீடி முடிந்திருக்க வேணுமென்று நேர்ந்து கொண்டு போவேன். என் நேர்த்தி ஒரு நாளும் பலிக்கவில்லை.

எப்படியும் பழி வாங்கவேணும். என்ன செய்யலாம்? ஒவ்வொரு நாளும் யோசிப்பேன். வழி தான் தெரியவில்லை. இதைப் போய் ஐயாவுக்குச் சொல்லவும் விருப்பமில்லை. பிறகும் என்னாலே கரைச்சல். நான் எதையாவது செய்ய வேணும். பல நாள் கழிந்து போனது. கடைசியாக ஒரு வழி பிறந்தது. அவர் கண்டுபிடித்தால்... அவ்வளவுதான். அவர் ஒன்றும் செய்யாது விட்டாலும் ஐயாவுக்குச் சொல்லுவார். ஐயா கொஞ்சம் வித்தியாசமான ஆள். நேர்மை நீதிப்படி நடக்கிறவர். அறிந்தால் நான் தப்பேலாது. பயமாகத் தான் இருக்கிறது.

ஆனால் பழி வாங்கும் எண்ணம் மனதை விட்டுப் போகவில்லை. ஒரு நாள் வீடி வாங்கி வர என்னை அனுப்பினார். நான் மனதைத்திடப்படுத்திக் கொண்டேன். வீடி வாங்கிக் கொண்டு திரும்பி வரும் போது மறைவான ஒரு இடத்துக்குப் போனேன். வாங்கின மூன்று வீடிகளின் தலைப்பிலும் சிறுநீர் கழித்தேன். அவரிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். அவர் ஒரு வீடியை எடுத்து வாயில் வைத்து நெருப்பு மூட்டி ஆனந்தமாகப் புகைக்கத் தொடங்கினார். அவருக்குப் போதை மயக்கம். மூத்திர உறண்டை அடிக்கவில்லை.

எனக்குப் பெரிய பூளுகம். அவர் வாயில் வைத்து இழுத்திழுத்து புகைவிட்டுக் கொண்டிருந்தார். நான் ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்ப எங்கள் வீட்டுக்கு ஒருவர் அடிக்கடி வருவார். அவர் வராவிட்டால்

அவரின் மனிஷி வருவா. பக்கத்து வீடுகளுக்கும் போவார்கள். எங்களுடைய ஊத்தை உடுப்புகள் எல்லாம் மூட்டையாகக் கட்டிக் கொண்டு போவார்கள். அம்மா வளவுக்குள்ளே வேலிப் பூவரச மரத்தில் வைக்கிற சீலையும் எடுப்பார்கள். ஒரு கிழமைக்குள்ளே ஊத்தை இல்லாமல் கொண்டு வருவினம்.

அவர்கள் வந்தால் எப்பவும் வெற்றிலை தான் தவனம். வாய்க்குள்ளே அதக்கினதை துப்பிப் போட்டு உடனே போடுவினம். சொண்டு சிவந்து உரிஞ்சுபோய்க் கிடக்கும். பல்லெல்லாம் மஞ்சள் காவியாகக் கிடக்கும். அவர்கள் சாப்பிடுகிறது வெற்றிலை தான் எண்டு நான் அப்ப நினைப்பேன். போகிற போது வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை எல்லாம் எடுத்து கைக்குள்ளே வைத்துக் கொண்டு போவினம். வீட்டில் வைத்திலை இல்லையாக்கும் என்று நான் நினைப்பேன்.

எங்கள் வீடுகளில் எல்லாத்துக்கும் வெற்றிலை வைத்துத் தானே படைக்கிறது! எப்பவும் வெற்றிலை வீட்டிலே கிடக்கும். அவர்களின் வீட்டில் படைக்கின்ற வெற்றிலையை என்ன செய்கிறார்கள்? என்று நினைப்பேன். பிறகு தான் தெரியும். அவர்கள் வெற்றிலை படைக்கிறதில்லையாம். வேதக்காரராம். கத்தோலிக்க வேதக்காரராம். எப்படி கத்தோலிக்க வேதக்காரர் ஆனார்கள்? அறிய ஆசை. சொல்லுவார்கள் தான் இல்லை. பாவம் அவர்களுக்கு வெற்றிலை இல்லை தானே! கனக்க எடுத்துக் கொண்டு போகட்டும் என்று நான் நினைப்பேன்.

ஒரு நாள் பெரியதொரு புதினம். காலைநேரம் அந்த ஆள் கால் வைத்த ஒரு வெற்றிலைத் தட்டத்திலே வரிசையாக வெற்றிலைகளை அடுக்கி வைத்துக் கொண்டு தூக்கி வந்தார். எங்களுடைய ஐயாவுக்கு முன்னால் அதை வைத்து ஏதோ சொன்னார். ஐயா அந்த வெற்றிலையில் கொஞ்சம் காசு வைத்தார். அவர் வெற்றிலைத் தட்டத்தைத் தூக்கிக் கொண்டு சந்தோஷமாக சொல்லிக் கொண்டுத் திரும்பிப் போனார். பிறகு தான் எனக்குத் தெரியும். அது தான் "வெத்திலை வைச்சு அழைக்கிறது" என்று. அவர் வீட்டில் நடந்த ஏதோ ஒரு கொண்டாட்டத்துக்கு, ஐயா பிறகு போய் வந்தார்.

# 7

நான் விரதம் இருந்தேன். அந்தக் கோயில் இந்தக் கோயில் என்று அம்மா அடிக்கடி விரதம். ஐயா அப்படி இல்லை. அவருக்கு ஏலாது. தொழில் செய்கிறவர். ஆனால் ஊரிலுள்ள கோயில் திருவிழா துடங்கினால் ஐயா விரதம். ஐயாவுக்கு வழிபடு தெய்வம். குலதெய்வம். வெள்ளிக்கிழமை காலமை இருட்டோடை கோயிலுக்குப் போய் வருவார். சில கிழமைகளில் வசதிப்படாது. திருவிழாக் காலத்தில் தவறாமல் தினமும் போவார். ஐயாவிலே சந்தனம் மணக்கும். எனக்கு அந்த மணம் நல்லாப் பிடிக்கும். சந்தனக்கட்டை இப்படி மணந்தால் சந்தனம் பூ எப்படி மணக்கும்?. நான் கற்பனை பண்ணிப் பார்த்திருக்கிறேன். பிறகுதான் உண்மை தெரிய வந்தது. அதற்கு மணமில்லை என்று. மனிசரிலும் கனபேர் இப்படி இருக்கினம்.

ஐயா பதினைந்து நாளும் விரதம். ஒரு நேரச் சாப்பாடு. மத்தியானம் இலையில் படைத்து சாப்பிடுவார். இரவு பால், பழம், பலகாரம். காலையிலே சாப்பிடமாட்டார். எனக்கும் விரதம் பிடிக்க ஆசை. ஒரு நாள் சொன்னேன், “நான் விரதம் பிடிக்கப் போறேன்.” அம்மா மறுத்தா. “நீ பசி கிடக்க மாட்டாய்” என்றா. ஐயா மெல்லச் சிரித்தார். நான் விடுறதாக இல்லை. பிறகு “சரி” என்று சொன்னார், அம்மா மூச்சுக்காட்டயில்லை. எனக்குத் தெரியும், அம்மா இனி பேசமாட்டா என்று, ஐயா சொன்னார், “காலமை சாப்பிட்டிட்டு பள்ளிக்கூடம் போ”. எனக்கு நல்ல வாசி. மத்தியானம் வாழை இலை சாப்பாடு. இரவு பால், பழம்,

பலகாரம். இரவுச் சாப்பாடிலே தான் எனக்கு கண். ஐயாவுக்கு அது விளங்கிவிட்டது.

காலையில் வெள்ளண எழும்பி தோய்ந்து குளித்துக் கோயிலுக்குப் போவேன். சுற்றிக் கும்பிடுவேன். கற்பூரம் வாங்கிக் கொளுத்துவேன். திரு நீறு பூசி சந்தனம் வைப்பேன். தின்பண்டங்கள் அதிகம் அப்ப இராது. கடலை வாங்கலாம். மாம்பழம் வாங்கலாம். பெரிய கறுத்தக் கொழும்பான் ஒன்று வாங்குவேன். சற்றுத் தூரம் வந்தால், தெரு ஓரத்தில் புளிய மரங்கள் நிறைந்த இடம். ஒரு புளிய மர வேரில் மெல்ல உட்காருவேன். கறுத்தக் கொழும்பானை தின்ன ஆரம்பித்து விடுவேன். கோயிலுக்குப் போவோர் வருவோர் பார்ப்பார்கள். சிலர் சொண்டுக்குள் சிரிப்பார்கள். நான் என்பாடு. யாரையும் கவனிக்கமாட்டேன். வீட்டுக்கு வருவேன். சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடம் போவேன்.

வல்லிபுர ஆழ்வார் பக்தன் பக்கத்து வீட்டுக்காரன். கலியாணம் கட்டி கனகாலம் பிள்ளைகுட்டி இல்லை. அவருக்கு இரண்டு பேரிலே முத்தின பக்தி. ஒன்று வல்லிபுர ஆழ்வார். மற்றது ‘மாதுருதேவி’ என்ற சினிமா நடிகை. அவள் நடித்த படம் தியேட்டருக்கு வந்தால் முதல் ஆளாகப் போய் நிற்பார். ஒரு தடவையோடு விட்டுவிட மாட்டார். திரும்பத் திரும்ப போய்ப் பார்ப்பார். எப்பவாவது அவரோடு சைக்கிளில் நான் தொற்றிக் கொள்ளுவேன். கொண்டு போவார்.

வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு ஞாயிற்றுக்கிழமை போவார். ஞாயிறு ஏன்? வேதக்காரச் சுவாமியோ என்று நான் நினைப்பேன். ஆவணி ஞாயிறு ஆழ்வார் விரதம். நீண்ட காலம் அவர் பிடிக்கிற விரதம். நானும் அவரோடு சேர்ந்தேன். நான் சயிக்கிள் ஓட்டப் பழகி விட்டேன். ஆனால் எட்டத்துக்கு போக விடமாட்டார்கள். அவர் ஏற்றிக் கொண்டு போவார். பூசைக்கு காசு கட்டுவோம். பூசைமுடிய தளிசைக் கட்டி தருவார்கள். இலையில் வைத்துப் படைத்துத் தின்னுகிறதுக்கு. அப்ப எவர்சில்வர் பாத்திரங்கள் இல்லை. பித்தளைத் தூக்குவாளி.

அவர் தளிசையை வைத்து இறுக்கி மூடி ஹாண்டலில் கொழுவி தொங்கவிட்டார். என்னை பாறில் இருத்தினார். அவர் சீற்றில் ஏறி அமர்ந்து ஓட்டிக் கொண்டு வந்தார். பிரதான

றோட்டில் வந்து குறுக்கு றோட்டில் வெட்டித் திருப்பினார். ஒரே திருப்பம், றோட்டோரத்தில் போய் 'தொப்பென்று' விழுந்தோம். தூக்குவாளி மூடி திறந்து தளிசைக் கட்டி நிலத்தில் விழுந்தது. அவருக்கு முழங்காலில் அடி, சிராய்வு, இரத்தம் கசிகிறது. துடைத்துக்கொள்கிறார். தூக்குவாளியை எடுத்து பழையபடி மூடி தொங்கவிடுகிறார். மீண்டும் புறப்படுகிறோம்.

"கோயிலில் ஏதோ குறை விட்டிட்டம்" என்கிறார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன குறை விட்டனாங்க? அவர் சயிக்கிளை தளம்ப விட்டிட்டார். அதை ஒப்புக் கொள்ளவில்லை. தள்ளி விழுத்தினதும் சுவாமிதான். "ஒருத்தருக்கும் சொல்லாதே" என்றார். நான் சொல்லயில்லை. ஆனால் அவர் காட்டிக் குடுத்து விட்டார். முயற்சி செய்தும் முடியவில்லை அவருக்கு. ஒரு காலை கொஞ்சம் இழுத்து இழுத்து நடந்தார். கண்டுபிடித்து விட்டார்கள். அம்மா சொன்னா, "வல்லிபுர சாமிதான் என்ற பிள்ளையைக் காப்பாத்தினது." எனக்கு ஒரே குழப்பம். அவரை ஏன் காப்பாத்தாமல் விட்டவர்?. என்னுடைய கனவு பொய்யாகிப் போனது. அவரோடு கூடிக்கொண்டு நான் சயிக்கிள் ஓட்டிப்போக நினைத்திருந்தேன். விழுந்தெழும்பின பிறகு, இனி விடுவார்களா என்னை?

ஆனால், அடுத்த கிழமையும் ஆழ்வாரைக் கும்பிட.... அவர் வெளிக்கிட்டார். நானும் கூடிப் போனேன். எனக்கு நெடுநாளாக ஒரு ஆசை. கோயிலுக்குள்ளே போய் பார்க்க வேணுமென்று. வெளிப்பக்கம் எல்லாம் தெரியும். உள்ளுக்கே என்னென்ன கிடக்கோ! போய் பார்த்தாத்தானே தெரியும்! அப்ப எனக்கு விடுப்பு பார்க்கிற ஆசை, வேறொன்றுமில்லை. கூட்டிப் போகிறவரை ஆய்க்கினை பண்ணுவேன். அவர் மசியவில்லை. நானும் விடயில்லை. அரையண்டம் பொறுக்கேலாமல் சம்மதித்தார். அப்பவும் அவருக்கு தயக்கம்தான். அவர் கள்ளிறக்கும் தொழிலாளி. மரத்திலே ஏறி இறங்கியவர். கை, கால், நெஞ்சு, தோள் காய்ச்சித் தடித்துக்கிடந்தது. அது ஆளைக் காட்டிக் கொடுத்துவிடும். அவரிடம் வாங்கிக் குடித்தவர்களும் உள்ளுக்கு நிற்கக்கூடும். அவரைக் கண்டால் போதும். வேறு வினை வேண்டாம். நான் சின்னப் பொடியன். படிக்கிறவன். என்னை ஆருக்குத் தெரியும்?

நான் கொடுத்தக் கரைச்சலிலேதான் ஓம்பட்டவர். என்றாலும் அவருக்கும் மனத்தில் அந்த ஆசை இருந்திருக்க வேணும். இல்லையென்றால் என்னோடு இழுபடுவாரே!

ஆழ்வாருக்குப் பதினைந்து நாள் திருவிழா. புரட்டாசிப் பருவத்தில் தீர்த்தம். சுவாமி தீர்த்தமாட கடலுக்குப் போகும். கோயிலில் இருந்து சில மீற்றர் தூரம் போக வேணும். ஒரே வெள்ளை மணல் பரப்பு. முழுச்சந்திரன் கடலுக்குள்ளே இருந்து கிளம்பி வரும். ஆயிரக் கணக்கில் அடியார்கள் கூடி நிற்பார்கள். கண்கொள்ளாக் காட்சி. அன்றைக்குத்தான் கோயிலுக்குள்ளே கூட்டிக் கொண்டு போறதாகச் சொன்னார். கனசனம் நிற்கிற நாள். அந்த நாள் தான் போவோம் என்று சொல்கிறார். ஏனென்று எனக்கு விளங்கவில்லை. பிறகு அவரே விளக்கம் சொன்னார். "எல்லாரும் கடற்கரையில நிற்பினம் அந்த நேரம் போவோம்" என்றார்

தீர்த்தக் கடற்கரைக்கு நேரகாலத்திற்கு கூட்டிக்கொண்டு போனார். சுவாமி தீர்த்தம் ஆடி முடிகிறதுக்கு முந்தி வெளிக்கிட்டிட்டார். சனம் திரும்பி வருகிறதுக்கு முந்த வேணும். ஓடி ஓடி வந்து சேர்ந்தோம். கிணற்றில் கால் கழுவவும் நேரமில்லை. ஒரே பதட்டம். வாசலில் கற்பூரம் கொளுத்தினோம். எங்களைக் காப்பாத்து என்று, கோயிலுக்குள்ளே நுழைந்துவிட்டோம். நின்று நின்று பார்க்க இயலுமா? எங்களை ஆரும் பார்த்துவிட்டால்...? ஒரே பயம். அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு ஒரே ஓட்டம். கிழக்கேயிருந்து தெற்குப்புறமாக ஓடி மேற்கு வாசலுக்கு வந்தோம். இன்னும் ஒரு அரை வட்டம் சுற்றிவந்தால் மீண்டும் கிழக்கு வாசலில் போய் வெளிப்படலாம்.

கடற்கரையில் இருந்து சிலர் வந்து கொண்டிருந்தார்கள். அப்ப "வாடா... வாடா..." என்று சொல்லிக் கொண்டு பதட்டத்துடன் மேற்கு வாசலால் அவர் வெளியேறினார். நான் பின்னால் ஓடினேன். "தெரிஞ்சவன் ஒருத்தன் நிற்கிறான்" என்றார். மெல்ல வாசலில் இருந்து விலகி வந்து விட்டோம். அவருக்கு நடுக்கம் மாறவில்லை. மூச்சு இரைக்கிறது. பேச்சு தடுமாறுகிறது. "ஆர் நிற்கிறது" நான் கேட்டேன். தெளிவாக அவர் சொல்லவில்லை. நான் பயப்படவில்லை. இளங்கன்று பயமறியாது என்று சொல்வார்கள் அல்லவா? அப்படித்தான்

இருக்கவேணும்! எனக்கு ஐமிச்சம். அவர் ஆரையாவது கண்டாரா என்பதில்? மனப்பயம். அதுதான் அவர் அப்படி நடந்திருக்க வேணும். பிறகு உள்ளுக்குப் போகிறது பற்றி நான் கதைக்க வில்லை. அவரும் ஒன்றும் பறையவில்லை. அவர் பாதிக்கோயில் கடைசிவரை பார்க்கவில்லை. பாவம் அவர் செத்துப்போனார்.

"சட்டம்பி துட்டனடி..." ஒரு கூத்துப் பாட்டு. பாடுகிறவன் மாணவன். அவனுக்கு சட்டம்பி ஏன் துட்டனாகப் போனார். அவர் பிரம்பெடுத்து அடிக்கிறார். அடிக்கிறவரை துட்டனாக நினைக்கிறேன். அடிக்கிறவர்கள் துட்டர்கள்தான். ஆனால் சட்டம்பியும் அப்படியா? அடி மாணவனுக்கு ஒரு சோதனைதான். எனக்கும் ஒரு நாள் அது சோதனைதான்.

தவணைச் சோதனைகள் முடிந்த சமயம் எங்களுக்கு படிப்பு முடிந்துவிட்டது போல. ஒரே கூத்தும் கும்மாளமும். வலு சந்தோசமாக வெளிக்கிட்டுப் பள்ளிக் கூடம் போவோம். நல்லா விளையாடலாம். ஆசிரியர்கள் ஒன்றும் சொல்லமாட்டார்கள். சோதனை வந்தால் அவர்களுக்கு ஒரே வேலை. எங்களைக் கவனிக்கமாட்டார்கள்.

பள்ளிக்கூட வளவுக்குள்ளே தலைமை வாத்தியார் வீடு. அவருக்குப் பள்ளிக்கூடமும் வீடும் ஒன்றுதான். அவர் எங்கே நிற்பார் என்று சொல்லேலாது. பள்ளியில் நிற்பார் அல்லது வீட்டில் நிற்பார். ஆளும் எறும்பு போல சுறுசுறுப்பான ஆள்.

எங்களுக்குச் சோதனை முடிந்தால் ஆசிரியர்களுக்குச் சோதனை. விடைப்பத்திரங்களைத் திருத்தி புள்ளி இடவேணும். உரிய காலத்துக்குள் முடித்து தேர்ச்சி அறிக்கை தயாரிக்க வேணும். இப்ப என்றால் பார்வையிட்டுப் புள்ளி இடுவார்கள். பிழைகளுக்குக் கீழ் சிவப்பு மையால் ஒரு கோடு, சிலர் அதுவும் போடுவதில்லை. விடைப்பத்திரங்களை படித்துப் புள்ளி போட்டார்களோ என்று ஐயுறவு வரும். முந்தி இப்படி இல்லை. பிழைகளை சிவப்பு மையால் திருத்தி விடுவார்கள். நாங்கள் விட்ட பிழை எங்களுக்கு விளங்கும். தலைமை வாத்தியார் தான் எங்களுக்குத் தமிழ் படிப்பித்தவர். அவர் சீத்தலைச் சாத்தனார்ப் போல தமிழ்ப் பிழைகளைப் பொறுக்கமாட்டார். 'தமிழைக் கொல்லாதே' என்று எங்களைக் கொல்லுவார்.

அவர் வீட்டில் வைத்து விடைப்பத்திரங்களைத் திருத்திக் கொண்டிருந்தார். வீட்டுக்கு அச்சறுக்கையாக வேலி இல்லை. வீட்டில் இருந்து கவனிக்க வசதியாக இருக்கும். வீட்டுக்குப் பின்புறமாக மலசலகூடம். வீடு தாண்டித்தான் நாங்கள் போகவேணும். சிறுநீர் கழிக்க அப்ப நான் போனேன். தலைமை வாத்தியார் பார்வையில் என்னுடைய விடைப்பத்திரம்தான் அப்ப இருந்தது எனக்கெப்படித் தெரியும்? அவர் தற்செயலாக நிமிர்ந்தார். அவர் கண்ணில் தட்டுப்பட்டேன். “வாடா இஞ்சை....” அழைத்தார். பதுங்கிக்கொண்டு போய் முன்னால் நின்றேன். எட்டி இரண்டு மூன்று சாத்துதல். ‘பளார் பளார்’ என்று முதுகில். திகைத்துப் போனேன். விடைத்தாளைக் கீழே தட்டிவிட்டார். “எடுத்துப்பாரடா” என்றார். குனிந்து கையில் எடுத்தேன். “விளங்குதா?” என்றார். ‘ஓம்’ என்றேன். இல்லை என்றால் இன்னும் இரண்டு ‘பளார் பளார்’ விழுந்திருக்கும். உண்மையில் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவர் போட்ட சிவப்புக் கோடுகள் மங்கலாகத் தெரிகின்றன. ‘போடா’ என்றார். விடைப்பத்திரத்தைக் கொடுத்துவிட்டு திரும்பி நடந்தேன்.

எனக்கு விளங்கியது ஒன்றே ஒன்றுதான். முதுகு விண் விண்ணென்று வலிக்கிறது என்றுதான்.

இன்று நினைத்துப் பார்க்கிறேன். அந்த அடியை. “அடியைப் போல அண்ணன் தம்பி உதவுவார்” என்பார்கள். அண்ணன் தம்பியாக இருக்கின்றவர்கள் உதவவேண்டும். உதவாதவர்கள் உதவாதவர்கள்தான். அண்ணன் தம்பியிலும் பார்க்க உதவக்கூடியது அடி. அடியெல்லாம் அப்படி உதவுமா?

அந்த வருஷம் மூன்று நாள் ஓயாது மழை. அடை மழை. மழை எப்படிக் கொட்டினாலும் வெள்ளம் பாய்ந்து கடலுக்குப் போய்விடும். நில அமைப்பு அப்படி. கடற்கரைக்குக் கிட்ட தோட்ட நிலம். புகையிலை, வெங்காயம், கத்தரி, மிளகாய் என... காலத்துக்குக் காலம் பயிர். அந்த நிலத்தில் வெள்ளம் தேங்கி நின்றது. வெட்டின புகையிலைக் கட்டைகள் வெள்ளத்தில் தலை நீட்டின.

மதியம் திரும்பின நேரம், தோட்டத்துக்கு நடுவே வரம்பில் மூன்று பேர் வரிசையாக நடக்கிறார்கள். அவர்கள்

அந்தத் தோட்டச் சொந்தக்காரர். கால் சறுக்கிறதும் எழுந்து நடக்கிறதுமாகத் தள்ளாடுகிறார்கள். "தாகந் தணிந்ததடி மானே... மோகம் பிறந்ததடி தேனே..." பெருங்குரலில் ஒருவர் பாடுகிறார். "என்ன மச்சான் பிறந்தது" "மோகம் பிறந்தது" "போடா..." பிடித்து உலுப்புகிறார். தடாரென்று சேற்றுக்குள் பாட்டுக்காரன் விழுகிறார். கரைத்த மாப்பானைக்குள் விழுந்த சுண்டெலியாகச் சேற்றுக்குள் அமுங்குகிறார். எழுந்திருக்க முடியவில்லை. "மச்சான்..." கை நீட்டுகிறார்.

வரம்பில் நிற்கிறவர் கையைப் பிடிக்கிறார். அடுத்தவர் "அம்மான்" எனக் கையை நீட்டுகிறார். இரண்டு கைகளிலும் இறுக்கிப் பிடிக்கிறார்கள். இழுக்கிறார்கள்...... இழுக்கிறார்கள் தடுமாறுகிறார்கள். தொப்பென்று விழுகிறார்கள். இருவரும் மெல்ல எழுந்து விழுந்து கிடக்கிறவரை தூக்கி நிறுத்து கிறார்கள்.

புகையிலைக் கட்டையை இழுத்து அடிக்கிறார். "மச்சான் உனக்காரடா அடிச்சது" "எவன்டா அடிக்கேலும்!" அடுத்தவர் போட்டடிக்கிறார். "அம்மான் உனக்காரடிச்சது" "எவன்ரா அடிக்கேலும்!?" அடி மீண்டும் விழுகிறது. மீண்டும் கேள்வி. "அம்மான் உனக்காரடிச்சது" "எவன்ரா அடிக்கேலும்!" திரும்பவும் விழுகிறது. "அம்மான் உனக்கு..." தொடர்ந்து அந்த நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமா சனம் வந்து கூடுகிறது. அவர்களுக்கு ஒரே உற்சாகம். நல்ல விளையாட்டு. பிடித்துவிட யாரும் போகவில்லை. சண்டை என்றாலெல்லோ விலக்க வேணும். இது போதை விளையாட்டு.

அடி வாங்குகிறவரைப் பார்க்க பாவமாக இருக்கிறது. அவரும் உசாராகவே இருக்கிறார். சேற்றுக்குள் விழுந்து பிணைப்படுகிறார்கள். பிறகு எழுந்து அடிக்கிறார்கள். மச்சான் நெருக்கமாக அடிக்கிறார். மருமகன் மரியாதையாக அடிக்கிறார். இருவரும் போடுவது அடிதான்.

இந்த அடி எதுக்கு உதவும்?

எனக்கு விளங்கவில்லை. தெருச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி என்பார்கள். ஆனால் கண்ணுக்கு குளிர்ச்சியாகத் தான் இருந்தது. இப்படி ஒரு காட்சி ஆரும் கண்டிருக்க முடியாது. நானும் பின்னர் ஒரு போதும் கண்டதில்லை.

# 8

எதையாவது 'கற்றுமற' என்று சொல்லுவார்களா? கற்பது மறப்பதற்காக அல்ல. மறக்க வேண்டியதைக் கற்க வேண்டியதில்லை. ஆனால் சொல்லி இருக்கின்றார்கள். "களவையும் கற்று மற" என்று. இதற்கொரு பெரிய விளக்கம் "களவு நெறி... கற்பு நெறி" என்றெல்லாம் சாதாரண மனிதனுக்கு இந்த விளக்கம் ஒன்றும் தெரியாது. இன்றைக்கும் அவன் களவு... திருட்டுப் பற்றித்தான் பேசுகின்றான். திருட்டு கற்றுமறக்க வேண்டியதா? செய்யக்கூடாததா?

நான் செய்த திருட்டை ஒளிக்காமல் சொல்லப் போகிறேன். வேறு எங்குமல்ல எங்களுடைய வீட்டில்தான். எனது தமையன் சில காலம் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்தார். திரும்பிவரும் போது சிலவற்றைக் கொண்டு வந்தார். நல்லெண்ணெய் (எண்ணெய்) செழிப்பாகத் தலைக்கு வைத்து வைத்து எங்களை வளர்த்தவ அம்மா. எண்ணெய் தலைக்கு வைக்கும் பழக்கத்தை அவர் விட்டு விட்டார். தலைக்கொரு கிறீம் கொண்டு வந்தார். நல்ல குருத்துப் பச்சை நிறம். ஊர்த்தக்காளிக் காய்க்கு மூடிபோட்டதுபோல போத்தல். சுட்டுவிரலில் கொஞ்சம் கிறீம் எடுத்து உள்ளங்கையில் வைத்து, கைகள் இரண்டிலும் பூசி தலையில் தடவுவார், என்ன மணம்! கமகமக்கும், பிறகு சீப்புப் போட்டு இழுத்து விட்டால், நினைத்த மாதிரி மயிர் படிந்து நிற்கும். முகத்துக்கும் ஒரு வெள்ளைக் கிறீம் அதற்கு மேல் பவுடர். எல்லாம் ஒரே கமகமப்புத்தான்.

எனக்குக் கண்டிப்பான கட்டளை, அதுகளில் நான் கைவைக்கக்கூடாது. வேதம்போல மூன்று புத்தகங்கள் வைத்திருந்தார். ஸி.என். அண்ணாதுரையின் ‘புராணமதங்கள்’, மு. கருணாநிதியின் ‘நச்சுப்கோப்பை’ நாடகம். ஆலடி அருணாவின் ‘ஆலமரத்துப் பேய்’ துப்பறியும் நாவல், அந்தப் புத்தகங்களும் நான் தொடக்கூடாது. பள்ளிக்கூடப் புத்தகங்கள் தான் படிக்க வேணும். மற்றப் புத்தகங்கள் படிப்பைக் குழப்பிப் போடும், கெட்டுப்போவேன் என்றார்.

எது மறுக்கப்படுகின்றதோ, அதை அடைய வேண்டுமென்று விரும்புவது தானே இயல்பு, தின்னக் கூடாதென்று வைத்தியர் தடுப்பதையே நோயாளி தின்னவிரும்புவான். எனது கண்ணில் படாமல் அவைகளை மறைத்து வைப்பார். நான் எப்படியோ தேடிக் கண்டுபிடித்து விடுவேன். தலையில் பூசிக் கொள்ளும் கிறீமில் தான் எனக்கு ஒரு கவர்ச்சி. கொஞ்சம் எடுத்து தலையில் தடவிக் கொள்வேன். களவாக எடுத்ததினால் அது மணக்காமலா இருக்கும்? கமகம என்று வாசம் அடிக்கும். அண்ணாவுக்கு சமுசயம் வந்துவிடும் “இஞ்சை வா! தலையைக் குனி” மணந்து பார்ப்பார் “கிறீம் எடுத்துப் பூசி இருக்கிறாய், என்ன?” முறுகுவார். “ஐயோ நான் எடுக்கவில்லை உங்கடை சீப்பாலே தலை இழுத்தனான்” என்பேன். அம்மா எனக்குச் சப்போட் பண்ணுவா நான் தப்பி விடுவேன்.

எனக்கு மறுக்கப்பட்ட புத்தகங்களையும் நான் விட்டு வைக்கவில்லை. இரகசியமாக எடுத்துப் படித்து முடித்தேன். அவர் கையில் “உயிரோவியம்”, “குந்தளப் பிரேமா” என்னும் இரண்டு நூல்களை பின்னர் நான் கண்டிருக்கின்றேன். இரண்டும் நாவல்கள். பக்கங்கள் பல உள்ள பெரிய புத்தகங்கள். அவைகளைக் களவாக எடுத்து வாசிப்பதை நான் தவிர்த்துக் கொண்டேன்.

மணக்கும் கிறீம் தலைக்குத் தடவும் ஆசை எனக்கு வந்து விட்டதல்லவா? பள்ளிக்கூடத்திலும் அந்தப் பருவக்குணம் வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. இரண்டு கிழமைகளுக்கு ஒருக்கால் மாணவர் இலக்கிய மன்றக் கூட்டம் கூடும். வகுப்பறைபோல அங்கே பெரிய கட்டுப்பாடில்லை. கொஞ்சம்

சுதந்திரம். பேச்சு, பாட்டு, கதை சொல்லல் என்று நிகழ்ச்சிகள் நடக்கும். நான் எப்போதும் பேச்சுத்தான் பேசுவேன். என்னோடு படித்த ஒருவன் நல்லாப் பாடுவான். சினிமாவில் என்ன புதுப் பாட்டு வந்தாலும் அவன் பாடமாக்கிப் போடுவான். அப்படியே பாடிக்காட்டுவான். அவனுக்கு என்னிலே நல்ல பிடிப்பு. நான் சொன்னபடி செய்வான்.

அப்ப "தூக்கு தூக்கி" படம் வந்த காலம். சிவாஜி கணேசன் நடித்த படம். அந்த படத்தில் சிவாஜிக்கு, "பெண்களை நம்பாதே! கண்களே பெண்களை நம்பாதே!" என்றொரு பாட்டு. அந்தப் பாட்டுப் பாடி மாணவிகளைக் கேலி பண்ணவேணும் என்று நான் திட்டமிட்டேன். பாடல் வல்ல நண்பன் எனக்குப் பக்கத்துணை. பிறகென்ன கவலை எனக்கு! ஏவி விட்டேன். அவன் அந்தப் பாட்டை மாணவர் மன்றத்தில் பாடி வைத்தான். மாணவிகள் எல்லோரும் தலை குனிந்தனர். எனக்கு நல்ல புளுகம். பெண்களுக்கு நல்ல பாடம் படிப்பித்து விட்டதான ஒரு நினைப்பு.

அடுத்த நாள் வழமை போல காலையில் பள்ளிக்கூடம் போனேன். பள்ளிக்கூடம் ஆரம்பித்து கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அதிபரின் அழைப்பு வந்தது. காரியாலத்துக்குப் போனேன். போன பிறகுதான் விஷயம் எனக்கு விளங்கியது. என்றாலும் நான் கிறுங்கவில்லை. நானே பாட்டுப் பாடினது? பாடினவன் யாரோ! அதைக் கேட்டு ரசித்த பயனாளிதான் நான். இது எல்லாருக்கும் தெரியும். பிறகு எனக்கென்ன பயம்?

அப்ப அதிபர் சொன்னார். "அவன் மடையனுக்கு இப்படித் திட்டமிட்டுச் செய்யத் தெரியாது. இதெல்லாம் உன்ரை வேலை, நீட்டுகை" நீட்டினேன். பிரம்பால் இரண்டு விழுந்தது. வாங்கிக் கொண்டு வகுப்புக்குப் போனேன். நான் மடையனல்ல என்று அதிபர் சொல்லிவிட்டார். ஆனால் வகுப்பு மாணவிகள் யாரும் என்னை நிமிர்ந்து பார்க்கவில்லை. எல்லாரும் தலைகுனிந்திருந்தார்கள். அது ஏனென்றுதான் எனக்கு விளங்கவில்லை. 'எய்தவன் இருக்க அம்பை நோகலாமா?' நினைத்துக் கொண்டேன். பாடினவன் வெறும் எச்சரிக்கையுடன் தப்பி விட்டான்.

அம்மாவுக்கு ஒன்று விட்ட சகோதரி. அவவுக்கு ஒரு மகன். எனக்கு ஒரு வயது மூத்தவன். அண்ணன். அவன் திருக்கணாமலையில் இருந்தான். மலை என்று சுருக்கமாகச் சொல்லுவார்கள். திருகோணமலைக்குத் தான் இந்தப் பெயர். எங்களுடைய ஊரில் இருந்து சிலபேர் திருக்கணாமலைக்குப் போய்க் குடிஇருந்தார்கள். எங்கள் கிராமத்துக்கு அவர்கள் வந்தால், அவர்களுக்குத் தனிமதிப்பு, நடை, உடை, பாவனை எல்லாம் வித்தியாசமாக இருக்கும். சேட்டுப் போட்டு கழுத்துக்குள்ளே லேஞ்சி வைத்திருப்பார்கள். பஞ்சுத் துண்டு எடுத்து சென்றில் நனைத்து, காது மடல்களுக்குள் வைத்துக் கொள்ளுவார்கள். பேச்சும் கொஞ்சம் வித்தியாசம்.

அண்ணனுக்கு பேரன், பேத்தி ஊரில் இருந்தார்கள். இடையிடை ஊருக்கு வருவான். நல்லாப் படம் பார்ப்பான். ஒரு கம்பைக் கையில் தூக்கிக் கொண்டு 'வாள் பயிற் போடுவம்'என்பான். அவன்தான் எப்பவும் எம்.ஜி.ஆர். நான் வீரப்பா அல்லது நம்பியார். என்னை எம்.ஜி.ஆர். ஆக விடமாட்டான். பயிற்சி தொடங்கும். சுழன்று சுழன்று சண்டை செய்வோம். கடைசியில் வில்லன்தானே தோற்கவேணும். தோல்வி எனக்குத்தான். வீரப்பா, நம்பியார் போல எனக்குச் சிரிக்கத் தெரியாது. அவனுக்கும் தெரியாது. கம்பு சுழன்று வந்து சில நேரம் கையிலே படும். அதோடு சண்டை சரி. கம்பைத் தூக்கி எறிந்துவிட்டுப் போவோம். எனக்குச் சயிக்கிள் பழக்கியதில் பெரிய பங்கு அவனுக்கு.

கொஞ்சம் வளர்ந்த பிறகு மரியாதையாகப் பழகுவோம். என்ன சொன்னாலும் அண்ணன், தம்பி! சில சமயம் சினிமாவுக்குக் கூட்டிப் போவோம். அவனுக்கு இளநீர் என்றால் பைத்தியம். குடிக்கிறதுக்கு நேர காலம் கிடையாது. எப்பவும் குடிப்பான். எங்களுடைய வீட்டுக்குக் கிட்ட தென்னம் பிள்ளைக் காணி ஒன்று. சின்னக் காணி நிறைய மரங்கள். அச்சறுக்கையாக வேலி அடைத்து படலை போட்ட காணி. மாலைப்பட்ட பிறகு இருவரும் போவோம். நான் வெளியே நின்று கொள்ளுவேன். அவன் லாவகமாக மரத்தில் ஏறுவான். மரங்கள் உயரமில்லை. கையிலும் வாயிலும் கௌவிக் கொண்டும் அசுக்கிடாமல் இறங்கி வருவான். சர்க்கரை

தேசிக்காய் எப்பவும் என் பொறுப்பு. வீட்டில் எடுத்துப் போவேன். இளநீரை வெட்டி சர்க்கரையைக் கரைத்து தேசிக்காய் பிழிந்து விட்டு வளுவளுத்த தேங்காயைக் கடித்துக் குடிக்கும் போது அமுதமாக இருக்கும்.

ஒரு நாள் நாலு இளநீர் பிடுங்கி வந்தான். நான் ஒன்று அவன் இரண்டு. அதற்கு மேல் குடிக்க ஏலாதென்றான். நல்ல பெரிய இளநீர். ஒரு இளநீர் மிஞ்சிப்போச்சு. என்ன செய்கிறது? யோசித்தோம். எனக்கொரு ஐடியா வந்தது. செய்வினை செய்து வைப்போம் என்றேன். அவன் உடன்பட்டான். இளநீர் மூளை நீக்கி அடிப்பகுதியைத் தட்டையாகச் சீவி எடுத்தோம். அதில் கற்பூரம் கொளுத்தி எரித்தது போல கடதாசி வைத்துக் கொளுத்தினோம். தலை வாழை இலை, பூ, சந்தனம், திருநீரு, குங்குமம், தேசிக்காய் எல்லாம் தேடினோம். இருட்டோடு இருட்டாகப் போய் ஒரு வீட்டுப் படலையில் ஒழுங்காக வைத்துவிட்டு வந்தோம்.

மறுநாள் காலை கூக்குரல் கேட்டு கண் விழித்தேன். அந்த வீட்டுப் படலையில் அட்டமருகில் உள்ள சனம் முழுக்க. அண்ணனும் நின்றான். என்னைக் கண்டு கள்ளச் சிரிப்புச் சிரித்தான். அந்த வீட்டுப் பெண்கள் மண்ணை வாரி வாரி அள்ளிக் கொட்டித் திட்டுகிறார்கள். ஆண்கள் நேருக்கு நேரே வருமாறு அழைத்துச் சவால் விடுகிறார்கள். வேடிக்கை பார்க்கின்ற சனம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகுகிறது. நானும் அவனும் அங்கிருந்து மெல்ல நழுவுகிறோம்.

இது நடந்து முடிந்த பிறகு அந்த வீட்டுக்காரர் கொஞ்சகாலம் பேய் பிசாசு ஓட்டுகிற காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். எனக்குப் பாவமாகத் தெரிந்தது. ஆனால் உண்மையை அவர்களுக்கு நான் சொல்லமுடியுமா?

என்னுடைய நண்பன் ஒருவனின் தகப்பனுக்கு மந்திரம் தெரியும். அவன் பெருமையாக ஒரு நாள் சொன்னான். நான் நம்பவில்லை. சத்தியம் பண்ணினான். அப்பவும் எனக்கு நம்பிக்கை இல்லை. அவன் தகப்பனை எனக்குத் தெரியும். அதிகம் பேசார். பார்வை நல்லதில்லை. நஞ்சுப் பார்வை. அவர் மந்திரம் ஓதுகிறது, பேய் ஓட்டுகிறது, செய்வினை சூனியஞ்

செய்கிறது ஆக நான் அறியவில்லை. அவன் புளுகிறான் என்று நினைத்தேன். நான் நம்பாதது அவனுக்குப் பெரிய ஏமாற்றம். தனது பெருமையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று நினைத்தான்; வீட்டுக்குவா காட்டிறன் என்றான்.

எனக்கும் அறிய ஆசை. தகப்பன் இல்லாத நேரம் பார்த்துப்போனேன். தாயுமில்லை. அவன் தனித்திருந்தான். வீட்டுக்குள்ளே போய் பழைய றங்குப் பெட்டியைத் திறந்து, அடியில் துழாவி இரண்டு கொப்பிகளை எடுத்து வந்தான். பழுப்பேறின பழைய கொப்பிகள், விரித்துப்பார்த்தேன். பென்சில் எழுத்து முழுவதும் மந்திரம், பார்வை பார்க்கிறது. தண்ணீர் ஓதிக் கொடுக்கிறது. சூனியஞ் செய்கிறது. பேய், பிசாசு ஏவி விடுகிறது. பேய், பிசாசு ஓட்டுகிறது... எல்லாத்துக்கும் மந்திரம். எனக்கு வியப்பாக இருந்தது. அவனுக்குப் பெருமையாக இருந்தது. படுதளம் போடுகிற மந்திரமும் அதில் இருந்தது. ஒருவனுக்கு கலை வந்து உருக்கொண்டு சாமி ஆடிவரும்போது, மந்திரம் ஓதி அவனை விழுத்திற மந்திரந்தான் படுதளம். அந்த மந்திரத்தில் எனக்கொரு பிடிப்பு. அதைப் பிரயோகித்துப் பார்க்க நான் விரும்பினேன். இரண்டுபேரும் அந்த மந்திரத்தை எழுதி எடுத்துக் கொண்டோம். செப்புக்காசில் யந்திரத்தையும் கீறிவைத்துக் கொண்டோம்.

ஊரில் வாக்குச் சொல்லுகிற ஒருவர் இருந்தார். அவருக்கு நல்ல மதிப்பு, உருப்பத்தி ஆடி வாக்குச் சொல்லுவார். அவர் ஆதரிக்கிற கோயில் வெள்ளி, செவ்வாயில் நிறையசனம். பேய்பிசாசினால், நோயினால் கஷ்டப்பட்டவர்கள் வந்து பயபக்தியோடு வாக்குக் கேட்பார்கள். அவர் சொல்வதில் சனங்களுக்கு நல்ல நம்பிக்கை. அந்தபூமரத்தில் சில நேரம் முனி ஏறி வரும். சில நேரம் விறுமர், கையில் பிரம்பு பிடித்து சுழற்றிச் சுழற்றி உடலில் அடிப்பார். குடுமி அவிழ்ந்து தலையில் ஊற்றின நீர் சொட்டுச் சொட்டாக வடியும். கட்டுக் கேட்க வந்தவர்கள் முன்னேபோய் கைகட்டி நிற்பார்கள். தலையிலும் வாயைத்திறக்கச் சொல்லி வாயிலும் திருநீறு போடுவார். ஒருவருக்கு. இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகுதான் கலை கொண்டு சாமி வாக்குச் சொல்லும். சிலரைத் தலைமயிரில் பிடித்து இழுத்து வந்து முதுகில் ஒரு அடியும் போட்டு வாக்குச்

சொல்லும். சாமி சொல்லுகிற வாக்கு கட்டுக் கேட்க வந்தவர்களுக்கு சுலபமாக விளங்காது. “குஞ்சுக்கு... குஞ்சுக்கு... ஏழு கதிரவன்... ஏழு கதிரவன்...” என்று சாமி சொல்லும். அவர் மனைவி அல்லது மகள் அருகில் நின்று சாமி சொல்வதை விளக்கிச் சொல்லுவார்கள். வாயைத் திறந்து நாக்கில் கற்பூரம் கொளுத்தி வைத்து சாமி அணைக்கும். உருவந்து சுழன்றாடி வருவதிலும் ஒரு அழகிருக்கும்.

கலை முறிந்து விட்டால் படாரென்று மரம்போல நிலத்தில் விழுந்து கிடப்பார். சற்று நேரம் மூச்சிழுக்கும். பிறகு மெல்ல எழுந்து இரண்டு செம்பு தண்ணீர் மடமட என்று குடிப்பார். நடந்ததொன்றும் தான் அறியாதது போல இருப்பார். யாரிடமும் கைநீட்டி காசு வாங்க மாட்டார். தெய்வத் தொண்டாக இதைச் செய்து வந்தார்.

அவர் சாமி ஆடுவதைப் பார்ப்பதில் எனக்கு நல்ல விருப்பம். இடையிடையே போய்ப் பார்ப்பேன். அவர் உருப்பத்தி ஆடுவதை... வாக்குச் சொல்வதை... என்னால் அப்ப முற்றாக நம்பமுடியவில்லை. மறுக்கவும் முடியவில்லை.

அவரைச் சோதித்துப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம். எனக்குத்தான் இப்ப மந்திரந் தெரியுமே! சாமி ஆடுகிறவர்களைப் படுதளம் போட்டு விழுத்த. அவருக்கொரு நேர்த்திக்கடன். அவர் ஆதரிக்கிற கோயில் கரகம் எடுத்து இன்னுமொரு வயிரவர் கோயில் கரகம் இறக்கிறதாக. நானும் நண்பனும் படுதளம் போட்டு அவரை விழுத்தத் தயாரானோம். செப்புத்தகட்டில் யந்திரம் கீறி வலது காலுக்குக் கீழே வைத்துக் கொண்டு மந்திரம் செபிக்க வேணும். செப்புத்தகடு தேடினோம். கிடைக்கவில்லை. கடைசியாக செப்பில் செய்த ஒரு சத நாணயத்தை எடுத்து அதில் யந்திரத்தைக் கீறினோம். பிறகு ஒரு சந்தேகம். மந்திரத்தால் கட்டி அவரைக் கீழே விழுத்திவிட்டால், பின்னர் அந்தக் கட்டுக்களை அறுத்து எழுப்பிவிடுகிறதுக்கு எங்களுக்கு மந்திரம் தெரியாதே! பரவாயில்லை, மந்திரவாதிகள் வருவார்கள், போட்டிபோட்டு வல்லமையைக் காட்ட.

குறித்த தினம் வந்தது. ஒரு வெள்ளிக்கிழமை, இரவு எட்டு மணிக்ருக் கரகாட்டம் தொடங்கியது. தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் கரகாட்டந் தொடங்கியது. நாங்கள் முன்கூட்டியே வயிரவர் கோயிலுக்குப் போனோம். கரகம் வந்தது. குடம் குடமாக அவருக்குத் தண்ணீர் ஊற்றினார்கள். உடுக்கைகள் ஓங்காரமாக ஒலித்தன. தன்னை மறந்து கலை கொண்டு ஆடினார். வலது கரத்தை நீட்டினார் சாட்டையை உருவி துமிபறக்க அடித்தார்கள். பின்னர் இடது கரத்தை நீட்டினார் அதிலும் துமி பறக்க அடி விழுந்தது. அவர் அடங்காமல் வீறு கொண்டு ஆடினார்.

நாங்கள் யந்திரத்தைப் பாதத்துக்கீழே வைத்துக்கொண்டு மந்திரம் ஓதினோம். அவர் சளைக்காமல் ஆடிக் கொண்டிருந்தார். நாங்களும் சளைக்காமல் மந்திரத்தைத் செபித்துக் கொண்டிருந்தோம்.

எங்களால் அவரைக் கட்டமுடியவில்லை. படுதளம் போட்டுக் கீழே விழுத்த முடியவில்லை. எவ்வளவு நேரம் மந்திரத்தைத் செபித்துக் கொண்டிருக்க முடியும்?

எனக்கு எரிச்சல் வந்தது. காலுக்குக் கீழே வைத்திருந்த செப்பு நாணயத்தைத் தூக்கி எறிந்தேன். "நீயும் உன்ரை மந்திரமும்! எல்லாம் பொய்" என நண்பனைப் பார்த்துச் சினந்தேன்.

"மந்திரம் பொய்யில்லை. உருவந்து ஆடுகிறது தான் பொய், உண்மையாக அவரில் சாமி வந்து அவர் ஆடயில்லை" என்றான் அவன்.

மந்திரம் பொய்யா? சாமி பொய்யா? அல்லது இரண்டுமே பொய்யா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

# 9



பட்டிமன்றக்காரர் கண்ணில் இன்னும் ஒரு சங்கதி படேலைப்போல, சமையல் செய்வதில் கெட்டிக்காரர் பெண்களா? ஆண்களா? என்பது வாதம் செய்ததாகத் தெரியேல்லை. இதற்கென்ன வாதம்? சமைக்கிறதில் பெண்கள்தானே கெட்டிக்காரர் என்று நினைத்திருக்கலாம். கணவன்மாரை அடுக்களைக்குள்ளே வைத்திருக்கிறவை இதனாலே கோபப்படக்கூடாது. ஒரு படிப்பாளி தனக்கு நல்லாச் சமைக்கத் தெரியுமென்று சொல்லுவார். தன்ரை கையாலே சமைத்து எனக்கு ஒருநாள் தரவேணும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். நான் வாயூறிக் காத்திருந்ததுதான் மிச்சம். அவருக்கு சமைக்க எங்கே நேரம்? அவருக்கும் அவர் மனிஷிதான் சமைத்துப் போடுவா. சமையல் பெண்கள் செய்கிற வேலையாகத்தான் இருந்தது.

அதனாலே அவர்கள் தான் சமைக்கிறதில் வலு கெட்டிக்காரிகள் என்று எல்லாரும் நினைக்கலாம். நினைத்தால் போதுமா? அதற்கு ஆதாரம் வேணும், சான்று வேணும், உசாத்துணை நூல்களின் பட்டியல் வேணும். இவைகளைத் தேடப்போனால் பெண்கள் கட்சி நிச்சயம் தோற்றுப்போகும். ஆண்கள் தான் சமையலிலும் கொடிநாட்டி இருக்கிறார்கள். ஹோட்டல்களில் சமைக்கின்ற ஆண்களை நான் சொல்லவில்லை. சமையல் செய்வதில் சிறந்தவர்கள் நளனும், வீமனுந்தான். அதனால்தான் நளபாகம், வீமபாகம் என்று வழங்குகிறது. அவர்கள் இரண்டுபேரும் இராச பரம்பரையில்

வந்தவர்கள். இராசாக்கள். அவர்கள் அடுக்களைக்குள்ளே போய் உணவு பாகம் பண்ணினார்கள் என்றால், நான் சமையல் வேலை செய்தது என்ன சாதாரண காரியமா?

அம்மாக்களின் உழைப்புக்குச் சம்பளம் கொடுக்கிறதாக இருந்தால் எவ்வளவு கொடுக்கலாம்? ஐயாமாரின் உழைப்பிலும் பார்க்க நான்கு அல்லது ஐந்து மடங்கு சம்பளம் போட்டு கொடுக்க வேணும். அம்மா அதிகாலையில் எழுந்தால் இரவு பத்து மேல் செல்லும் படுக்கையில் போய்ச் சரிய. மனித இயந்திரமாக அம்மா சுழன்று கொண்டிருப்பா. பகல் வேளையில் படுத்து உறங்கினது நான் பார்த்ததில்லை. இரவு படுக்கைக்குப் போவதும், காலை எழுவதுங்கூடத் தெரியாது. எங்களுக்காக ஓயாது உழைத்துக் கொண்டிருப்பா. அம்மா தனித்த ஆள். உதவிகள் இல்லை.

அம்மாவின் கடும் உழைப்பு நோயாளி ஆக்கியது. முன்னர்போல வீட்டுவேலைகளைச் செய்ய இயலவில்லை. எங்களுக்கு உணவு ஆக்கித் தருவதற்கும் முடியாத நிலை. எனது சகோதரிகள் மூவரும் விருத்தெரியாத சின்னப்பிள்ளைகள். ஐயா, செய்யும் தொழிலைப் பார்ப்பதா? சமையல் வேலை செய்வதா? நாங்கள் பசி கிடக்க விடுவார்களா? ஐயாதான் தொழிலும் பார்த்து சமையலும் செய்து தந்தார். ஐயாவுக்கு இயலவில்லை. பெரிய கஷ்டம். திணறிக் கொண்டிருந்தார்.

ஆண்கள் மூவர் நாங்கள் மூத்தவர்கள். நான் நடுவிலான். குடும்பச் சுமைகள் எல்லாம் எப்பவும் என் தலையில் வந்து சரியும். ஐயா இறந்த பிறகும் அப்படித்தான். அதற்கான பயிற்சிபோல மாணவப் பருவத்திலேயே சுமக்க ஆரம்பித்தேன். அம்மாவின் சமையல் வேலைகளைச் செய்ய அடுக்களைக்குள்ளே போனேன். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் சமையல் செய்வது என்ரை வேலை. கிடாரம் எரிக்கிறனெல்லாம் சமையல்காரனாகி விடுவானா? நானும் அப்படித்தான். அம்மா இருந்த இடத்தில் இருந்து வழிப்படுத்துவா. நான் இயந்திரமனிதனாக இருப்பேன். எப்படியோ சமையல் முடிந்து போகும். எல்லாரும்

சாப்பிடுவோம். ஐயா சமையலைப் பாராட்டுவார். எனக்குச் சந்தோஷந்தான். பாராட்டென்றால் ஆர் சந்தோஷப்படாமல் இருப்பினம்!

பாடசாலை விடுமுறைக் காலம் முன்பு போல எனக்குச் சந்தோஷமாக இல்லை. எனக்குப் பெரிய சுமையாக இருந்தது. சுமக்கப் பிறந்தவன் நான் என்றது அப்ப எனக்குத் தெரியாது. நான் பத்தாம் வகுப்புக்கு வந்துவிட்டேன். அடுத்த ஆண்டு க.பொ.த. (சாதாரணம்) பரீட்சை. பத்து, பதினொன்று. இரண்டு வருஷங்கள் பரீட்சைக்குரிய பாடங்கள்.

இரண்டு பதிகங்கள் இருபது தேவாரங்கள் விடுமுறையில் பாடமாக்கிக் கொண்டு வரவேணுமென்று சொன்னார், சமயபாட வாத்தியார். வேலைகளில் ஒழுங்கு தவறாதவர், கொஞ்சம் கண்டிப்பானவர், தரும் வேலைகளைப் பின்போடக் கூடாது. எல்லாம் அப்ப அப்ப செய்து முடிக்க வேணும்.

விடுமுறை முடிந்து பாடசாலை தொடங்கியது. சமயபாட வேளை வாத்தியார் வகுப்புக்கு வந்தார். ஒரு மாத விடுமுறையில் வாத்தியார் சொன்னதை மறந்திருப்பார், எனக்கொரு நம்பிக்கை. பாவிமனிஷன் வந்தது வர முன்னம் துவங்கிவிட்டார். ஒரு தேவாரம் ஒருவர் சொல்ல, வரிசையாச்சுற்றிச் சுற்றிக் கேட்டு வந்தார். இரண்டு பதிகங்களும் முடிந்த இடத்தில் இருந்து மீண்டும் தொடங்கினார். மாணவர்கள் பெரும்பாலும் தவறாமல் ஒப்புவித்தார்கள். எட்டாம் வகுப்பு என்.பி.ரீ.ஏ. பரீட்சையில் மிகச்சிறந்தசித்தி முதலாந்தரத்தில் பெற்றவன் நான். பரீட்சையில் நல்ல பெறுபேறு. பாடசாலைக்குப் பெற்றுத்தருவேன் என்று எதிர்பார்க்கப்பட்டவன். எனக்கு ஒரு தேவாரமும் மனப்பாடமில்லை. மெல்ல எழுந்து மௌனமாக நிற்கிறேன். வாத்தியார் சொல்லுமாறு கோபத்துடன் வற்புறுத்துகிறார். எனக்கென்ன சொல்லவிருப்பமா இல்லை? சொல்லக் கூடாதென்ற இறுமாப்பா? பாடமாக்கினால் தானே! அடுக்களையில் அடுப்பும் நெருப்புமாக இருந்த எனக்கு பதிகம் எப்படிப் பாட வரும்?

"ஏன் மனனஞ் செய்யவில்லை?" வாத்தியார் கேட்கிறார். நான் ஊமையாகத் தலை குனிந்து நிற்கிறேன். அவர் திரும்பத்திரும்பக் கேட்கிறார். நான் வாய்திறக்கவில்லை. எப்படி நான் வாய் திறந்து உண்மையைச் சொல்லுகிறது? மாணவர்கள் குறிப்பாக மாணவிகள் வகுப்பில் இருக்கிறார்கள். சமயம் படிக்கவில்லை. சமையல் படித்தேன் என்று சொல்ல முடியுமா? மாணவிகள் "கொல்" என்று சிரிப்பார்கள். அந்தச் சிரிப்பு என்னைக் கொல்லாமல்விடாது! நல்ல காலம் வாத்தியார் சீறிச் சினத்துடன் விட்டுவிட்டார். நாலு அடிபோட்டு வாயைத்திறக்க வைக்க எண்ணவில்லை. அடி போட்டாலும் வாயைத் திறந்து பொடிச்சியளுக்கு முன்னாலே இந்தச் சங்கதியை எப்படிச் சொல்லுவேன்? நான் சொல்லமாட்டேன். வாத்தியாருக்கு அது விளங்கிச்சுதோ! என்னவோ அவர் அந்த முயற்சி செய்யவில்லை. ஆனால் தமது சினத்தை வார்த்தைகளில் சூடாக வெளிப்படுத்தினார். "வல்லையில் தென்னம்பிள்ளை மாதிரி எழும்பி நிற்கிறாய்" என்றார். மெலிந்து வளர்ந்த நெட்டையான உருவம். அவரை அப்படிச் சொல்ல வைத்தது. இன்றும் வல்லைவெளி தாண்டி நான் போகின்ற வேளையில் வல்லையில் தென்னைமரங்கள் என் கண்ணில்படும். சில சமயம் சிரிப்புவரும். அந்த வாத்தியாரை நான் நினைத்துக் கொள்வேன்.

பாடசாலையில் அடுத்த ஆண்டு க.பொ.த. (சாதாரணம்) எழுத வேண்டிய காலம் ஆண்டு முடிவில் மார்கழிப் பரீட்சை. விண்ணப்பம் அனுப்புவதற்குப் பாடசாலையில் ஒரு பரீட்சை. ஒன்பது பாடங்களில் நான்கு பாடங்களில் தான் நான் சித்தி. ஐந்து பாடங்கள் சித்தியானவர்களின் விண்ணப்பம் அனுப்பினார்கள். நான் பரீட்சை எழுத முடியாது.

அதிபர் என்னைக் காரியாலயத்துக்கு அழைத்தார் "உனக்கு விளையாட்டுக் குணம் கூடிப்போச்சு" என்று கண்டித்தார். இறுதியில் ஒரு நிபந்தனை விண்ணபப்பம் அனுப்புவதற்கு. பொதுப்பரீட்சைக்கு ஒரு மாதத்திற்கு முன்னம் பாடசாலையில் ஒரு பரீட்சை நடப்பது வழக்கம். அந்தப் பரீட்சையில் சித்தி அடையாதவர்களின் விண்ணப்பங்களை அதிபர்கள் தடுத்து வைக்கலாம். அந்தப் பரீட்சையில் சித்தி

அடையவேணும். இல்லாவிட்டால் தடுத்து விடப்போவதாக எச்சரிக்கை செய்தார்.

அதிபர் சொன்னது போல எனக்கு விளையாட்டுக் குணம் இல்லாமல் இல்லை. ஆனால் வீட்டு நிலைமைதான் என்னைப் பெரிதாகப் பாதித்தது. சமையல் வேலை, ஓய்வு கிடைக்கும் போது ஐயாவுக்கு உதவி செய்யப் போவது, படிப்பதற்கு நேரமில்லை.

அதிபர் சொல்லை, பாடங்களில் எனது நிலைமையை ஐயாவுக்குச் சொன்னேன். ஐயா எல்லா வேலைகளில் இருந்தும் என்னை விடுவித்தார். படிக்குமாறு சொன்னார். பரீட்சைக்கு மூன்று மாதம் இருந்தது. பாடப்புத்தகங்கள் தவிர்ந்த மற்றப் புத்தகங்கள் படிப்பதை நிறுத்தினேன். பாடசாலை போவேன். வீடு வருவேன். சினிமாவுக்குப் போவதுமில்லை. கூட்டங்கள் கேட்கப்போவதும் கைவிட்டேன். வீட்டுக்கு வெளியே எங்கேயும் செல்வதில்லை. இரவு நீண்ட நேரம் இருந்து படிப்பது கஷ்டமாக இருக்கும். படுக்கையிலும் கையில் புத்தகம், தலைமாட்டில் விளக்கு எரியும். அப்படியே என்னை அறியாமல் உறங்கிவிடுவேன். விரித்தபடி நெஞ்சில் புத்தகம் கிடக்கும். வீட்டில் எல்லோரும் படுக்கையில். அந்த சமயத்திலும் கண் உறங்காது ஒரு ஜீவன் என்னைக் காத்துக் கிடக்கும். அது என் அம்மாதான். மார்பில் கிடக்கும் புத்தகத்தை எடுப்பா. விரித்த பக்கத்தில் தடயம் வைப்பா. என்னருகே வைப்பா. தலைமாட்டில் விளக்கை அணைத்த பின்பு, போய்ப்படுத்துக் கொள்வா.

அரசினர் பொதுப் பரீட்சைக்கு முன்னம் அதிபர் சொன்ன பரீட்சை. எல்லாப் பாடமும் சித்தி அடைந்தேன். பொதுப்பரீட்சையிலும் எல்லாப் பாடமும் சித்தி அடைந்தேன். அந்த ஆண்டுதான் க.பொ.த. (சாதாரணம்) நடைமுறைக்கு வந்தது. நான் சிறந்த சித்தியைப் பெற்றதால் எஸ்.எஸ்.ஸி. தராதரப்பத்திரம் முதலாம் பிரிவில் வழங்கினார்கள்.

பரீட்சை முடிவு வெளிவந்த பிறகு நண்பர்களுடன் பல இடங்களுக்கும் சயிக்கிளில் போய் வர அனுமதி கிடைத்தது. ஒரு நாள் கீரிமலைக்குப் போய் கேணியில் நீராடினோம்.

திரும்பிவரும் போது வல்லைவெளியில் நிற்கும் தென்னந் தோட்டத்துக்குப் போய் இளநீர் பிடிங்கிக் குடித்தோம். சொந்தக்காரன் சத்தம் போட்டுக் கொண்டு வந்தான். சயிக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினோம். வாத்தியார் உவமித்த தென்னம்பிள்ளையை அன்றுதான் நான் கிட்டப்போய்ப் பார்த்தேன். நல்ல அனுபவம்.

நூல்கள் வாசிக்கும் பழக்கம் மாணவப்பருவத்தில் எனக்கு வந்துவிட்டது. அந்தக் காலத்தில் திராவிடக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகப் புத்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் வாசிப்பேன். அதன் தாக்கம் என்னில் ஏற்பட்டிருந்தது. என்னுடைய கருத்துக்களும் போக்குகளும் சராசரி மற்றவர்கள் போல இல்லை. மூடக் கருத்துகள் நடைமுறைகள் கண்டு சிரித்துக் கொள்வேன். தீவிரமாக யாரோடும் மோதிக் கொள்வதில்லை. ஆனால் எனது கருத்துக்களை விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொள்வதுமில்லை.

உறவினர்கள், நண்பர்கள் குடும்பங்களில் மரணங்கள் நடக்கும். அங்கு போய் வர வேண்டியது கடமை. ஐயாவுக்கு நேரமில்லை. பதிலாக நான் போவேன். திரும்பி வரும்போது பெரும்பாலும் நடுப்பகல் வெயிலாக இருக்கும். நல்லாக் களைத்துப் போவேன்.

வீட்டுக்கு வெளியே எங்களுக்கு சொந்தமான ஒரு கிணறு, ஆழக்கிணறு, தெணியிற் கிணறு. எங்கள் பகுதியில் இருந்தவர்களின் தேவையை நிறைவேற்றிய கிணறு. பொதுக்கிணறு போல. ஐயா, அம்மா செத்தவீட்டுக்குப் போனால் அந்தக் கிணற்று நீரில் தோய்ந்த பிறகுதான் வீட்டுவளவுக்குள்ளே வருவார்கள். பெண்டுகள் ஈரச்சீலையோடு கிணற்றில் அள்ளமுடியாது. செத்தவீட்டுக்குப் போய் வந்த ஆண்கள் மூன்று வாளி தண்ணீர் தலையில் ஊற்றிய பிறகுதான் அள்ளலாம். இதெல்லாம் எழுத்தில் எழுதப்படாத சட்டதிட்டங்கள்.

நான் சாவீட்டுக்குப் போனால் தடை இல்லாமல் வீட்டுக்குள் வருவேன். வெயில் சுட்டகளை, தேசிக்காய் தண்ணீர் கேட்பேன். அது கிடைக்கும். கன்வேஸ் கட்டிலில்

படுத்து விடுவேன். சற்று நேரம் பொறுத்து கிணற்றுக்குப் போவேன். சாவீட்டால் வந்து நிற்பார்கள். அவர்கள் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது. யாரையாவது எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அவர்கள் துடக்கு நீங்க நான் கிணற்றில் அள்ளி ஊற்றுவேன். பிறகு நானும் தலை தோய்ந்து வீட்டுக்குத் திரும்புவேன்.

நான் தோய்ந்து குளிக்காமல் வீட்டுக்குள் வருவது, கட்டிலில் படுப்பது, கிணற்றில் அள்ளுவது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அம்மா சொல்லிப்பார்த்தா. பல தடவை சொல்லிப்பார்த்தா. நான் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அம்மாவின் சுபாவம் ஐயாவிடம் எங்களைப் பிடிச்சுக் கொடுக்கமாட்டா. சமாளிச்சுச் சடைஞ்சு போடுவா. ஆனால் இந்த விஷயத்தில் அம்மா அப்படி நடக்கத் தயாரில்லை. "ஐயாவுக்குச் சொல்லுவன்" பல தடவை எச்சரித்துப்பார்த்தா. நான் கேட்டால்தானே! கடைசியாக, மனம் பொறுக்காமல் ஒரு நாள் சொல்லியே போட்டா.

அப்ப நல்ல ஆறுதலாக நிதானமாக ஐயா சொன்னார். "அவன்ரை வீடு. அவனுக்கு வெயில் சுட்டால் வந்து படுக்கிறான். பிறகு போய்த் தோயிறான், அவன்ரை சுதந்திரம், நீயேன் கோபிக்கிறாய்!"

ஐயா உண்மையான மனதோடு அதைச் சொல்லவில்லை. என்னை நேரில் கண்டிக்கவும் அவர் விரும்பவில்லை. இதுதான் ஐயா என்பது எனக்குத் தெரியும். நான் எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டேன்.

அதன் பிறகு அந்த வழக்கத்தைத் தொடர்ந்து பின்பற்ற, நான் எதுவும் புரியாத ஒருவனல்ல.

# 10

தந்தையாரை அப்பா என்று அழைக்காத தலைமுறை நாங்கள். எங்களுக்கு ஐயாதான். இப்ப சிலர் ஐயா என்பது தாத்தாவை. எல்லோரும் தங்கள் அம்மா, ஐயாவை உயர்வாகவே நினைக்கிறார்கள். அது பிழை இல்லை. பெற்றவர்களை அப்படி நினைக்க வேணும். பெற்றவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள் பிள்ளைகள்தான். அவர்களுக்குத் தெரியும் பெற்றவர்கள் பற்றி சொல்ல வாய்ப்புக் கிடைத்தால் சிலர் புளுகுவார்கள். அவர்கள் பெற்றவர்கள் குடையில் ஒதுங்க நினைக்கின்றவர்கள். அப்படி ஏன் என்றால்....? அவர்களுக்கு இல்லாத பெருமை புகழ் இருப்பதாக வெளிச்சம் போட்டுக் காட்டுவார்கள் அந்த வெளிச்சத்தில் தங்கள் முகங்களைக் காட்டுவதுதான் அவர்கள் அந்தரங்கம்.

எனக்கந்தத் தேவை என்ன இருக்கிறது? ஏன் புளுக வேணும்! ஆனால் என்னைப் பற்றிச் சொல்லப்போகிறேன். ஐயாவைச் சொன்னால்தான் என்னை விளங்கும். குணநலன்களில் ஐயா சராசரி ஆள் இல்லை. கொஞ்சம் வித்தியாசமானவர். எதிலும் நீதி, நேர்மை, பொய் புரட்டுப்பிடிக்காது. செய்யுந் தொழிலை நேசிக்கிறவர். அதில் ஒழுங்கு, கண்ணியம் பார்ப்பார். அவர் இருந்தது ஏதோ பெரிய பதவி அல்ல. கண்மூடித்தனமாகச் சமூகம் கணிக்கும் கனவானுமல்ல. அவர் கள்ளிறக்கும் தொழிலாளி, அவருடைய செயல் ஒன்று அவர் இயல்பு சொல்லும். கள்ளு விடும் முட்டி, பானையைத் தண்ணீர் விட்டுச் சுத்தமாகக் கழுவுவார். பிறகு அரைமணி நேரம் அந்தப் பாத்திரங்களைக் கவிழ்த்துப்

பிடித்துக் கொண்டு நிற்பார். ஏன் இப்படி? என்றால் அந்தப் பாத்திரங்களுக்குள் ஊற்றப்போகும் கள்ளில் ஒரு சொட்டு நீரும் கலக்கக்கூடாது என்பார். கலந்தால் பாவம். இது அடிக்கடி நடக்கும். இது ஐயாவின் நடத்தைக் கோலத்துக்கு ஒரு சின்ன உதாரணம்.

தொழிலால் நல்ல வருமானம் பெருங்குடிமக்கள் பலரும் ஐயாவைத் தேடிவருவார்கள். ஐயாவுக்கு ஒரு கணிப்பு இருந்தது. ஆனால் பெரிய கஷ்டமான ஒரு தொழில். காலை, மாலை இரண்டு வேளைகளிலும் பனையில் ஏறி இறங்கவேணும். ஐயா உடலைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தார். தன்னை வருத்தினார். குறை இல்லாமல் பார்த்தார் எங்களை.

நாங்கள் ஆறுபேர். மூத்தவர்கள் மூவரும் ஆண்கள் தன் தொழிலை மனம் வைத்துச் செய்தார். ஆனால் நாங்கள் செய்யக் கூடாது என்ற முடிவுடன் இருந்தார். வெயில், மழை, காற்று, புயல் என்று பாராமல் கஷ்டப்படவேணும். அந்தத்துன்பம் எங்களுக்கு வேண்டாம் என்பது அவர் நினைப்பு அத்தோடு இன்னொன்று இது சாதித் தொழில். நாங்கள் செய்யக்கூடாது. தொழில் ஒரு சாதி அடையாளம். சில சாதிகளுக்கு அவர்கள் தொழில் பெருமை ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு அப்படி இல்லை. சாதியின் சின்னம் சாதி அடையாளம் தொழில் மாறினாலும் சாதி மாறாது. தொழிலைக் கேட்டறிந்து சுலபமாகச் சாதியை அறியலாம். சாதித் தொழில்கள் செய்வதற்குச் சிரமமானவை அதனால் ஒடுக்கப்பட்டசாதியைச் சேர்ந்த சிலர் சாதித் தொழில் செய்ய விரும்புவதில்லை. தொழிலை மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

சாதி அடுக்கமைப்பில் கீழே உள்ளவர்கள் தமக்கு மேலே உள்ளவர்களின் தொழிலைப் பின்பற்றி சாகிறார்கள். ஒடுக்கப்பட்ட சாதியார் சிலர் இடைநிலைச்சாதிக்குரிய தச்சுத்தொழிலைச் செய்கிறார்கள். தவில் அடிக்கிறார்கள். நாதசுரம் ஊதுகிறார்கள். மெக்கானிக் வேலை குறைஞ்சசாதிக்கு உரியது. ஒரு காலத்தில் முஸ்லீங்களுக்குப் பிறகு இப்ப இங்கே தையற்காரர்கள் குறைஞ்சசாதியார். இவர்கள் தொழிலால் சாதியில் உயர்ந்து விடவில்லை. மறுதலையாக ஒன்று சாதி அடுக்கமைப்பில் மிக அடிநிலையில் வைத்து எண்ணப்

படுகிறவர்கள் செய்யும் தொழில் செருப்புக்கட்டுவது. அந்தத் தொழிலை வேறு அடிநிலைச்சாதியும் இன்று செய்கிறது. ஆனால் சாதிமாறவில்லை. மேசன் (கொத்தனார்) தொழில் எல்லாச்சாதியும் செய்கிறார்கள். அரச உத்தியோகம் பார்க்கிறவர் என்ன சாதி? இன்று தொழில் சாதியைத் தீர்மானிக்கவில்லை. பிறப்பு சாதியைத் தீர்மானிக்கிறது. சில தொழில்கள் சாதியைக் காட்டிக் கொடுக்கின்றன.

இந்தத் தெளிவு ஐயாவுக்கு இருந்ததாகச் சொல்ல இயலாது. ஆனால் நாங்கள் சாதித் தொழில் செய்வதை ஐயா விரும்பவில்லை. நாங்கள் படிக்கவேணும். அரச உத்தியோகத்தில் இருக்கவேணும் என்பது ஐயாவின் விருப்பம்.

ஒரு காலத்தில் தவறணையில்தான் கள்ளு விற்கலாம். கள்ளுத்தவறணை சாராயத்தவறணை அரச உடமை. அரசு ஏலத்துக்கு விடும் வசதிபடைத்த மேட்டுக்குடியினர் ஏலத்தில் எடுப்பார்கள். ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள் கள்ளிறக்கிக் கொடுப்பார்கள். குறைந்த கூலிக்கு முதலாளி சுரண்டிக் கொழுப்பான். 1936இல் வடபிரதேசத்தில் தவறணை முறையை ஒழித்தார்கள் மரவரிமுறை அமுலுக்கு வந்தது. தொழிலாளி கள்ளிறக்கும் மரத்துக்கு குறித்த ஒரு தொகையை வரியாகச் செலுத்த வேண்டும். கள்ளை இறக்கி தானே விற்பனை செய்யலாம். தொழிலாளிக்கு இதில் நன்மை கள்ளிறக்கும் தொழிலாளர் குடும்பங்கள் உயர்ந்தன. கல்வி கற்கத் தொடங்கினார்கள் அவர்கள் பிள்ளைகள்.

இந்தச் சமயம் ஒலிக்க ஆரம்பித்தது இன்னொரு குரல். அது சமூகப்பாதுகாவலரின் குரல். மதுவால் சமூகம் அழிந்து போகிறது. தமிழர் பண்பாடு சிதைகிறது. மதுவை முற்றாக ஒழிக்க வேணும். காந்தியும் சொல்லி இருக்கிறார். மதுதான் சமூகத்தைச் சீரழிக்கிறது என்றார்கள்.

வெறி ஊட்டுவது மதுமட்டுமா? இன்னும் எத்தனை வெறிகள்! எத்தனை களி ஆட்டுகள்! வெறி ஆட்டுகள்! தேவர்கள் சோமபானம் அருந்தி மகிழ்ந்திருக்கின்றார்கள்.

காலங்காலமாக மது அருந்தியே வந்திருக்கின்றார்கள். இன்றேன் இந்தக் குரல்கள்?

மதங்களின் பெயரால் காந்தியின் பெயரால்... சமூக சீர்திருத்தத்தின் பெயரால்.

இந்தக் குரல்களுக்குள் ஓர் அந்தரங்கம்.

கள்ளிறக்கும் தொழிலாளர் குடும்பங்களின் முன்னேற்றத்தைக் கண்டு மனம் சகிக்கவில்லை. ஒடுக்கப்பட்டவர்களை எப்பவும் ஒடுக்கி வைத்திருக்க வேண்டும் என்ற வெறி. அதை வெளியில் எப்படிச் சொல்லலாம்? உள்ளொன்று வைத்து வெளியில் ஒன்று பேசுவது பண்பாடு!

இது எதுவும் தொழிலாளர்களை பாதிக்கவில்லை. ஆனால், இந்தத் தொழில் தன்னோடு போய்விட வேண்டும். தன்பரம்பரைக்கு வேண்டாம். ஐயா எண்ணினார். அக்கா மகனை ஐயா படிக்க வைத்தார். நன்றாகப்படித்தார். இதற்கிடையில் குழப்பிப் போட்டார். அண்ணாவுக்குப் படிப்பில் நாட்டமில்லை. அக்கா மகன் கிழக்கு மாகாணம் மூதூரில் தவறணை குத்தகைக்கு எடுக்க உதவி செய்தார். அண்ணாவை அவரோடு அனுப்பி வைத்தார்.

நான் படித்துக் கொண்டிருந்தேன். ஐயாவின் விருப்பம் போல. ஐயா பாவம்! கள்ளிறக்கி வரவேணும். அதை விற்பனை செய்யவேணும்.

மரவரிமுறை அமுலுக்கு வந்தது. அப்ப கள்ளிறக்க ஆரம்பித்தவர்களுள் ஐயா ஒருவர். கள் இறக்கிவந்து சொந்த வீடுகளில் வைத்து பலர் விற்பனை செய்தார்கள். ஐயா அதைச் செய்யவில்லை. வீட்டில் இருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் பிரதானவீதி, வீதி அருகே விற்பனை நிலையம். ஐயா போல வேறு சிலரும் அமைத்துக் கொண்டார்கள். விற்பனை செய்வதற்கென்று அவர்கள் ஆள்வைத்துக் கொண்டார்கள். அவர்கள் குடும்பத்து முதியவர்கள். பனை ஏற இயலாதவர்கள்.

அப்படி வசதியான ஆள் ஐயாவுக்கு இல்லை. கள் இறக்கிவர வேணும், விற்பனை செய்யவேணும். இரண்டையும் கவனிக்க முடியவில்லை. பெரியையா இருந்தார். அவரும் செய்து கொண்டிருந்தார், கள்ளிறக்கும் தொழில். அவர் ஓய்வாக இருந்தாலும் ஐயா அவரை வைக்கமாட்டார்

விற்பனைக்கு. பெரியையா ஒரு கொதியன். எல்லோரையும் எடுத்தெறிந்து பேசுவார் யாரையும் மதிக்கமாட்டார். விற்பனை செய்ய அவர் பொருத்தமான ஆள் அல்ல.

ஐயாவுக்குப் பிரச்சினை தொழிலை ஒழுங்காக நடத்த முடியவில்லை. நம்பிக்கைக்குரிய குடிகாரர்களை இருத்தி விட்டு கள்ளிறக்கப் போவார். ஐயா பாவம்! எங்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்தார். ஐயாவுக்கு உதவ விரும்பினேன். விளையாட்டிலும் எனக்கு நாட்டமில்லை. ஓய்வு நேரங்களில் புத்தகங்கள் வாசிப்பேன். படிப்பு பள்ளியில் படிப்பதுதான். மிகுதி நேரம் ஐயாவுடன் துணையாக நிற்பேன்.

நான் சிறுவன். மதுவிற்பனை செய்வது சட்டப்படி குற்றம், எடுத்துச் செல்வது குற்றம். நான் குற்றவாளி, இரண்டு குற்றங்களையும் செய்தேன். பொலீஸ், கலால் உத்தியோகத்தர் ஆகியோரிடம் மாட்டிக் கொண்டால் போச்சு நீதி மன்றம்வரை கொண்டு போவார்கள். கலால் உத்தியோகத்தர்களைச் சமாளிக்கலாம். கைக்குள் எதுவும் வைக்கலாம். வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். பொலீஸ் அப்படி இல்லை. தொகை பெரிதாக இருக்க வேணும். அதுவும் சில வேளை சரிவராது. அப்ப இருந்த பொலீஸ் அதிகாரி மகாபொல்லாதவர். பொன்னுத்துரை பெயர் கரடிப்பொன்னுத் துரை என்று சொல்லுவார்கள் நல்லகறுப்பு. வலுதடியன். அடர்த்தியான கண்புருவம் கால், கைகளில் நீண்ட ரோமம். பார்த்தால் கரடிபோலத்தான். வீதியில் மோட்டார் சயிக்கிளில் வருவார். சும்மா வீதியில் யாரும் நிற்கக்கூடாது. நின்றால் இறங்கி, கால் கைகளினால் உதைவிழும். அவர் மோட்டார் சயிக்கிள் சத்தம் கேட்டால் வீதி வெறிச்சோடும். எனக்குக்கை, கால் உதறத்தொடங்கி விடும். எங்காவது பதுங்கி ஒளித்துக் கொள்வேன். எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தும் என்ன! ஒருநாள் வசமாக மாட்டிக் கொண்டேன். போத்தலில் கள்ளுவிட்டு நிரப்பிக் கொண்டிருந்தேன். கலால் உத்தியோகத்தர் இருவர் சயிக்கிளில் வந்து திடீரென்று குதித்தார்கள். நான் திடுக்கிட்டுப்போனேன் தப்பி ஓடவழி இல்லை. ஆனால் ஒரு நம்பிக்கை, ஐயா இவர்களைச் சரிக்கட்டுவார்.

காதிதத்தையும் பேனாவையும் கையில் எடுத்துக்கொண்டு பெயரைக் கேட்டார் ஒருவர். ஒரு நிமிஷம் யோசித்தேன், பிறகு பெயரை மாற்றிச் சொன்னேன். வயது கேட்டார். உள்ளபடி சொன்னேன். பாடசாலை கேட்டார். மாற்றிச் சொன்னேன். வகுப்புக் கேட்டார். ஒன்று குறைத்துச் சொன்னேன். எல்லாம் குறித்துக் கொண்டார். ஐயா எங்கே எனக் கேட்டார்கள். கிட்டவுள்ள கள்ளிறக்கும் காணிக்குள் நிற்பதாகச் சொன்னேன். சற்று நேரம் தரித்துப் பார்த்தார்கள் ஐயாவின் வருகைக்காக. அவர்கள் அவசரப்படுத்த ஆரம்பித்தார்கள், நான் பலமாக ஐயாவுக்குக் குரல்கொடுத்தேன். ஐயா நின்றால் தானே பதில்தருவதற்கு! ஐயாவை அழைத்து வருகிறேன், அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு , அங்கிருந்து ஓடத் தொடங்கினேன் வீடு வந்துதான் தரித்தேன். நடந்ததை ஐயாவுக்குச் சொன்னேன். ஐயா அவர்களைத் தேடிக்கொண்டு புறப்பட்டார்.

எனக்கு நெருக்கடிகள் வந்தன. அப்பவும் நான் ஐயாவுக்கு உதவியாகத்தான் இருந்தேன். பாடசாலை விடுமுறையில் எனக்கு முழுநேரவேலை. ஐயா இறக்கும் கள்ளை விற்பனை நிலையத்துக்குக் கொண்டு செல்லவேணும். விற்பனை செய்வது சிரமமான காரியமல்ல. பெரிய போராட்டம் கள்ளை அங்கே கொண்டுபோய்ச் சேர்ப்பது. காலையில் போகவேணும். எங்கள் வீட்டுச் சூழலில் இறக்கின கள்ளை அப்ப கொண்டுபோக வேணும். அது நெருப்பாற்றைக் கடக்கிற வேலை சுமாரான பானைகளின் கழுத்தைப் பனை நாரினால் சுற்றிக் கட்டின தடம் அதில் இருந்து தூக்குவதற்கு வசதியாக நார்த்தூணம் கள்ளூ நிறைந்த பானைகளைத் தூணத்தில் பிடித்துத் தூக்குவேன். நடப்பேன் விற்பனை நிலையத்துக்கு. சற்று நேரத்தில் தசைநார்கள் வலிக்கும். கைநோவும் நிலத்தில் வைத்து ஒய்வெடுக்க இயலாது. மெதுவாக நடக்க இயலாது. சிக்குப்பட்டுப்போவேன் காவல் அதிகாரிகளிடம் வேகமாகப் போய்க் கொண்டிருப்பேன். இடையில் யாராவது கதை கொடுப்பார்கள். நின்று ஆறுதலாகப் பேசமாட்டேன். அப்படியும் சில விடாக்கண்டர்கள் விடமாட்டார்கள். இழுத்துப்பிடித்துக் கதைப்பார்கள்.

அப்படியான ஆள்தான் மண்வெட்டி மயில்வாகனம். அவரை மண்வெட்டி என்பார்கள். அதற்குள் ஒரு சின்ன மரியாதை கொடுத்து மண்வெட்டியர் என்றும் சொல்லுவார்கள். இந்தப் பெயரை ஏன் சூட்டினார்கள்? அது தெரியாது. பற்கள் நீண்டு மண்வெட்டிபோலக் கிடப்பதால் அப்படிப் பெயர் வந்திருக்கலாம். எனக்கு அவரை நல்லாத் தெரியும் மண்வெட்டியர் நிலபுலம் உள்ளவர். சொத்துப்பத்துக்கும் குறைவில்லை. பெரிய கமக்காரன் பிள்ளை இருவர். ஆண்கள் படித்து அரச உத்தியோகம் பார்க்கிறார்கள். அவர் எல்லாரோடும் இனிக்க இனிக்கப் பேசுவார்.

மைத்துனனோடு மாத்திரம் பொருந்திவராது. எங்கள் வீட்டுக்கு அண்மையில் பெரிய ஒரு பனங்காணி. மைத்துனனுக்கும் அவருக்கும் பங்குக்காணி பனைகளில் இருந்து பனம்பழங்கள் விழ ஆரம்பித்து விட்டால், இருவருக்கும் ஆரம்பித்துவிடும் போர். மைத்துனன் சரியான அடாதது இவருக்குரியதையும் அள்ளிக் கொண்டு போய்விடுவார். சண்டையிலும் அவர்தான் ஜெயிப்பார். அப்ப இவரைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்.

மண்வெட்டியர் எதிரில்வந்தார். மேனை நில் நில் என்றார். எனக்கு எரிச்சலாக இருந்தது என்றாலும் உதாசீனம் பண்ணிவிட்டுப்போக முடியவில்லை. மெல்லத் தரித்து நிற்கிறேன். என்னைப் பார்த்து அவர் முகத்தில் ஒரே மகிழ்ச்சி. "எடமோனை, நீ படிப்பு விட்டிட்டியோ?" கேட்கின்றார். அவர் அந்தரங்க மனம் எனக்கு விளங்குகிறது. வேண்டுமென்றே சொல்லுகிறேன். "ஓமோம் விட்டிட்டன்" "கெட்டிக்காரன் அதுதான் சரி, ஒரு கடிதம் எழுத கை எழுத்துப்போட தெரிஞ்சாப் போதுந்தானே! அந்தக்காலம் போலே பெருவிரல் அடையாளம் போடக்கூடாது. அம்பட்டன் பிள்ளைக்கு அதிட்டம் அடிச்சால் பத்து வீடு கூடச் சிரைப்பான் எண்டு சும்மாயே சொல்லி இருக்கிறான்கள். கொய்யாவுக்கும் நெடுக ஏலுமே! நீ தொழில் செய்யத் துடங்கி விட்டால் பத்துப்பனை கூட ஏறுவாய். கொஞ்சம் சம்பாதிச்சுப் போடுவியள் என்ன

சொன்னாலும், தன் தொழில் விட்டவன் சாதியில் எளியவன். ஒரு காலமும் தன்ரை தொழிலைக் கைவிடக்கூடாது". மண்வெட்டியர் உபதேசம் பண்ணுகின்றார்.

எனக்கு வலிக்கிறது. அவரைக் கழற்றிவிட்டு நடக்க ஆரம்பிக்கிறேன்.

"எடமோனை நீதான் சரியான ஆள், தொழிலைக் கவனமாகப் பார்" அவர் சொல்லிக் கொண்டு நிற்கிறார். செவிகளில் வந்து விழுகிறது.

எனக்குள் நான் சிரித்துக் கொள்கின்றேன். நல்ல பழமொழி. "தன் தொழில் விட்டவன் சாதியில் எளியவன்!" அப்படியானால் மண்வெட்டியின் மக்கள்? அவர்களும் சாதியில் எளியவர்கள் தானே!

# 11



“வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்” என்பது மிச்சம் பெரிய உண்மை. நாங்கள் அதை ஒத்துக் கொள்ள வேணும். நாங்கள் வாசித்து வளர்ந்தவர்கள். மறுத்தால் எங்களை நாங்கள் குறைச்சுப் போடுவோம். சிறிசில் இருந்து வாசித்ததெல்லாம் தேவையில்லாத வேலையாகிப் போய்விடும். அதுதானே எங்கடை பலம். எங்களுக்கு அதுமகா வாக்கியம். வாசிக்காதவன் ஒத்துக் கொள்ளுவானோ சொல்லேலாது! அவன் மறுக்கக் கூடும். சொத்துச் சேர்ப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்” என்று சொல்லக்கூடும். அவன் சொல்லுகிறதையும் மறுக்கேலாது. எந்தமகா வாக்கியத்துக்கும் மற்றப்பக்கம் ஒன்றுண்டு. அதை நாங்கள் யோசிக்கிறதில்லை. யோசிச்சால் கனசங்கதி விளங்கும்.

வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறது மட்டுமே நடக்கிறது! வாசிப்பதால் மனிதன் சோம்பேறி ஆகிறான். என்றும் சொல்லலாம். உடல் உழைப்புச் செய்யாதவனைச் சோம்பேறி எண்டு தானே சொல்லுறார்கள். அந்தச் சோம்பேறிக் குணம் இப்பவும் என்னை விட்டுப்போகவில்லை. வீட்டிலேயும் அது பிரச்சினை இல்லை. ஐயா உடம்பு நொந்து உழைச்சவர். உடம்பு நோகாமல் எங்களை வளர்த்தவர். அப்பிடி வாழவும் வைச்சார். அதுதான் அவர் செய்த தியாகம். அவர் ஒருநாள் சொன்னது இப்ப ஞாபகம் வருகிறது.

நான் அப்ப எட்டாம் வகுப்பு படிச்சுக் கொண்டிருக்கிறேன். எங்கடை வகுப்பில் ஒரு மாணவன். என்னோடை நல்ல சிநேகிதம். வேறு பள்ளியில் படிச்சுவிட்டு ஆறாம் வகுப்பில்

வந்து சேர்ந்தான். பக்கத்து ஊர்க்காரன். லீவு நாட்களெண்டால் அவனுக்கு ஒரே கொண்டாட்டம். பெரியாக்களோடை சேர்ந்து கூலிக்கு வெங்காயம் நடப்போவான். காலையில் போனால் மத்தியானம் முடிஞ்சுபோம். அஞ்சு ரூபாக் கூலி. அந்த நாளையிலே அது பெரிய காசு. இப்போதையில் ஐந்நூறு ரூபா பெறுமதி. என்னையும் தன்னோடை வரச்சொல்லி ஆய்க்கிணை பண்ணுவான். வீட்டிலே சம்மதிப்பினமோ என்று எனக்குப் பயம். அஞ்சு ரூபா உழைக்கிற ஆசை மனதுக்குள்ளே. அவன் பண்ணின அரையாண்டம் பொறுக்கேலாமல் காசாசையிலே வாறன் எண்டு ஒருநாள் சொன்னேன். அன்று வெள்ளிக் கிழமை, சனி, ஞாயிறு இரண்டுநாள் வேலைக்குப் போனால் பத்து ரூபா கூலி, கணக்குப் போட்டேன். மனதுக்கு நல்ல புளுகம். ஐயா கேட்டுக் கொண்டிருக்க, அம்மாவுக்குச் சொல்லுகிறேன் நாளைக்கு நான் வெங்காயம் வைக்கப்போறன்.

அம்மா நிமிர்ந்து பார்த்தா. ஒண்டும் பேசவில்லை. ஐயா காதில் விழுந்ததாகவும் காட்டிக் கொள்ளவில்லை. ஐயாவுக்கு நேரில் சொல்லவும் பயம். அம்மாவுக்குச் சொன்னால், அம்மா எப்பிடியும் என்னைக் காப்பாத்திப் போடுவா. இப்ப இரண்டு பேரும் வாய் திறக்கவில்லை. "மௌனம் சம்மதம்" என்றுதானே ஆரோ சொல்லி இருக்கினம்!

மற்றநாள் சனிக்கிழமை காலமை பலார் பத்தி விடியிறதுக்கு முந்தி நான் படுக்கையாலே எழும்பினேன். ஐயா எனக்கு முந்தி எழும்பி, தொழிலுக்குப் போக ஆயித்தம் பண்ணிக் கொண்டிருந்தார். நான் காலக் கடன்களையும் முடிச்சு, அம்மாவிடம் தேநீரும் வாங்கிக் குடித்து விட்டேன். என்ரை ஆரவாரங்களைப் பார்த்து அம்மா சொண்டுக்குள் சிரிச்சுக் கொண்டுதான் இருந்தவ. தேநீர் தரயுக்கெயும் சிரிச்சவ. அவ சந்தோசத்திலே சிரிக்கிறா எண்டுதான் நான் நினைச்சன். அப்பதான் ஐயா கேட்கிறார், "ஏன் வெள்ளெண நேரத்துக்கு எழும்பி நிக்கிறாய்?" நான் முதல்நாள் சொல்லி வைச்ச நம்பிக்கையில், "வெங்காயம் வைக்கப் போறன்" என்கிறேன்.

ஐயா என்னை ஒரு பார்வை பார்த்தார். சிவபெருமானின் நெற்றிக்கண் பார்வையும் அப்பிடி இருக்காது. நான் வெலுவெலுத்துப் போனேன்.

"நீ போய், அவன் ஆற்ரையும் தோட்டத்திலே கூலி வேலை செய்யிறதுக்கும், அவன்களிட்டை சிரட்டையிலே

தேத்தண்ணி வாங்கிக் குடிக்கிறதுக்குமாகத்தான், நான் இப்பிடிக் கஷ்டப்பட்டு உழைக்கிறன்... என்ன? நீ போய் உன்ரை வேலையைப்பார். படி..."

நான் சத்தியமாப் பயந்து போனேன். ஐயா எங்களை இப்படிக் கோபிக்கிறவரில்லை. எங்களை உடம்பு நோகாமல் வளர்த்தவர்.

நான் கொஞ்சம் வளர்ந்த பிறகு, ஐயா தனக்குதவியாக என்னைக் கூட்டிக் கொண்டு போகிறதில்லை. அம்மாவுக்கு உதவி மூத்த தங்கை, கொஞ்சம் வளர்ந்து விட்டாள். எப்ப பார்த்தாலும் புத்தகமும் கையுமாக நான். பாடப்புத்தகமல்ல. வேறு புத்தகங்களை விரும்பி வாசித்துக் கொண்டிருப்பேன். பாடப்புத்தகங்களை இரவல் வாங்கிப் படிக்கிறது ஐயாவுக்குப் பிடிக்காது. "இரவல் தந்தவன் கேட்டால், திருப்பிக் குடுத்துவிட்டு நீ என்னென்டு படிப்பாய்?" என்று கேட்பார். தேவையான புத்தகங்கள் எல்லாம் வாங்கிறதுக்கு காசு தருவார். நான் வாசிக்க மற்றப் புத்தகங்கள், சஞ்சிகைகளுக்கு எல்லாம் அம்மாவிடம் காசு வாங்கிக் கொள்வேன். அம்மா அதிகம் படிக்காதவ. ஆனால் நான் கேட்டபோதெல்லாம் முகம் கோணாமல் காசு தந்து கொண்டிருப்பா.

அந்த அம்மாவுக்கே என்ரை வாசிப்புப் பழக்கம் பிடிக்கயில்லை. கல்லூரி விடுமுறை காலத்தில் எழுந்து சாப்பிட்டு முடிந்து புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கன்வேஸ் கட்டிலில் சாய்ந்தமர்ந்து வாசிக்க ஆரம்பிப்பேன். நடுப்பகல் சாப்பாடு சமைத்து முடிய, குளித்துவிட்டு வந்து சாப்பிடுவேன். பிறகு புத்தகத்தோடு கன்வேஸில் அமர்ந்து விடுவேன். இரவு படுக்கைக்குப் போகும்வரை புத்தகமும் கையுமாக இருப்பேன்.

வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் கடற்கரை. சில தினங்களில் மாலைவேளை கடற்கரைக்குப் போய் மணலில் அமர்ந்திருந்து படிப்பேன். வானம் எது? கடல் எது? என்று தெரியாத வேளை. வானம் சிவந்து கிடக்கும். சூரியன் கடலுக்குள் மெல்ல இறங்கிக் கொண்டிருக்கும். பாரதிதாசனின் பாடல் ஒன்று அப்ப எனக்கு நினைவுக்கு வரும். "நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து... என்று துடங்கிற பாடல். கடைசி வரிகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுவேன்" "காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கி கனல் மாறிக் குளிரடைந்த

ஒளிப்பிழம்போ!" என்று பாரதிதாசன் கண்ட காட்சியைக் கண்டு மகிழ்வேன்.

என்ரை 'போக்கு' சராசரியாக அம்மாவுக்குப் படவில்லை. என்னத்துக்கு எந்த நேரமும் புத்தகத்தோடை சாகிறாயப்பு? உடம்பாறாக் கொஞ்ச நேரம் படன்" என்று சில நேரம் சொல்லுவா. அவ சொல்லு எனக்குக் காதில் விழுந்தாத்தானே! கடைசியாக, மனம் பொறுக்காமல் சொன்னா "உந்தக் கட்டிலைக் கொத்தி நான் அடுப்புக்குள்ள வைச்சாத்தான் நீ திருந்துவாய்" சொன்னா அவ்வளவுதான். அம்மா அப்பிடிச் செய்யவில்லை. நான் திருந்தவுமில்லை.

எனக்கொரு நண்பன். பக்கத்து ஊர். என்னை விட மூத்தவன். அடிக்கடி என்னிடம் வருவான். என்னுடைய புத்தகங்களை இரவல் வாங்கிக் கொண்டு போவான். அவனும் புத்தகங்கள் இடையிடையே தருவான். வாசிக்கக் கேட்டால் இல்லை என்று சொல்லுகிற பழக்கம் இன்றைவரை இல்லை. இதனாலே நான் இழந்த புத்தகங்கள் கனக்க. அந்த நண்பனுக்கு நான் புத்தகங்கள் இரவல் கொடுத்துக் கொண்டிருந்தேன். அவன் விரும்பி வாசிக்கிறான் என்றது என்ரை எண்ணம். கொஞ்சக் காலத்துக்குப் பிறகு அவனோடை பேசிக் கொண்டிருந்த நேரங்களில் எனக்கொரு சமுசயம். அவன் உண்மையாக வாசிக்கின்றானா? என்ற ஐமிச்சம். ஒரு நாள் அவனிடம் நேரில் கேட்டேன்.

"என்ன மச்சான், புத்தகமெல்லாம், நீ வாசிக்கிறாயா?"
"நான் வாசிக்காமல் வேறை ஆர் வாசிக்கிறது" திரும்பிக் கேட்டான்.

"நீ திருப்பித் தந்த புத்தகத்துக்குள்ளே ஒரு துண்டுக் கடதாசி கிடந்தது..." என்கிறேன்.

"எங்கே மச்சான் அந்தத் துண்டு?" அவன் பரபரக்கிறான்.
"அதைக் காட்டு மச்சான் பார்ப்பம்"

"நீ உண்மையைச் சொல்லு!"

"எனக்கொரு ஆள் இருக்கிறா மச்சான். அவவுக்குத்தான் உன்ரை புத்தகங்களை வாங்கிக் கொண்டுபோய்க் குடுக்கிறனான்"

"லவ்வா"

"ஓமோம்" ஒத்துக்கொண்டான்.

அவனுக்கு நான் சொன்ன கடதாசித் துண்டைக் கடைசிவரை கொடுக்கவில்லை. அப்படி ஒன்று என்னிடம் இருந்தால் தானே, கொடுப்பது?

அதுக்குப் பிறகும் அவன் புத்தகம் இரவல் வாங்கிக் கொண்டிருந்தான். இறுதியாக மூன்று புத்தகங்கள் அவன் வாங்கிக் கொண்டு போனதாக ஞாபகம். அதில் ஒன்று மகாத்மா காந்தியின் "சத்திய சோதனை". பல பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம். அப்ப ஒரு ரூபா மலிவுப் பதிப்பாக வெளிவந்தது. அந்த நண்பன் காதலியை மனைவி ஆக்கிக் கொண்டான். அதுக்குப் பிறகும் புத்தகம் இரவல் வாங்கிக் கொடுக்க அவனுக்கென்ன விசரா? அந்த விசர்தானே தீர்ந்து போச்சு. எனக்குப் புத்தகம் வந்து சேரவில்லை.

எனக்கிருந்து வரும் வாசிக்கும் பழக்கம் ஒரு காதல் திருமணம் நிறைவேறத் தூது போயிருக்கிறது.

வாசிப்புப் பழக்கம் எனக்குத் தந்த இன்னொரு அநுபவம். எனது வீட்டில் இருந்து பருத்தித்துறை பட்டினம் மூன்று மைல் தொலையில் ஒரு நாள் மாலைவேளை கல்லூரியால் வந்து பருத்தித்துறைக்குப் போனேன். மாலைப்படுகிற நேரம் என்பதால் சயிக்கிள் வண்டியில் போவதைத் தவிர்த்து விட்டு பஸ்ஸில் போய்ச் சேர்ந்தேன். நான் போன காரியம் முடிந்த பிறகு வழமை போலப் புத்தகக்கடை நோக்கிப் போனேன்.

இப்ப வங்கிகள் இருக்கும் இடத்தில் வடகிழக்கு மூலையில் அந்த புத்தகக்கடை, பெரியகடை. புத்தகக் கடைக்கு ஒருவர் போனால் தேவையான புத்தகத்தைக் கேட்டறிந்து எடுத்துக் கொடுத்து வியாபாரத்தை முடிப்பார்கள். என்னிடம் "என்ன புத்தகம் வேணும்?" என்று கேட்டால், உண்மையில் பதில் சொல்லத் தெரியாது. புத்தகக் கடையை ஒரு தடவை துழாவி, வேண்டியதைத் தெரிவு செய்வேன். புத்தகக்கடைக் காரருக்கு அது தெரியும். கடைக்குள்ளே போய் புத்தகங்களைப் பார்வையிட என்னை அனுமதிப்பார்கள்.

அன்றைக்கும் அப்படித்தான். நான் உள்ளே போய் புத்தகங்களைப் பார்வையிட்டுக் கொண்டு நின்றேன்.

தற்செயலாக பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் "மனோன்மணியம்" நாடக நூல் கண்ணில் பட்டது. எனக்கு உண்டான ஆனந்தத்தை சொல்லேலாது. அந்த நூலைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தது போல மகிழ்ச்சி.

என்னுடைய தமிழ் ஆசிரியர் வகுப்பில் அந்த நூல் பற்றிச் சொல்லி இருக்கிறார். அந்த ஆசிரியர் முந்தி ஒருமேடைப் பேச்சு எழுதித் தந்திருக்கிறார். நான் பேசியிருக்கிறேன். அந்தப் பேச்சில்,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர் எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்..."

என வரும் தமிழ்த்தெய்வ வணக்கப்பாடல் இடம் பெற்றிருந்தது. அது எனக்கு மனப்பாடம். அதனாலும் எனக்கு ஒரு கவர்ச்சி இருந்திருக்கவேணும். ஒரேயொரு பிரதி மாத்திரம் அந்த நூல் அங்கே இருந்தது. ஒரு புதையல் கிடைத்துவிட்ட புளுகம் எனக்கு. உடனே அந்தப் புத்தகத்தைப் பணம் கொடுத்து வாங்கினேன். புத்தகக்கடையை விட்டு வெளியே வந்தேன். பொழுது மைமல்படுகிற நேரம். பஸ் நிலையத்துக்கு வந்தேன்.

அப்பதான் எனக்கு உறைத்தது. பஸ்ஸீக்கு என்னிடம் காசில்லை. யாரிடமாவது கைமாத்தாக வாங்கக் கூடிய பழக்கம் இல்லை. பஸ் நிலையத்தில் எனக்கு அறிந்தவர்கள் ஆரும் நிற்கிறார்களா? என்றுத் தேடிப் பார்த்தேன். அப்பிடி ஆரும் தென்படவில்லை. என்ன செய்யலாம்! யோசிச்சுப் பார்த்தேன். எனக்கு ஒருவழிதான் தென்பட்டது. வேறுவழி இல்லை. மனோன்மணியத்தைக் கையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

கடற்கரையை அண்டியே அந்த பிரதான வீதி. மாலைநேரக் கடற்காற்றின் கூதல். அவ்வளவு நீண்ட தூரம் நடந்தறியாது வளர்ந்த பழக்கம். இடையில் இன்பருட்டிக்கு நேரே உள்ளே சற்றுத்தூரம் போனால் ஆசைவீடு. அம்மாவின் தமையன் வீடு. அம்மா பிறந்த வீடு. அங்கே போகலாம். அந்த நேரத்தில் போனால் வேண்டாத கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேணும். விறுவிறு என்று வீடு நோக்கி நடந்தேன். இந்தக் காலம் போலப் பிந்திப் போனால் பயந்து நடுங்கிற காலமல்ல அப்ப. எண்டாலும் வீட்டிலே காத்துக்கொண்டிருந்தார்கள். இரவு ஏழு மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன். பஸ் பிந்திப் போச்சுண்டு பொய் சொன்னேன். மற்ற நாள் படுக்கையால் எழும்ப முடியவில்லை. கால்கள் வலிச்சுது. நல்ல நூல்களைத் தேடி வாசிக்கும் வெறி எனக்கு. வெறிகாரனுக்கு வலி தெரியுமா?

# 19

வாத்தியார் வந்த கதை இருக்கிறது. உபாத்தியாயர், உபாத்தியார் ஆகி வாத்தியாராக வந்தவர், முந்தி சட்டம்பியார் என்றும் சொல்லுகிறது. வலு பொல்லாத ஆட்கள். அடிகாரர் கொடுமைக்காரர். ஆனால் ஊருலகத்தில் நல்லமதிப்பு. கஞ்சிக்குப் பயறுபோட்டது போலத்தான் பிரம்பில்லாதவை. எல்லாற்றை கையிலும் பிரம்பிருக்கும். பிரம்பு காசு குடுத்து வாங்கிறது. “அடியாத மாடு படியாது” என்று சொல்லுவார்கள். அது அவர்களின் கல்விக் கொள்கை. அடித்தால் மாடும் படியாது என்று சொல்லேலாது என்றது கொள்கை விளக்கமாக இருந்திருக்கக் கூடும். பிறகுதான் படியாது என்றது படிக்கிறதல்ல. புத்தி வளர வளர எல்லாத்துக்கும் புது விளக்கந்தான். ஏன் இந்தத் திருக்குறளுக்கு எத்தினை விளக்கம்? இந்த விளக்கங்களாலே “திருவள்ளுவர் திடுக்கிடுவார்” என்றொரு புத்தகம் வந்தது.

வாத்தியாரின் அடிக்கு என்ன புதுக்கருத்து? வாத்தியார் சொல்லிச் சொல்லி அடித்ததுதான் கருத்து. அடி என்றால் ‘அந்த இந்த மாதிரி’ என்று சொல்லேலாது. அப்பிடி அடி, அதுக்கு உதாரணம் இல்லை. வேணுமென்றால் இப்ப சொல்லுகிறது போல ‘அந்த மாதிரி’ அடி என்னலாம். ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒழுக்கம் முதல். பிறகுதான் படிப்பு. அவர்களின் அடியில் நிமிர்ந்தவை கொஞ்சப்பேர். சிலபேர் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டினம். வாத்தியார் அடித்தால் ஆருக்குப் போய்ச் சொல்லுகிறது? ஐயா, அம்மாவும் வாத்தியார் பக்கந்தான். வீட்டில் சொல்லி அங்கேயும்



4

ஆறேலாது, பிறகு வாங்கிக் கட்டவேண்டி வரும். வாத்தியார் பிழைவிடமாட்டார் என்றது முடிஞ்சமுடிவு. அது பிழை என்றும் அப்ப சொல்லேலாது.

இப்ப என்றால் 'கோட்'டிலே வழக்குப் போட்டு விடுவினம். மாஸ்ரர் 'கோட்'டுக்குப் போவேணும். அடித்தால் சிறுவர் துஷ்பிரயோகம் என்று சொல்லுவினம். இதென்ன துஷ்பிரயோகமோ? துஷ்பிரயோகம் செய்கிறது அடிச்சா? உண்மையா விளங்கவே இல்லை. துஷ்பிரயோகம் என்று இப்ப கனசங்கதிகள் சொல்லுகினம், எல்லாம் குழப்பமாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் ஒரு குமர்ப்பிள்ளையோடு கதைக்கேலாது. அதுகும் தனியக் கதைச்சாப் போச்சு. உடனே விசாரணை. பிறகு தண்டனை. சில நேரம் பள்ளியில் இருந்து கலைப்பு. அதுக்குப் பிறகு தெருவில் நின்று "தேவதாஸ்" கதை சொல்ல வேண்டியதுதான். புத்தகங்களுக்குள்ளே மறைச்சுக் கிறைச்சு ஒரு பொம்பிளைப் படம் வைத்திருக்கேலாது. கண்டால் துலைஞ்சுது. அடிச்சுக் கொல்லுவினம். அல்லது வீட்டுக்கு அனுப்புவினம்.

பொம்பிளைப் படத்தால் எனக்கொரு அனுபவம், அதைச் சொல்லவேணும், சொல்லுகிறதில் எனக்கொரு வெட்கமுமில்லை.

நான் அப்ப கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். எச்.எஸ்.ஸி. வகுப்பு. இப்பவுள்ள ஏ.எல். அன்றைக்கொரு வெள்ளிக்கிழமை. காலை நேரம் பிரார்த்தனை நடக்கும். பிரார்த்தனையைத் தவிர்க்கிறது என்னுடைய நோக்கம். திராவிடக் கழகப் புத்தகங்கள், இங்கர்சால், எமிலிசோலா, வெ. சாமிநாதசர்மாவின் மொழிபெயர்ப்புகள் என்று நிறைய வாசித்திருந்தேன். புதிதாகப் புத்தகங்கள் படிக்கிறவர்களுக்கு வாறது ஒரு வியாதி. "எல்லாம் தெரிஞ்ச நோய்". அப்ப எனக்கு இன்னொரு விதமான போக்கு. மதம் என்றால் வெறுப்பு. கோயிலுக்குப் போறதில்லை. அதுக்கு வேறு நியாயமும் இருந்தது. எங்களைத் தானே கோயிலுக்குள்ளே விடுகிறதில்லை. முதல் நாள் வாங்கின புத்தகமும் கையில் இருந்தது. தாமதமாகக் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தேன். பிரார்த்தனை தொடங்கி விட்டது.

நான் வகுப்பறைக்குள்ளே போய் புத்தகங்களை வைத்து விட்டு, புதிய புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். தொடராகப் பல வகுப்பறைகள், குறுக்குச் சுவர்கட்டிப் பிரிக்கப்பட்டிருந்தன. நீட்டு விறாந்தை. விறாந்தைப் பக்கம் உயரமில்லாத சின்னச் சுவர். எதிர்ப்பக்கம் முக்காற் சுவர் கொஞ்ச நேரம் கழிஞ்சிருக்கும். உப அதிபர் விறாந்தையில் வந்து கொண்டிருந்தார். கையில் பிரம்பு. பிரார்த்தனைக்கு மட்டமடிச்சுப் போட்டு இருக்கிறவர்களுக்கு 'இரண்டு குடுத்து' அனுப்பி விடுகிறது அவர் வருகையின் நோக்கம் வளர்ந்தவர்கள் என்று பார்க்கமாட்டார். நான் இண்டைக்கு வாங்கப் போகிறேன். புத்தகத்தில் முழுக்கவனமாக இருப்பதுபோல அவரைக் கவனியாது இருந்தேன். ஒவ்வொரு வகுப்பறையாக அவர் பார்த்துக் கொண்டு வந்தார். எனது வகுப்பறைக்கு அருகே வந்தார். நான் இருப்பதைக் கண்டு கொண்டார். ஆனால் காட்டிக் கொள்ளாமல் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டு கடந்து போனார்.

அப்பா... நின்ற மூச்சு எனக்குத் திரும்பி வந்தது. தப்பி விட்டேன். நிம்மதியா மூச்சு விட்டுக் கொண்டு புத்தகத்துள் புகுந்தேன்.

எல்லாம் சில விநாடிகள்தான். போனவர் சடாரென்று திரும்பி வந்தார். அவருக்கு முகம் இறுகிச் சிவந்திருந்தது. கண்களில் கோபக்கனல். விறாந்தையில் நின்று பிரம்பை நீட்டி, "அந்தப் புத்தகத்தைக் கொண்டு வா" என்றார். நான் பணிவாக எழுந்து வகுப்பறைக்கு வெளியே வருகிறேன். புத்தகத்தை அவர் கையில் கொடுத்துவிட்டு அடக்க ஒடுக்கமாக நின்றேன். வாங்கினவர் அட்டைப்படத்தைக் கவனமாகப் பார்க்கிறார். புத்தகத்தை விரித்து இடையிடையே படித்துப் பார்க்கிறார். அவர் முகம் மாறுகிறது. கோபம் மாறி மலருகிறது. என்னை நெருங்கி வந்து புத்தகத்தைக் கையில் தருகிறார். எனது தோளில் ஆதரவாக மெல்லத் தட்டுகிறார். "போயிருந்து படி" சொல்லிப் போட்டு திரும்பிப் போகிறார்.

நான் திரும்பவும் வந்து எனது ஆசனத்தில் அமருகிறேன். அந்தப் புத்தகத்தின் அட்டைப் படத்தை திரும்பப் பார்க்கிறேன்.

நல்லவடிவான ஒரு பெண்ணின் உருவம், அந்தப் படம், என் மீது சந்தேகத்தை அவருக்குக் கிளப்பி விட்டது. அட்டையில் அழகான பெண்ணின் உருவம் தாங்கின அந்தப் புத்தகம் எது தெரியுமா?

கலைஞர் மு. கருணாநிதி எழுதின 'குறளோவியம்'. வாசிக்கிறதால் நன்மை மட்டுமா கிடைக்கும்? மாறுபாடாகவும் கிடைக்கும். எனக்கு அப்பிடிக்கிடைத்திருக்கிறது. அந்த ஓலத்தைச் சொல்லாமல் விடக்கூடாது.

ஒரு நாள் ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை. பாடம் நடக்கவில்லை. எங்களுக்கு ஒரே கொண்டாட்டம். எங்கள் வகுப்பறையில் ஒரு பக்கத்தில் மூன்று வரிசை. எதிர்ச்சுவரில் கரும்பலகை. கரும்பலகைக்கு முன்னால் கொஞ்சம் இடது பக்கம் அண்டி ஆசிரியர் மேசை. இப்பபோல பெம்பிளைப் பிள்ளையள் கனக்கப்படியாத காலம். எங்களுடைய பக்கத்து முன் வரிசை ஒன்றிலே மாத்திரம் பொம்பிளைப்பிள்ளை. நாங்கள் கதைக்கிறதெல்லாம் அவர்களுக்குக் கேட்கும். கள்ளியள், கேளாததுபோல கேட்டுக் கொண்டிருப்பினம்.

நான் முதல்நாள் பெரியாருடைய புத்தகம் ஒன்று வாசித்தேன். அச்சுப்பதித்த புத்தகம் எனக்குக் கிடைக்கவில்லை. இன்றுவரை அச்சில் நான் பார்க்கவில்லை. அருமையான ஒரு புத்தகம் கிடைத்து, அதைக் கையெழுத்தில் பிரதிபண்ணி வைத்திருந்தார் ஒரு நண்பர். அந்தப் பிரதி கிடைத்தது படிக்க. 'மரணத்தின் பின்' என்பதுதான் புத்தகம். ஈ.வெ. இராமசாமிப் பெரியார் எழுதியது. சமயம் சொல்லும் உயிர் பற்றிய கருத்துக்களுக்கு அவர் உடன்படவில்லை, எல்லாவற்றையும் அவர் மறுத்தார். பிறகு நான் படித்த மார்க்ஸிஸக் கருத்துகளோடு ஒத்துப் போனார்.

நான் அந்தப் புத்தகம் பற்றிச் சொன்னேன். எழுதின பெரியாரைப் பற்றிச் சொன்னேன். எனக்கு முன்வரிசையில் இருந்த ஒருவன் எப்போதும் குறும்பு செய்கிறவன். நான் பெரியார் பற்றிச் சொன்னது கேட்டு, அவன் தனக்கு முன்வரிசையில் இருந்த மாணவிகளுள் ஒருத்தியைக் காட்டி 'பெரியார் இஞ்சை இருக்கிறார்' என்றான். வகுப்பு முழுக்க 'கொல்'லென்று சிரிப்பொலி. அவள் 'சட்'டென்று பின்புறம்

திரும்பி அவனைப் பார்த்து முறைத்தாள். அவள் ஒரு குண்டுப் பெட்டை, கட்டை உருவம், தடிச்ச உடம்பு. அவனுக்கு சொந்த மைச்சினி, இடையிடையே அவளைச் சீண்டிக் கொண்டிருப்பான். அவள் திரும்பி முறைப்பாள். அவள் பார்க்க வேணுமென்றுதான் அவன் சுறண்டிக் கொண்டிருக்கவேணும். அன்றைக்கும் வழக்கம் போல. ஆனால் எல்லோரும் சிரிச்சது அவளுக்கு வெட்கமாகப் போச்சு. மேசையிலே படுத்திட்டாள், என்றைக்கும்போல. அதுக்குமேல் ஒன்றுமில்லை என்று நான் நினைத்தேன்.

கைகேயின் மனத்தைக் கூனி மாற்றினாள் என்கிறது இராமாயணம். பலரும் அறிந்த கதை. ஆனால் நான் நேரில் பார்த்தேன். பக்கத்தில் இருந்த கூனிகள் ஏதேதோ சொல்லி அவள் மனதை மாற்றினார்கள். குண்டுக் குமரி குலுங்கி அழத்தொடங்கினாள். அவ்வளவோடு விட்டார்களா? அவனைத் தூக்கி நிறுத்தாத குறை. மைத்துனனுக்கு "பூசை" வாங்கிக் கொடுக்க விருப்பமில்லாமல் இருந்திருக்கலாம். ஒரு கூனியால் கைகேயி தடுமாறிப் போனாள். ஐந்து கூனிகள் சேர்ந்தால் அவளைச் சும்மாவிடுவார்களா? அவளை எழுப்பி அதிபரிடம் அனுப்பினார்கள். இலட்சுமணன் அரிஞ்சு போட்டு விட்ட சூர்ப்பனகையாட்டம் அவள் அழுது கொண்டு போனாள்.

அழைப்பு வந்தது அதிபரிடம் இருந்து. அவனுக்கு மாத்திரமல்ல எனக்குந்தான். இருவரும் போனோம். அதிபர் விசாரணை செய்தார். எனக்கென்ன பயம்? நானென்ன தவறு செய்தேன்? தயங்காமல் சொன்னேன். நடந்ததெல்லாம். அவன் ஒன்றும் பேசவில்லை. அதிபர் அமைதியாகக் கேட்டார். அவர் முகத்தைப் பார்க்க மனதில் இருப்பது ஒன்றும் விளங்கவில்லை. என்னுடைய வாய்ப்பிறப்பு முடிந்தது. மேசையில் கிடந்த பிரம்பை எடுத்துக் கொண்டு அதிபர் எழுந்தார். எனக்கு விளங்கி விட்டது. இன்றைக்கு மச்சான் 'பிரப்பம்' பழம் தின்னப்போறான். நல்ல சாப்பாடு. உறைப்பான மூன்று அடி. அவன் சிரிச்சுக் கொண்டு வாங்கினான்.

பிறகு அதிபர் என் பக்கம் திரும்பினார், "நீட்டு கை" என்றார். நான் திகைத்துப் போனேன். ஒரு குற்றமும்

செய்யாதவன் நான். ஆனால் மறுக்கேலாது. கையை நீட்டினேன். இரண்டு விழுந்தது. என்ன பாவமோ? கம்பராமாயணத்தை தீயில் இட்டுக் கொளுத்தவேணும் என்னும் 'தீ பரவட்டும்', கம்பனுடைய ஆபாசங்களை மட்டும் புட்டு வைக்கும் 'கம்பரசம்' எல்லாம் படித்திருக்கிறேன். அதிபர் அறிந்தால் சாட்டோடை சாட்டாக இன்னும் சாப்பாடு கிடைத்திருக்கும்.

நான் அந்த இரண்டடியோடு தப்பித்துக் கொண்டேன். அவன் அந்த மூன்று அடிகளோடு தப்பி இருக்க முடியாது. பிறகுதான் எனக்கது தெரியும். அந்த மைச்சினி அவன் மனைவியானாள் என்று. அதன் பிறகு அவனை என்னபாடு படுத்தினாளோ? ஆருக்குத் தெரியும்!

நல்ல மேடை பேச்சென்றால் இப்பவும் நான் விரும்பிக் கேட்பதுண்டு. எங்கே கூட்டம் நடந்தாலும் கேட்க, அந்த நாளயிலே போவேன். மனதுக்கு விருப்பமான மூன்று பேச்சாளர்கள் அப்ப இருந்திருந்தார்கள். அரசியலும் சமூகமும் கேட்க கம்யூனிஸ்ட் வி. பொன்னம்பலம், இலக்கியம் கேட்க தமிழரசு செ. இராசதுரை, பகுத்தறிவு கேட்க தி.மு.க. ஆதரவு இளவரசு (எஸ். ஆழ்வாப்பிள்ளை) இந்த மூன்று பேரும் போல அப்ப பேச எனக்குத் தெரியும். இப்ப ஆரையும் போல நான் பேசிறதில்லை. எனது பேச்சு உருவாக்கத்திற்கு அவர்களும் காரணமாக இருந்திருக்கலாம்.

ஒருமுறை செ. இராசதுரை தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு வந்தார். அப்ப அங்கே இளவரசு படித்துக் கொண்டிருந்தார். இரண்டு பேரும் நண்பர்கள். தி.மு.க. பாசறையில் வளர்ந்தவர்கள். இளவரசின் விருப்பத்துக்கு இணங்கி செ. இராசதுரை வந்திருக்க வேணும். இளவரசு தலைமையில் ஓர் இலக்கியக் கூட்டம், அரசியல் கலவாத இலக்கியக் கூட்டம்.

மண்டபம் நிறைந்த சனம். மண்டபத்துக்கு வெளியிலும் சனக்கூட்டம். நான் விக்னேஸ்வராவின் மாணவன். இராசதுரையின் பேச்சைத் தவறவிடுவேனா? போயிருந்தேன். பாரதிதாசன் கவிதை பற்றிப்பேசினார். ஒன்றரை மணிநேரம் சளைக்காமல் பேசினார். இலக்கியம் வெள்ளம்போலப் பெருகிக் கொண்டிருந்தது. மக்கள் ஆனந்தமாக அந்த

வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் ‘சொல்லின் செல்வர்’ என்றால் அது இராசதுரை தான். மறுபேச்சுக்கு இடமில்லை. அனுமனைச் சொல்லின் செல்வன் என்றார் ரா.பி. சேதுப்பிள்ளை. அனுமன் சொல்ல வேண்டியதை, சொல்ல வேண்டிய முறையில் சொன்னவன். இராசதுரை அத்தோடு சுவைபடச் சொன்னவர். சொல்லவல்லவர். அன்றைய பேச்சில் அவர் சொன்ன பாரதிதாசன் பாடல்கள் பல. ஒவ்வொரு பாடலையும் இனிக்க இனிக்க எடுத்துச் சொன்னார். எல்லாவற்றிலும் உச்சம் என்னை நல்லாக் கவர்ந்த பாடல்

“கூடத்திலே மனப் பாடத்திலே-விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர் மலர்ப் பார்வையினால்-அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழி-தனிற்
பட்டுத் தெறித்தது மானின் விழி-
ஆடை திருத்தி நின்றாள் அவள் தான்-இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றாள்”

பாடலை முழுமையாக எடுத்துச் சொன்னார். தேன் சொட்டச் சொட்ட விளக்கினார். அந்தக் காட்சியை ஓவியம் போல மனதில் பதிய வைத்தார். பாரதிதாசன் பாடலின் சிறப்பா? அல்லது சொல்லின் செல்வரின் சொற்சிறப்பா? எதுவென்று சொல்ல இயலாது. இரண்டும் இணைந்த சிறப்புத்தான்.

நான் சிலிர்த்துப் போனேன். பாரதிதாசனின் கற்பனை வளம் இலக்கியச் செழுமை, சொல்லின் செல்வரின் சொற்சுவையில் நான் மயங்கினேன். அந்த மயக்கத்துக்கு எனது குமரப் பருவமும் ஒரு காரணமாக இருந்திருக்க வேணும். மறுநாள் விடிந்தது அம்மாவிடம் கேட்டேன். காசு தந்தா. பஸ் ஏறி யாழ் நகருக்குப் போனேன். “பாரதிதாசன் கவிதைகள்” ஒரு புத்தகம் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். நல்ல ஆசிரியர்கள் மாத்திரமல்ல. நல்ல பேச்சாளர்களும் எங்களைப் பாதிக்கலாம். வழிகாட்டியாக இருக்கலாம்.

நான் மாணவனாக இருக்கும்போது ஆசிரியராக ஒரு அழைப்பு. போனேன். ஆசிரியராக முந்திப் படித்த தேவரையாளி

இந்துக் கல்லூரிக்கு. அந்தக் கல்லூரியில் படித்த ஒரு நண்பன் அயலூர்க்காரன். பல கல்லூரிகள் படித்து தேறாமல் கடைசியாக எங்கள் கல்லூரிக்கு வந்தான். அலைந்ததில் அவனுக்கு வயதும் ஏறிவிட்டது. இரண்டு வருடங்கள் என்னோடு படித்தான். கடைசியில் அவன் தேறவில்லை. வயதில் மூத்தவன் என்றாலும் கூடப்படிச்சவன். அதனாலே எனக்குப் பழக்கம்/நட்பு, அவனுடைய ஊரில் அவனுக்கொரு நண்பன். அவனுடைய தொடர்பு காரணமாக, அவர் என்னோடும் பழக்கம், உறவு. அவர் அவனைவிட மூத்தவர். என்னைவிட ஏழுவயதாவது கூட இருக்கும்.

அவர் நல்ல விவேகி. கடவுள் பக்தர். அதிகம் படிக்காதவர். ஐந்தாம் வகுப்பு வரை படித்திருக்கலாம். குடும்பக் கஷ்டம் காரணமாகத் தொடர்ந்து படிக்காமல் விட்டிருப்பார். அது அவருக்கொரு மனக்குறைதான். தொழில் செய்து படித்து முன்னுக்கு வரவேணும் என்று ஆசை. அப்பிடி இரண்டொருவர் படித்து ஆசிரியராக வந்தது அவருக்குத் தெரியும். அந்த நம்பிக்கை.

ஒரு நாள் என்னைத் தேடிக் கொண்டு வந்தார். அவருக்கு எனது படிப்பில் ஒரு கவர்ச்சி இருந்தது. எனக்கது தெரியும். தனக்குப் பாடம் சொல்லித் தரவேணும் என்று கேட்டார். நான் தயங்கினேன். என்னைவிட மூத்தவர். படிப்பித்தலுக்கு நான் புதிசு. மூத்த ஆசிரியர்கள் சிலபேரின் பெயர் சொல்லி அவர்களிடம் படிக்கலாம் என்றேன். அவர் சம்மதிக்கிறதாக இல்லை. நான்தான் சொல்லித்தரவேணுமென்றார், விடாப்பிடியாக.

எனக்கு மறுக்க முடியவில்லை. தான் அறிந்ததை இன்னொருவருக்கு சொல்லிக் கொடுக்காமல் விடுவது போல பெரிய பாவம் இல்லை. இறுதியல் சம்மதித்தேன். முழுமனதோடு, பாடசாலையில் வந்து மாலைநேரம் சொல்லித் தரலாம் என்றேன். அவருக்கும் அது வசதி. தொழில் முடிந்து வரலாம். தொழிலும் நடக்கும், படிப்பும் நடக்கும், திரும்ப வருவதாகச் சொல்லி விடைபெற்றுப் போனார். நான் எனக்குள் ஒரு தீர்மானம் அவரை படிக்க வைத்து உருவாக்கிப் போட வேணுமென்று.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு லீவு நாள் காலையில் வந்தார். அவர் நல்ல நாட் பார்த்து வந்திருக்கிறார். அதைநான் விளங்கிக் கொண்டேன். கொப்பி, பென்சில் மட்டும் கொண்டு வரவில்லை. பழம், பாக்கு, வெற்றிலை, பூக்கள் என்பவற்றோடு காசும் வைத்திருந்தார். குருதட்சணை, எனக்கு ஒரே ஆச்சரியம், அவர் முகம் கோணாமல் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டேன். காசை மாத்திரம் திருப்பிக் கொடுத்தேன். வாங்க மறுத்தார். தெண்டித்தேன். முடியவில்லை, கடைசியில் விட்டுவிட்டேன்.

அன்றைக்கு தமிழ் படிப்பித்தேன். சந்தோஷமாகப் படித்தார். இனி, மாலை வேளையில் வருவதாகச் சொல்லிப் போனார்.

போனவர் மற்றநாள் வரவில்லை. அடுத்த நாள் இல்லை. ஒருவாரம் கடந்து போச்சு, ஒரு நாள் மாலை நேரம் ஒரு 'பார்சலை' தூக்கிக் கொண்டு பல்லெல்லாம் தெரிய வந்தார். "எனக்கெல்லோ பெட்டி மாறுதல் முடிஞ்சு போய்ச்சு வாறமாதம் கலியாணம்" என்றார். நான் மெல்லச் சிரித்தேன். சீனி அரியதாரம் எனக்குத் தந்து விட்டு சிறிது நேரம் இருந்து கதைத்தார். பிறகு "வாறன்" என்று சொல்லி மெல்ல எழுந்து போனார். நான் அவ்வளவு புத்திக்குறைவானவனா? புது மனைவியை விட்டு விட்டு என்னிடம் பாடம் கேட்க இனி வருவார் என்று நினைப்பதற்கு.

# 16

மனிதன் தான் உயர்ந்தவனாக எண்ணிக் கொள்ளலாம். அதில் மகிழ்ச்சி, பெருமை. அதற்காக மற்றவனை ஏன் தாழ்த்த வேணும்? அப்படித் தாழ்வாக நினைத்தால், தன்னை உயர்ந்தவனாக எண்ணலாம். உலகத்தில் பல பிரச்சினைகளுக்கு இந்த எண்ணந்தான் காரணம். அரச உத்தியோகக்காரருக்கு இது முனைப்பாக உண்டு. அதிகாரிகள் என்ற நினைப்பு. பியோனுக்கும் வாய்த்தபோது அது வந்து விடும். சம்பளம் வாங்கிற உத்தியோகக்காரனாச்சே! அரசாங்கச் சம்பளம் வாங்கினால் மக்களுக்குச் சேவை செய்யவேணும். ஆருக்கு அந்த எண்ணம்?

எனக்கொரு அனுபவம் அல்லது அரசாங்கச் சம்பளக்காரருக்கு நான் கொடுத்த அனுபவம் என்றும் சொல்லலாம்.

இப்ப கள் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்குத் தவறணை முறை வந்துவிட்டது. இதற்கு முன்னர் மரவரிமுறை. கள்ளிறக்கும் மரத்துக்கு வரி செலுத்தி அனுமதி பெற்று கள்ளிறக்கலாம். விற்பனை செய்யலாம். அதை ஆரும் செய்யலாம். எங்கள் வீட்டுவளவுக்கு வெளியே நின்ற பனைமரம் ஒன்றில் கள்ளிறக்குவதற்காக ஐயா வரிப்பணம் செலுத்தி இருந்தார். பனை ஓலையைத் தும்பாகக் கிழித்து பனையைச் சுற்றி கட்டி விட்டார். வரி செலுத்தின அடையாளமாக. கலால் பகுதியார் பாளை வெட்டுக்கு வருவார்கள். வரி செலுத்தாமல் கள்ளத்தனமாக கள்ளிறக்கினால் பாளை வெட்டுவார்கள். அதைத் தடுப்பதற்கான அடையாளந்தான்

ஓலைத்தும்பு, வரி செலுத்தி இரண்டு வாரத்தில் கலால் பகுதி உத்தியோகத்தர்கள் இருவர் வருவார்கள். பனைக்கு நம்பர் அடிப்பார்கள். தென்னைக்கும் அப்படித்தான். அதன் பிறகு எந்த அடையாளமும் கட்டிவிட வேண்டியதில்லை.

ஐயா கள்ளுவிற்பனை செய்வது எங்கள் வீட்டுக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்து அப்பால். கடற்கரை ஓரமாகப் பிரதான வீதியை அண்டி. ஒரு நாள் காலையில் ஐயா புறப்பட்டுப் போகும் போது "நம்பர்காரர் வந்தால் அந்தப் பனைக்கு நம்பர் அடிப்பிச்சு விடு, இந்தக் காசைக் குடு" என்று சொல்லி இரண்டு ரூபா தாள் ஒன்றைத் தந்துவிட்டுப் போனார். அந்தக் காசு அவர்கள் வாங்கும் இலஞ்சம்.

பத்துமணிச் சுமாருக்கு சயிக்கிளில் இருவர் வந்து மணி அடித்தார்கள். நம்பர் அடிக்கிறவர்கள் கலால் பகுதி உத்தியோகத்தர்கள். பொலீஸ் உத்தியோகத்தர் போல உடை. ஒருவர் அனுமதிப் பத்திரங்களை நீளப்பாட்டில் இரண்டாக மடித்து கையில் வைத்திருந்தார். மற்றவர் சயிக்கிள் கரியரில் நம்பர்த் தகடுகள், அதன்மேல் சிவப்பு, பச்சை இரண்டு மைப்பேணிகள். அந்த நம்பர்த் தகடுகளைப் பனையில் வைத்து பூவரசம் தடிக்குச்சியினால் மையில் தொட்டு, பனைக்கு நம்பர் அடிப்பார்கள். நம்பர் தகடுகள் வைப்பதற்குப் புத்தக மட்டை போல வளைத்த தகரத் தகடு. எல்லாவற்றையும் சயிக்கிளில் கட்டி இருந்தார்.

"பனை எது?" கேட்டார்கள். காட்டினேன். என்னை அழைத்துக் கொண்டு பனைக்கு அண்மையாகப் போனார்கள். அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று எனக்குத் தெரியும். கள்ளிறக்கும் தொழிலாளி நம்பர் தகடுகளையும் மைப் பேணியையும் சயிக்கிளில் இருந்து அவிழ்த்து எடுக்க வேணும். ஒரு கையில் தகடுகள் மறுகையில் மைப் பேணி தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்கவேணும். உத்தியோகத்தர் கையில் மை படாமல் நம்பர் அடிப்பார். இலஞ்சத்தையும் வாங்கிக் கொண்டு போவார். இதுதான் நடைமுறை.

எனக்குக் கட்டளை பிறந்தது. சயிக்கிளில் இருந்து அவைகளை எடுத்து வருமாறு. நான் அசையாது சிரித்துக் கொண்டு நின்றேன். மீண்டும் அதே கட்டளை. நான்

அசையவில்லை. பிறகு "தூக்கமாட்டேன்" மறுக்கிறேன். "நம்பர் அடிக்க ஓராள் தூக்கி வைத்திருக்க வேணுந்தானே" என்றார்கள். "அதுக்குத்தானே இரண்டுபேர் வந்து நிற்கிறியள்! என்றேன்." "கனக்கக் கதைக்கிறாய்" என்றார் ஒருவர். "விரும்பினால் அடி இல்லை எண்டால் விட்டிட்டுப் போ" என்கிறேன், "சரி... சரி... ஏன் வீண் பிரச்சினை" சொல்லி நம்பர் தகடுகளையும், மைப்பேணியையும்... ... கையில் எடுக்கிறார் ஒருவர். மற்றவர் பனைக்கு நம்பர் அடிக்கிறார், அவர்களுக்குக் கொடுக்க ஐயா தந்த பணத்தையும் நான் கொடுக்கவில்லை.

நடுப்பகல் தாண்டி ஐயா வீடு வந்து சேர்ந்தார். "என்ன நடந்தது?" என்று கேட்டார். "என்னட்டை வந்து எல்லாம் சொன்னார்கள்" என்றார். நான் 'காசு கொடுக்கவில்லை' என்றேன். "வாங்கிக் கொண்டுதான் போறான்கள். ஏன் மேனை வீண் கரைச்சலுகள்?" என்று மாத்திரம் சொன்னார்.

மனிதனை மனிதன் சமமாக மதிக்காத சமூகத்திலல்லவா நாங்கள் பிறந்திருக்கிறோம்! அதனால் உண்டான வீண் ஆசையை இங்கு சொல்லத்தான் வேணும்.

எங்கள் வீட்டுக்கு அண்மையில் ஒருவருக்கு அரச உத்தியோகம் கிடைத்தது. எழுதுவினைஞர். விடுமுறையில் வீட்டுக்கு வருவார். அவரோடு கூடித்திரிவதற்கு பொருத்தமான ஒத்தவயது நண்பர்கள் இல்லை. நான் இளையவன், படித்துக் கொண்டிருந்தவன். என்மீது அவருக்கு அப்ப நல்ல அன்பு. தன்னோடு கூட்டிப் போவார். சினிமாப் படம் பார்ப்பார். ஆங்கிலப் படம் அவருக்கு நல்ல விருப்பம். அவரோடு பார்த்த "பத்துக் கட்டளைகள்" இப்பவும் நல்ல ஞாபகம். அவர் அழைத்தால் அம்மாவிடம் காசு வாங்கிக் கொண்டு போவேன். ஆனால் அவர் என்னைச் செலவளிக்க விடார். அவர் நன்றாகச் சிகரெற் புகைப்பார். எனக்குச் சொல்லுவார், "எல்லாம் வாங்கித் தருவேன். சிகரெற் மாத்திரம் வாங்கித்தர மாட்டேன்" என்று.

ஒருமுறை விடுமுறையில் வந்து நின்றபோது. "வா, தம்பி நல்லூருக்குப் போவோம்" என்றார். எனக்கு ஆச்சரியம். ஒருநாளேனும் அவர் கோயிலுக்கு என்னை அழைத்துப் போனதில்லை. அவர் தான் போனதும் நான் கண்டதில்லை,

அவர் தன்மானமுள்ளவர். சமத்துவம் இல்லாத சமூகத்தில் கோயில் கும்பிடப் போகாதவர். நல்லூர் முருகன் கோயில் எல்லாருக்கும் திறந்து விட்டிருக்கிறார்கள். பெரிய சாதனை. சகமனிதனைச் சமமாக மதிப்பது பெரிய சாதனைதானே! அவரோடு நல்லூர்க் கோயிலுக்குப் போனேன். இருவரும் ஒரு ஆலயத்துக்குள்ளே முதல் முறை போனோம். வழிபட்டோம் என்று சொல்வதற்கில்லை சுற்றி வந்து பார்வையிட்டோம். இதற்குத்தானா இந்தக் கோட்டை. மனதில் நினைவெழுந்தது. எனக்குள் சிரித்துக் கொண்டேன். பின்னர் யாழ்ப்பாண நகரத்துக்குச் சென்றோம். ஆங்கிலச் சினிமா பார்த்தோம், இரவு வீடு வந்து சேர்ந்தோம்.

நட்புறவின் நெருக்கம் சொன்னேன். இனி, இரத்த உறவின் முறிவு பற்றிச் சொல்ல வேண்டும்.

எனக்கு மூத்தவருக்குத் திருமணம் முடிந்துவிட்டது. மிக இளமையில். அடுத்தவன் நான். பிறகென்ன? எனக்குக் கலியாணந்தானே! தங்கள் பிள்ளைகளுக்குச் செய்து வைக்க உறவுக்காரர் முன்னுக்கு வந்துவிட்டார்கள். எனக்குக் கீழே படிக்கிற ஒரு தம்பி, அவனுக்குக் கீழே படிக்கிற சகோதரிகள் மூவர். அவர்களைப் பற்றி ஆருக்குக் கவலை? ஏன் கவலைப்பட வேணும்! தங்களுடைய காரியம் நடந்தால் சரி. பேச்சுக்கால்கள் வர, ஐயா சொல்லிப் போட்டார்; "அவனுக்குப் பொறுப்பிருக்கு இப்ப உந்தக் கதையள் வேண்டாம்"

அம்மாவின் தமையன் ஆசையைத் தட்டிக்கழிக்கேலாமல் போச்சு, அம்மாவுக்கு ஒரேயொரு சகோதரம் ஆசைதான். அம்மாவைப் போல ஐயாவும் நல்ல வாரப்பாடு, அவருடைய பிள்ளையைக் கட்டித்தான் ஆகவேணும் தப்பேலாது. ஆனால் அவருக்குப் பிள்ளைகள் இல்லை. ஒன்றுவிட்ட சகோதரன் அவரைப் பிடித்துக் கொண்டார். ஒண்டுக்கை ஒண்டு, சகோதரிகளைப் பார்க்கிறதுக்கும் இடைஞ்சலில்லை என்றார்கள். "இப்ப வயது போதாது" என்றார் ஐயா. "ஓமெண்டு சொன்னால் போதும். பொறுத்துச் செய்யலாம். சகோதரிகளைப் பாக்க இதுபோல தோதாக வராது" நியாயம் சொன்னார்கள்.

இனி என்ன! காரியம் முடிந்த மாதிரித்தான். ஆசையின் சொல்லை அம்மா தட்டவா போறா? அவர்கள் அப்படிக்

கொத்த சகோதரங்கள். ஆசை வந்து அம்மாவிடம் சங்கதியைச் சொன்னார். அம்மா ஒன்றும் பேசவில்லை. மௌனமெல்லாம் சம்மதம் என்று பேய்த்தனமாக நினைக்கக்கூடாது. அண்ணன்காரனுக்கு எதைச் சொல்லுகிறது! தயக்கம். ஐயா சொன்னதையும் சொன்னார். அம்மா வாய் திறக்கவில்லை.

முடிவுசெய்து காத்திருக்க வைக்கிற கலியாணத்திலே விருப்பமில்லை. அந்தப் பெண்ணில் எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. அம்மாவுக்கு நல்லாத் தெரியும். ஐயாவும் அறிவார். ஆனால் வந்து கேட்கிறது ஆசை. ஐயா தப்பிச்சுக் கொண்டுவிட்டார். அம்மாவுக்கு நெருக்குவாரம். ஆசையும் விடுகிறதாக இல்லை. கடைசியிலே அம்மா சொன்னா; "அண்ணை கலியாணம் அவனுக்கு. அவன்ரை விருப்பமில்லாமல் எப்படி செய்கிறது?" அப்ப ஆசை கேட்டார். "அவனுக்கு விருப்பமில்லையா?" அம்மா, "இல்லை" என்று சொன்னா. ஒரு நாளும் அம்மாவைக் கோபித்தறியாத ஆசைக்கு கோபம் வந்து விட்டது. "அப்ப, என்ரை பிள்ளை எண்டாலும் நீ உப்பிடித்தானே சொல்லுவாய்?" எனச் சினந்தார். அம்மா சிரித்துக் கொண்டு சொன்னா, "உங்கடை பிள்ளை எண்டாலும் இதுதான் சொல்லுவன், நீங்கள் உங்கடை பிள்ளையைப் பற்றித்தானே யோசிக்கிறியள்! நான் என்ரை பிள்ளையைப் பற்றி யோசிக்கக் கூடாதோ?"

ஆசை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அம்மா இப்படிச் சொல்லுவா என்று. அவர் வாயடைத்துப் போனார். சிலகாலம் அம்மாவோடு அடைத்த வாய் திறக்கவே இல்லை.

வெள்ளி என்றால் தொண்டமானாறு சந்நிதிமுருகனிடம் போவார். சயிக்கிளில் திரும்பி வரும்போது திருநீறு சந்தனம், கடலை, தின்பண்டங்களோடு எங்களிடம் வருவார். அம்மா தேநீர், சிற்றுண்டிகள் கொடுப்பா.

அதன் பிறகும் ஆசை வருவார். அம்மா என்றும் போல உபசரிப்பா. ஆனால் அடைத்த வாய் திறக்கவில்லை. இருவருக்கும் இடையே ஊடகமாக நாங்கள், எங்களுக்கு ஒரே வேடிக்கை. பார்க்க ஒரு நாடகம் போல இருக்கும். நீண்டகாலம் இந்த நிலைமை நீடிக்கவில்லை. சுயநலமும் செல்வச் செருக்குமில்லாத, நன்றி மறவாச் சகோதரங்களின் மனக்கசப்பு

எத்தனை காலம் நீடிக்கும்? ஆசை அம்மாவோடு பேசத் துடங்கினார்.

நான் மிச்சம் சின்ன வயதில் ஆசிரியரானேன். நான் படித்த கல்லூரியில்தான் முதல் நியமனம். கல்லூரியில் இருந்து வீடு அதிக தூரமில்லை. படிக்கிறபோது நடந்து போவேன். பின்னர் சயிக்கிள். ஒரு நாள் சயிக்கிளில் போகமுடியவில்லை. கல்லூரி முடிந்து நடந்து வந்து கொண்டிருந்தேன். எதிரில் வந்தவர் என்னைக் கண்டு தரித்து நின்றார். அனுதாபத்தோடு என்னை ஏற இறங்கப் பார்த்தார். "தம்பி இப்பவும் படிக்கிறியளோ/ எனக் கவலைப்படுவதாகக் காட்டிக் கொண்டார். நான் "ஓம்" என்றேன். எனக்குள் சிரித்துக் கொண்டு நடந்தேன்.

கல்லூரியில் என்னுடைய காலத்தில் படித்தவர்கள். உடன் படித்தவர்கள் மாணவர்களாக இருந்தார்கள். ஆசிரியர்கள் நால்வர் புதியவர்கள், ஏனையவர்கள் எல்லோரும் எனது ஆசிரியர்கள். அதிபர் உட்பட. நான் மாணவர்களுக்கு ஆசிரியன், ஆசிரியர்களுக்கு மாணவன். உண்மையில் நான் தான் மாணவ ஆசிரியன். மாணவ ஆசிரியர் என்ற ஆசிரிய நியமனம் பிறகுதான் நடைமுறைக்கு வந்தது. எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி. இன்னொருவகையில் நெருக்கடி. இந்த அனுபவம் வேறு ஆருக்கும் கிடைக்காத அனுபவம்.

நான் படிப்பிக்கத் தொடங்கிய ஆரம்ப நாட்கள். எனது பாடநேரம். ஒரு வகுப்பறைக்குப் போகிறேன். முதல் பாட ஆசிரியர் எனது ஆசிரியர். வகுப்பறையில் இருந்து அவர் இன்னும் வெளியே வரவில்லை. நான் வாசலில் போய் நிற்கிறேன். என்னைக் கண்டு கொண்டு வேண்டுமென்றே கேட்கிறார். "ஆர்பாடம்?" மாணவன் ஒருவன் என்னுடைய பெயரை மாத்திரம் சொல்லுகிறான். ஆசிரியருக்கு வந்தது கோபம், "வாடா இஞ்சை!" என்று அழைக்கிறார். அவன் எழுந்து போய் அவர் முன் நிற்கிறான். 'முந்தித்தான் உங்களோடை விளையாடித் திரிஞ்சவர். இப்ப உங்கடை ஆசிரியர். பழைய சேட்டை விட்டியளோ அடிவாங்குவியர்' சொல்லிக் கொண்டு முதுகில் இரண்டு சாத்துச் சாத்தினார். நான் வகுப்பறைக்குள் நுழைகிறேன். "குட்மோனிங் ஸேர்"

மாணவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அந்த வகுப்பில் அவன் வயதில் கூடினவன், வளர்ந்தவன். முன்னர் என்னோடு பகிடி விடுகிறவன். வகுப்பில் அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டேன். நினைக்கப் பாவமாக இருந்தது.

எங்கள் கல்லூரியில் அப்ப பெரிய வகுப்பு க.பொ.த. (சாதாரணம்). அந்த வகுப்புக்குத் தமிழ் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர் ஒரு நாள் லீவு. அந்த ஆசிரியடந்தான் நானும் படித்தேன். அந்த வகுப்பறையில் படித்தேன்; ஓர் அசிரியர் லீவில் நின்றால் பதில் கடமைக்கு இன்னொருவரை அனுப்புகிறது வழக்கம். பெரும்பாலும் அந்தப் பாடம் படிப்பிக்கத் தகுந்தவரை அனுப்புவார்கள்.

அதிபரிடம் இருந்து அறிவித்தல் வந்தது. பதில் கடமைக்குப் போகுமாறு. அந்த வகுப்பு மாணவர்கள் சிலர் என்னோடு படித்தவர்கள். பதில் கடமை போட்ட அதிபருக்கு ஏதோ ஒரு நோக்கம் இருந்திருக்க வேணும். என்னுடைய ஆளுமையை வளர்ப்பதாக இருக்கலாம். அல்லது பரிசோதிப்பதாகவும் இருக்கலாம்.

மணி அடித்தது. பாடவேளை வந்தது. நான் வகுப்பு நோக்கிப் போகிறேன். பாட ஆசிரியர் இல்லாததால் மாணவர் சிலர் வகுப்பறைக்கு வெளியே மாமர நிழலில் பேசிக் கொண்டு நிற்கிறார்கள். என்னை ஆரும் எதிர்பார்க்கவில்லை. ஓடிவந்து அமருகிறார்கள். வகுப்பறை நிறைந்து களைகட்டுகிறது. அவர்களுக்கு நல்ல முகப்பாத்தி. இருக்காதா பின்னை? தோளில் கை போட்டுத்திரிந்த சிநேகிதன்மார், பருவக் கவர்ச்சியுடன் பார்த்துச் சிரித்த சிநேகிதிகள். இவர்கள் மத்தியில் நான் திடீரென்று ஆசிரியராகப் போய் நின்றால்... எப்படி இருக்கும்?

நான் வகுப்பறைக்குள் நுழைகிறேன். ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தால் மாணவர்கள் எழுந்து நிற்கவேணும். வணக்கம் சொல்லவேணும். அதுதான் ஒழுங்குமுறை. ஒருவர் தானும் எழுந்திருக்கவில்லை. வணக்கம் சொல்லவில்லை. நான் எதையும் கண்டு கொண்டதாகக் கட்டிக் கொள்ளவில்லை. சகசமாக முன்னர் போல ஆரையும் நோக்கவுமில்லை. முகத்தில் ஒரு இறுக்கம். ஆசிரியரான போது அதிபர் சொன்ன

ஆலோசனை. அப்படி ஆக்கிக் கொண்டேன். இறுதிவரை அது என்னோடு ஒட்டிக் கொண்டுவிட்டதை இப்ப நினைத்துப் பார்க்கிறேன்.

வகுப்பை ஆரம்பிக்கிறேன். ஆசிரிய இறுக்கத்தோடு. ஆனால் சிரித்துச் சிரித்துப் பேசுகிறேன். நான் நல்லா வாசிக்கின்றவன். அந்தப் பலம் அப்பவும் எனக்குண்டு. நான் வாசித்த உ.வே.சாமிநாதையர் கைகொடுக்கிறார். "நான் மாணவனாக இருக்கும்போது படிப்பித்தேன். ஆசிரியராக இருக்கும்போது படித்தேன்" உ.வே.சா. கூற்றைச் சொல்லி "உங்களிடம் படிக்க வந்திருக்கிறேன்" என ஆரம்பிக்கிறேன். இலக்கிய விடயம் ஒன்றை சுமார் இருபது நிமிடம் வரை விளக்குகிறேன். எல்லாரும் ஆர்வமாகக் கேட்கிறார்கள்.

பின்னர் படிப்பித்த விடயத்தில் ஒரு கேள்வி சிக்கலான கேள்வி. விடை சொல்லமாட்டார்கள். எனக்குத் தெரியும். ஆரும் வாய் திறப்பதாக இல்லை. கொஞ்சம் பொறுத்து, மீண்டும் கேட்கிறேன். அதே மௌனம், முன்வரிசையில் இருந்தவரை கை நீட்டிச் சுட்டுகிறேன். அப்படிச் சுட்டும்போது அமர்ந்திருக்க முடியாது. எழுந்து நிற்கிறார். அடுத்தாள்... அடுத்தாள்... ஆண்கள், பெண்கள் எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்.

"இந்த சின்ன விஷயம் உங்களுக்குத் தெரியாதா?" நான் விளக்க ஆரம்பிக்கிறேன். எல்லோரும் தொடர்ந்து நிற்கிறார்கள். நான் பேசிக் கொண்டு நிற்கிறேன். பத்து நிமிடம் கழிந்திருக்கும். அப்பதான் என்னுடைய கவனத்துக்கு வந்தது போல, "ஐயோ... நீங்கள் நிற்கிறியளா? இருங்கோ... இருங்கோ..." என்கிறேன். எல்லோரும் உட்காருகிறார்கள். சிலர் தலைகுனிந்து மேசையில் படுக்கிறார்கள். நான் எதையும் கண்டுகொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. தொடர்ந்து படிப்பிக்கிறேன். மணி அடிக்கிறது. பாடவேளை முடிந்துபோச்சு, நான் வகுப்பில் இருந்து புறப்படுகிறேன். எல்லோரும் எழுந்து நின்று "வணக்கம் ஸேர்" சொல்லு கிறார்கள். "வணக்கம்... வணக்கம்" சிரித்த வண்ணம் வகுப்பை விட்டுப் போகிறேன்.

# 14

“மாணவ ஆசிரியர்’ மாணவர்களிடம் பெற்ற அனுபவங்களைப் போல ஆசிரியர்களிடமும் சில.

ஆரம்பக் காலத்தில் முதலாம் வகுப்பில் எனக்குப் பாடங்கள் பல. அவர்களுக்குக் கற்பிப்பது மிகச் சங்கடம். அழுதுகொண்டு சிலர் வருவர். வந்த பின்னும் அழுகை நிற்காது. வகுப்பில் ஒழுங்காக இருக்கமாட்டார்கள். சண்டை, சச்சரவு, இயற்கைத் தேவை, உபத்திரவங்கள். அவர்கள் கவனத்தை ஈர்ப்பது கஷ்டம். ஆடிப்பாடி, படங்கள் காட்டி படிப்பிக்க வேணும். எனக்கு இயலவில்லை ஆடிப்பாட.

காலை வேளை சிலர் தினமும் அழுகை. அம்மாவை, வீட்டை விட்டு வந்த கவலை. புதிய சூழலின் ஒவ்வாமை. ஒரே குழப்பம். எனக்கு அவர்களைச் சமாளிக்க முடியவில்லை. அடுத்த அறையில் ஆங்கில ஆசிரியைக்கு வகுப்பு. நான் அங்கு படிக்கிற காலத்தில் அவ அங்கில்லை. பிறகு தான் வந்தவ. நல்ல சுறுசுறுப்பானவ. பிள்ளைகளில் நல்ல அன்பு. அழுகைச் சத்தம் கேட்டால் முதலாம் வகுப்புக்கு வருவா. அழுகிற பிள்ளையைத் தடவி, கதை சொல்லிச் சிரிக்க வைப்பா. அதிக நேரம் தேவையில்லை. ஐந்து நிமிஷம் போதும். வகுப்பு அமைதியாகி மகிழ்ச்சியாக இருக்கும். “சரி தம்பி படிப்பிங்கோ” சொல்லிக் கொண்டு போவா. எனக்கு ஆச்சரியமா இருக்கும். என்ன மந்திரமோ! என்ன மாயமோ! சின்னப்பிள்ளைகளை இப்படிக் கவர முடிகிறது. அவ நல்ல ஒரு தாய். தாய்மையில் பிள்ளைகள் மகிழ்கிறார்கள். எனக்கது முடியுமா?

ஆசிரியர்கள் தங்குமிடம் ஒரு தனி அறை. சிமெந்து போட்ட தரை. சுவர் இல்லை. சுற்றிப் பனம் சலாகை அடித்து விடப்பட்டிருந்தது. தென்னம் கிடுகுக் கூரை. வெயில் காலத்தில் நன்றாகக் காற்றுவரும். குளிரூட்டப்பட்ட அறை தோற்றுப் போகும். இது இயற்கையின் சுகம். பாடம் இல்லாத வேளையில் ஆசிரியர்கள் அங்கு வருவார்கள். இடைவேளைகளில் அநேகமாக எல்லாரும் வந்து அமருவார்கள். கதைத்துக் கொண்டிருப்பார்கள். நான் கேட்டுக் கொண்டிருப்பேன். கதைப்பவர்கள் என்னுடைய ஆசிரியர்களல்லவா?

ஒரு நாள் ஒரு இடைவேளை நேரம்.

ஆசிரியர் ஒருவர் தங்களுடைய பழைய கதைகளைச் சொன்னார். இளமைக் காலக்கதை. முன்னால் இருந்த ஆசிரியரோடு சம்பந்தப்பட்டது. அவர்கள் ஒத்த வயதுக்காரர்.

ஒரு காரியத்தை செய்வதில் இழுபறி, இவர்களும் இன்னும் இரண்டு பேரும், நாலுபேருக்கும் இடையில், நீ செய்... நீ தான் செய்... என ஆளை ஆள் ஏவினார்கள். ஒருவரும் உடன்படுவதாக இல்லை. 'திருவுளச் சீட்டுப்போடுவோம்' என்றார் இப்ப கதை சொல்லிக் கொண்டிருக்கும் ஆசிரியர். எல்லோரும் உடன்பட்டார்கள். சொன்னவரே நாலு சீட்டெடுத்து பெயர்களை எழுதினார். ஒரு கைக்குள் போட்டு மறு கையால் பொத்தி குலுக்கினார். ஒரு சீட்டை எடுக்குமாறு நீட்டினார். இப்ப கதை கேட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர் எடுத்தார். விரித்துப் பார்த்தார். அவர் பெயர் வந்திருக்கிறது. இனி என்ன செய்வது? திருவுளத்தின் தீர்ப்பு. அந்தக் காரியத்தை செய்து முடித்தார்.

"இவற்றை பெயர் எப்படி வந்தது தெரியுமா? நாலு சீட்டிலும் ஒரே பெயரைத்தான் எழுதினேன்" என்றார். ஆசிரியர்கள் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். எனக்குச் சிரிக்கமுடியவில்லை. இருவரும் என்னுடைய ஆசிரியர்கள். உதட்டை இறுகக்கடித்துக் கொண்டேன்.

தங்கள் பழங்கதையைக் கேட்டுக்கொண்டிருந்த ஆசிரியருக்கு சினம் பொங்குகிறது. என்னைத் திரும்பிப் பார்த்தார். கதை சொன்னவரை நோக்கி "என்ன பேய்க்கதை கதைக்கிறாய். ஆருக்கு முன்னாலே இதைச் சொல்லுறாய்"

கோபித்துக் கொண்டு எழுந்து போய்விட்டார். அவர் நல்லதொரு ஆசிரியர், எல்லாவகையிலும். அங்கிருந்த மற்ற ஆசிரியர்கள், பற்றி அவருக்குக் கவலை இல்லை. எனக்குமுன் சொன்னது பொறுக்க முடியவில்லை. நான் மாணவன், அதை உணர்ந்தேன். உள்ளே வேதனைப்பட்டுக் கொண்டேன்.

அதே அறை, எனக்குப் பாடமில்லை. கையில் கொண்டு போன புத்தகத்தை வாசிக்கிறேன். ஆசிரியர் ஒருவர் வருகிறார். என்னுடைய ஆசிரியர், மெல்ல எழுந்து மரியாதை பண்ணிவிட்டு அமருகிறேன். புத்தகத்தை மூடி வைக்கிறேன். அவர் ஏதாவது சொல்லுவார். நான் கேட்டுக் கொண்டிருப்பேன். அவருக்கு நான் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். எனது எதிர்காலம் பற்றி அவருக்கு உயர்ந்த எண்ணம். சமூகத்திற்காக நல்லா அலைந்தவர். அனுபவங்களைச் சொல்லுவார். விரும்பிக் கேட்பேன்.

அன்று நாங்கள் இருவரும்தான் இருந்தோம். அவர் சொல்லுகிறார். நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாணவர்கள் ஒருவரும் வெளியில் இல்லை. கதைத்துக்கொண்டு அங்கும் இங்கும் பார்க்கிறார். ஆள் வெகு சாதுரியமானவர். எனக்குத் தெரியும். எதோ ஒரு தேவை இருக்கிறது. எனக்கு விளங்குகிறது. சொல்லட்டும். நான் வாய் திறக்கவில்லை.

திரும்பவும் அங்கும் இங்கும் பார்க்கிறார். முகத்தைச் சுழிக்கிறார். பிறகு, "பிள்ளையள் ஒருவரை காணவில்லை" என்கிறார். "ஏன் ஸேர்?" கேட்கிறேன். "வெற்றிலை வாங்குவிக்கலாமெண்டால்...", ஆசிரியருக்கு வெற்றிலைத் தவனம் வந்துவிட்டது. இடையிடையே போட்டுக் கொள்ளுவார். கடை கல்லூரிக்கு வெளியில். அங்கு போய்த்தான் வாங்கிவரவேணும். என்னைக் கொண்டு வாங்க விரும்புகிறார். அதை நேரில் சொல்ல முடியவில்லை. நான் இப்ப ஆசிரியன், அதற்காகத்தான் இந்த விடுகை. விளங்கிக்கொண்டு, "நான் வாங்கி வாறன் ஸேர்" சொல்கிறேன். "சீ! இதென்ன கதை! நீ இப்பவும் மாணவனே! உன்னைக் கொண்டு எப்படி வாங்குவிக்கிறது?" கண்டிப்பாக சொல்வதைப் போல மறுக்கிறார். "இல்லை நான் வாங்கி வாறன்" சிரித்துக்கொண்டு எழுகிறேன். "சொன்னாலும் கேட்கிறாய் இல்லை, பின்னை இந்தா" காசை நீட்டுகிறார். "வேண்டாம்" எழுந்து போகிறேன்.

எனக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நான் எந்தக் காலத்திலும் மாணவன்தான். அந்த உணர்வு மனதில் மேலோங்கி நிற்கிறது.

ஒரு நாள் மாலை நேரம். மனதிற்கு ரம்மியமான நேரம் ஆனால் சலிப்பாக இருந்தது. சினிமாப் பார்க்கலாம். நண்பர்கள் சேர்ந்தால் நன்றாக இருக்கும். ஒருவரும் கிடைக்கவில்லை. சரி, தனித்துப் போவோம். தீர்மானித்தேன்.

தியேட்டரில் படம்தொடங்கி விட்டது. நண்பர்களைத் தேடினதில் சுணங்கிப்போச்சு. ரிக்கெட் எடுத்துக்கொண்டு தியேட்டருக்குள் நுழைகிறேன். ஒரே இருட்டு, கும்மெண்ட இருட்டு. இருட்டில் தடவிக் கதிரை பிடிப்பது கஷ்டம். வாசலில் நின்றவன் டோச் வெளிச்சத்தில் வழிகாட்டினான். தியேட்டர் நிறையச் சனம். ஒரு கதிரை வெறுமையாகக் கிடக்கிறது. அருகில் இருப்பவர் குடிகாரனாக இருக்கலாம். அல்லது விரும்பிப் போய் மற்றவர் அருகில் அமர முடியாத ஆளாக இருக்கலாம். ஆராக இருந்தாலும் என்ன! எனக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் சரி. இருட்டில் எந்தக் கதிரை கிடைத்தாலும் இதுதான் நிலைமை. அந்தக் கதிரையில் போய் அமருகிறேன்.

நான் சிகரெட் புகைக்க ஆரம்பித்த காலம். புகைப்பதை பெருமையாகவும் உல்லாசமாகவும் கருதின காலம். விடுவேனா, அலுப்புச்சலிப்போடு போன நான்? இருட்டில் பக்கத்து ஆளை நோட்டமிட்டேன். நல்ல வெள்ளையாக இருந்தார். நான் புகை இழுத்திழுத்து விட்டுக்கொண்டிருந்தேன். புகை அவரைத் தடவிக்கொண்டு போகிறது. மேலே மின் விசிறிகளின் கிறீச் கிறீச் சத்தம். உள்ளே சனவெக்கை. சுருட்டு, பீடி, சிகரெட் புகையின் குமைச்சல். சனம் சினிமாவில் லயிச்சுக்கிடக்குது. சிரிப்பும் பேச்சும் விசிலடியுமாக. போதாதென்று மூட்டைக் கடி. இவ்வளவும் காசு கொடுத்து வாங்கினது. மிஞ்சி நிற்கிறது சினிமா ரசனை.

மூன்று சிகரெட் முடிந்து விட்டது. இடைவேளை, அப்பாடா! மின் விளக்குகள் எரிகின்றன. பக்கத்தில் இருந்தவரைப் பார்க்கிறேன். திகைத்துப் போகிறேன். முதியவர், என்னுடைய தமிழ் ஆசிரியர். சிகரெட் புகையை இழுத்திழுத்து அவர் முகத்திலா ஊதிக்கொண்டிருந்தேன்? வேதனையாக இருக்கிறது. வெளியில் செல்லவும் முடியவில்லை. மன்னிப்புக் கேட்கவும் முடியவில்லை.

அவர் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. இயல்பாக இருந்தார். என்னைக் கண்டு, "வெண்ணிற ஆடை நிர்மலா நடித்த படம் என்றார்கள். ஒருத்தியிலும் ஆடையைக் காணவில்லை" என்று சிரிக்கிறார். நானும் மெல்ல சிரிக்கிறேன். "வெளியில் போவிட்டு வாறன் ஸேர்" சொல்லிக் கொண்டு எழுகிறேன். தியேட்டருக்கு வெளியே வருகிறேன். மீண்டும் உள்ளே போகும் மனம் இல்லை. சயிக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு புறப்படுகிறேன். போகும் போது இருந்த சலிப்பு இப்ப அலுப்பாகத் தோன்றுகிறது.

எல்லாரும் அம்மாவைப் பற்றித்தான் நினைப்பார்கள். சொல்லுவார்கள். அம்மாவின் அன்பு வெளிப்படையானது. அரவணைப்பு நெருக்கமானது. ஐயாவைப் பெரிதாகச் சொல்லுவாரில்லை. சொன்னால் அம்மாவிலும் தாழ்த்தித் தான் நோக்குவார்கள். இதுவரை சொன்னவைகளைப் பார்த்தால் நானும் அப்படித்தான் போல. அதிகம் சொல்லாததால் ஐயாவைக் குறைத்துப் பார்க்கிறேன் என்றில்லை. வெளிப்படையாக அன்பு காட்டாதவர் ஐயா. எந்த வகையிலும் குறைவானவரல்ல. வெகு புத்திசாதூரியம் உள்ளவர். ஒரு காலத்தில் சோக்குப் பேர்வழியாக இருந்திருப்பார் போல. அதன் அடையாளங்களைப் பின்னர் கண்டு கொண்டேன்.

பிள்ளைகள் பிறந்த பின்னர் ஐயா முற்றாக மாறிப்போனார். அவருடைய உலகம் பிள்ளைகள்; நாங்கள். எங்களுக்காகவே வாழ்ந்தார். அன்பை வெளியில் காட்டிக் கொள்ளமாட்டார். ஆடினால் பாடினால் காணாதது போல கண்டு இரசிப்பார். தம்பி நல்லா பாடுவான், மறைந்து நின்று கேட்பார்.

எங்களுக்காக உழைத்தார். ஒரு குறையும் வைக்கக் கூடாது. உணவு, உடை, படிப்பு... எல்லாம். மூத்தவருக்குப் படிப்பில் அக்கறையில்லை. நின்றார் மேலே போகாமல், மறித்துப் போட்டார் தனக்குத் துணையாக.

சினிமா என்றால் மூத்தவருக்கு உயிர். முதல் நாள் இரண்டாவது காட்சிக்குப் போனார். மறுநாள் மாலையிலும் படுத்துத் தூங்கினார். ஐயாவுக்குத் துணையாகப் போகவில்லை. ஐயாவுக்குக் கோபம். "நான் அண்டறுத்தானும் வெள்ளெலியும்

போல புனண்டித்திரிகிறன். உனக்கென்ன கவலை? நித்திரையைக் கொள்ளு. வரப்படாது அந்தப் பக்கம்" சினந்தார். அரிக்கன் லாம்பைக் கொளுத்தினார். புறப்பட்டு விட்டார். மூத்தவர் அரசண்டையைப் புரண்டுபடுத்தார். ஐயாவின் விற்பனை இடம் ஒரு கிலோ மீற்றர் தூரம்.

நான் வீட்டில் நின்றேன். ஆசிரியகலாசாலையில் இருந்து வந்து நின்றேன். ஐயாவை நினைக்கக் கவலை. எங்களுக்காக சக்திக்கு மீறி உழைத்தார். உண்மையில் ஐயாவின் வாழ்வு பிள்ளைகளுக்கான தியாகம். நினைக்க, நெஞ்சில் துயரம் பெருகுகிறது. "யாரொடு நோகேன். யார்க்கெடுத்துரைப்பேன்" எனக்குள் கேட்டுக்கொண்டேன். ஐயா போன பாதையில் புறப்பட்டேன். அம்மா தடுத்தா, நான் கேட்கவில்லை. ஐயா பாவம்! இந்த எண்ணம் மேலோங்கி நின்றது. விடு விடு என்று நடந்தேன்.

நான் இப்ப போவதை ஐயா விரும்புவதில்லை. ஆசிரியராகிவிட்டேன். கௌரவக்குறைவு. கூடப்படிக்கிறவை ஆரும் கண்டு விட்டால் மரியாதை இல்லை என்பார். எனக்குள் சிரித்துக் கொள்ளுவேன். வெட்கப்படவேண்டிய காரியம் இதுவல்ல என நினைப்பேன். தோட்டம் செய்கிறவன் மகன் தோட்டத்துக்குப் போகிறான், மீன் பிடிக்கிறவன் மகன் கடலுக்குப் போகிறான். துணி வெளுக்கிறவன் மகன் துறைக்குப் போகிறான். கள்ளுக்காரன் மகன் விற்கப்போனால் என்ன குறை?

கள்ளுக்குடித்துக் கொண்டிருக்கும் ஒருவரைச் சுற்றி நாலைந்து பேர். அவர்களும் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறார். சேய் நாட்டு விசுவாசத்தோடு தாய் நாடு பற்றி. தமிழ்நாட்டு அரசியல் பற்றி. திராவிட முன்னேற்றக் கழகம், பெரியார், அண்ணாத்துரை, கருணாநிதி... முரசொலி... , திராவிட நாடு... , இப்படி... , இப்படி. அங்கிருந்தவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்ற நினைப்பு. எல்லோரும் கள்ளைப் பருகி வாயைத் திறந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மறுத்துப் பேசுகிறவர்கள்; அபிப்பிராயம் சொல்லுகிறவர்கள், ஆருமில்லை. அவர் தனிக்காட்டு ராஜா. 'மது உள்ளே போக, அறிவு வெளியே போகும்' என்பது சீனப் பழமொழி. அது சரி போலத் தோன்றுகிறது. அறிவு வெளியே பாய்ந்து கொண்டிருக்கிறது.

நான் எனது காரியத்தில் கவனம். காதை மட்டும் கொடுத்துக் கொண்டு.

பிரசங்க மழையில் குளித்துக்கொண்டிருந்த ஒருவர் கடல் தொழிலாளி. கிறிஸ்தவர். அவரைத்தான் ஐயா இருத்தி விட்டுப் போயிருப்பார். சின்ன வயது முதல் என்னைத் தெரியும். அதிகம் பேசாதவர். பிரசங்கியின் சவடால்கள் அவருக்குப் பிடிக்கவில்லைப் போல. ஒரு கட்டத்தில் சொன்னார். "அந்தத் தம்பியும் படிச்சவர்தான்" "என்ன படிச்சவர்?" பிரசங்கியின் அலட்சியமான கேள்வி. "றெயினிங் கொலிச்சில் படிக்கிறார்" என்கிறார். பிரசங்கியார் உடனே ஒரு ஏளனச் சிரிப்பு. "ஆ... என்ன படிப்பு! இந்த காலத்துப் படிப்பு எனக்குத் தெரியாதா?" என ஒரு நையாண்டி.

சாதி அகம்பாவமும் அரைகுறை ஞானமும் மதுவின் போதையும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? கல்வி தங்களுக்குரியது. அறிவு தங்களுக்குரியது என்ற எண்ணத் திமிர்.

அந்த உரையாடல்களை உன்னிப்பாக கேட்கிறேன். என்னுடைய வேலைகளை முடிக்கிறேன். குந்தி இருக்கத் தோதாக, நறுக்கி வைத்த தென்னோலை அடிமட்டை, கையில் எடுக்கிறேன். அவர் முன்னே போட்டு விட்டு அமர்கிறேன். அவர் பிரசங்கத்தைக் கேட்பது போல சற்று நேரப்பாவனை.

நான் வாசிக்க ஆரம்பித்த காலத்தில் படித்ததெல்லாம் தி.மு.க. நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், பெரியாரின் கருத்துக்கள். அவைகளெல்லாம் எனக்கு அத்துப்படி.

அவரோடு மெல்லக் கதைக்கத் தொடங்கினேன். அவரது சவடால்கள் வெளிக்கத் தொடங்கியது. கதையிலே சூடு பிறந்தது. அவர்கள் மத்தியில் கௌரவத்தை விட்டுக் கொடுக்க அவர் தயாரில்லை. இறுதியில் மரியாதைக் குறைவாக "நீ", "உனக்கு" என்று கதைக்க ஆரம்பிக்கிறார். எனக்குச் 'சுர்' என்று ஏறுகிறது. "வயதில் மூத்தவர் எண்டதுக் காகத்தான் இவ்வளவு மதிப்பும் தந்தனான்" என்கிறேன். "இல்லையெண்டால் என்ன செய்து போடுவாய்?" கேட்கிறார். "மரியாதையாகக் கதைக்க வேணும்" மீண்டும் நான். ஐயா வந்து குறைபட்டுக் கொள்ளுவார் என்ற பயத்தில் என்னை அடக்கி அடக்கி கதைக்கிறேன். அவருக்கு கள்ளு வெறியல்ல. பிறப்பிலுள்ள வெறி. சாதி வெறி அவதானிக்கிறேன். "நான் ஆர்? உனக்கு நான்

என்ன மரியாதை தாறது?" கேட்கிறார் சாதித்திமிரோடு. "ஆராகவும் இருக்கலாம் மரியாதையாகப் பேச வேணும்" திரும்பவும் சொல்லுகிறேன். நான் இப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது அவருக்கு உசாரைக் கொடுக்கிறது. "என்னடா மரியாதை உனக்கு?" கெம்புகிறார். பொறுமையை நான் முற்றாக இழந்து போகிறேன். "மூடா வாயை, இனிமேல் கதைச்சியெண்டால் நடக்கிறது வேறை" கொதிக்கிறேன்.

அவர் எதிர்பார்க்கவில்லை. அலுக்குலைந்து போனார். இருந்த, அவர் சாதியருக்கு முகம் சுண்டிப் போச்சு. ஆரும் வாய் திறக்கவில்லை. திறந்தால், மானம் போகுமென்ற பயம். அவர் மாத்திரம் "வரட்டும்... வரட்டும்..." சொல்லிக் கொள்ளுகிறார். ஐயாவைத்தான். இருந்தவர்கள் மெல்லக் கழலுகிறார்கள். அவர் மட்டும் இருக்கிறார். அவர் விறுவிறுக்கிறார். அவரோடு இன்னொருவரும் இருக்கிறார். ஐயா இருக்க சொல்லி வைத்துப் போனவர்.

ஐயா வர சற்றுத் தாமதம் ஆகுகிறது. அவருக்குப் பொறுமையில்லை. துடிக்கிறார். ஐயா வந்து சேருகிறார். "ஏன் மோனை நீ வந்தனி?" என்னைக் கேட்கிறார். "சண்டித்தனம் பண்ண வந்திருக்கிறார், மரியாதை இல்லாமல் கதைக்கிறார்" அவர் படபடக்கிறார். "என்ன நடந்தது?" ஐயாவின் கேள்வி "என்ன நடந்ததோ..." சினந்து முறைப்பாடு செய்கிறார். காவல் இருந்தவர் ஆதியோடந்தமாக எடுத்துச் சொல்லுகிறார். ஐயா பொறுமையாக எல்லாம் கேட்கிறார். "பிறகு படிச்ச பிள்ளைகளோட கண்டபடி கதைக்கக்கூடாது" என்கிறார். அவரைப் பார்த்து, "தம்பி, நீ உப்படியேன் கதைக்கிறாய்?" கண்டிக்கிறார் என்னை.

அவரை அனுப்பி வைத்துவிட்டு இறுதியாகச் சொல்லுகிறார் "மோனை இண்டைக்கு கடைசியாக இருக்கட்டும். இனி, நான் என்ன கஷ்டப்பட்டாலும் நீ இந்தப் பக்கம் வரக்கூடாது. இது கடைசி நாளாக இருக்கட்டும்" கண்டிப்பாக கூறுகிறார்.

ஐயா சொல்லுப் போல் அதுதான் கடைசி நாள். அதன் பிறகு நான் அங்கு போனதே இல்லை.

# 16

கும்பிடுபோடுவது ஒருகலை. அருங்கலை. அற்புதமான கலை. சிலர் அந்தக் கலையில் கைதேர்ந்தவர்கள். வல்லவர்கள். அவர்கள் காரியவாதிகள். எவரோடும் பகைக்கமாட்டார்கள். குழைந்து குழைந்து கும்பிடுபோட்டுக் காரியஞ்சாதித்துக் கொண்டு போய்விடுவார்கள். அவர்களைக் கும்பிடுகள்ளர் என்று சொல்லுவார்கள். நெருக்கமானவர்கள் செயல் வீரர்கள் என்பார்கள். அவர்கள் கும்பிடுபோடத் தெரிந்தவர்கள். போடுகிறவிதமாகப் போட்டால் கல்லும் கனிந்துவிடும் நடக்கமுடியாத காரியமும் நடந்துவிடும். கூனிக்குறுகி நின்று போடவேணும். அதுதான் கூளைக்கும்பிடு அதைச் சடங்காசாரமாகச் செய்யக்கூடாது. பலன் கிட்டாது. எந்தக் கும்பிடுவுக்கும் அசையாதவர்களைப் பிடித்துக் கொள்ள கால் இருக்கிறது.

கும்பிடுபோடுவதில் முன்னணி வகிப்பவர்கள் அரசியல் வாதிகள். தேர்தல் வந்துவிட்டால் போதும். கும்பிட்டுக் கும்பிட்டு இளைத்துப்போவார்கள். இருகரங்களையும் சேர்த்துக் கொள்ளுவார்கள். நெஞ்சுக்கு நேரே பிடித்துக் கும்பிடுவார்கள். தோள் அளவு உயர்த்திக்கும்பிடுவார்கள். தலைக்குமேல் தூக்கி கூட்டத்துக்குக் கும்பிடுபோடுகிறார்கள். தமிழ்நாட்டில் பாதங்களில் விழுந்தும் கும்பிடுவார்கள் வாக்காளர் பாதங்களில் அல்ல. தங்கள் பெருந்தலைவர்கள் திருப்பாதங்களில்.

கும்பிடுவது சுயநலத்துக்கா மாத்திரமல்ல. சந்திக்கும் போது மரியாதை செலுத்துவதற்காகவும். மேலைத் தேசத்தார் கைகுலுக்கிக் கொள்வார். தீண்டாமை பார்ப்போர் மத்தியில் அது கலாச்சாரமல்ல, கும்பிடுபோடுவது அவர்களுக்கு வசதி.

சமயம் கும்பிடப் பணிக்கிறது. எல்லாச் சமயங்களுந்தான். சமயத்துக்குச் சமயம் கும்பிடு வேறுபடும். ஆனால் எல்லாம் கும்பிடுதான். அதுவும் சும்மா போடும் கும்பிடு அல்ல. காரியக்கும்பிடுதான். விரும்பியதைப் பெற்றுக் கொள்வதே நோக்கம். "தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" கடவுளிடம் விரும்பியதைக் கேட்பதுதான். "தலையே நீ வணங்காய்" என்பதும் ஒரு கும்பிடு. "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல" என்பது ஒரு உவமைத் தொடர். அது சொல்வதென்ன? இலகுவாக காரியம் கைகூடிவிட்டது என்பது தானே!

இராவணன் யார் என்று கேட்கக்கூடாது. இராவணனை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். வான்மீகி, கம்பன், துளசிதாசர் ஏன் சினிமாக்காரர்கள் எல்லாருந்தான் சொல்லிவைத்திருக்கின்றார்கள். ஆள் கொஞ்சம் வித்தியாசமான பேர்வளி. யாருக்கும் தலை வணங்காதவன். உயிரிலும் மானம். வீரம் பெரிசு. தம்பி கும்பகர்ணன் புத்திமதி சொல்கிறான். இளையவன் விபூஷணன்போல இராமனிடம் போ சரணடை உயிர்தப்பி வாழலாம் என. இராவணன் கொதித்து எழுகிறான்; கும்பகர்ணனுக்குச் சொல்லுகிறான். "கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல் கண்டேன்" ஆயிரத்தில் ஒருவர் இருக்கிறார்கள் இராவணர்கள்.

கும்பிடுபோடுவிப்பது இந்து மதத்தின் சிறப்புக் கொள்கை ஒரு பகுதி மக்களை அதற்கென்றே ஒதுக்கி வைத்திருக்கிறது. அவர்கள் கடவுளுக்குக் கும்பிடுபோட வேண்டும் என்றில்லை கும்பிடுபோட விதித்தவர்களுக்குக் கும்பிடுபோடத் தவறக்கூடாது. தவறுதல் தண்டனைக்குரியது கொடும் தண்டனை பெறவேண்டும் தப்பித்துக் கொள்ள இயலாது. மதக்கட்டுப்பாடு. வரன்முறை, தூரவிலகி நின்று சர்வாங்க நமஸ்காரம் செய்ய வேணும். எல்லா அங்கங்களும் நிலத்தில் பொருந்த வீழ்ந்து கும்பிடவேணும்.

இறைவனுக்குப்போடும் கும்பிடுதானும் அப்படி இல்லை. சைவசமயம் அட்டாங்கம், பஞ்சாங்கம் வகுத்திருக்கிறது. எட்டு அங்கங்களும் (உறுப்புகள்) நிலத்தில் பொருந்த வீழ்ந்து வணங்குவது அட்டாங்கம் ஆண்களுக்குரியது. பஞ்சாங்கம் ஐந்து அங்கங்கள் பொருந்த வேணும். பெண்களுக்குரியது. சர்வாங்கநமஸ்காரம் என்றால் ஏதோ யோகாசபப்பயிற்சி என்று கருதக்கூடும் அதற்குப் பெயர் சாஸ்டாங்க நமஸ்காரம் கூளைக் கும்பிடுபோடுவதில் இது முதல் தரமானது. பெரியவர் ஒருவரின் பாதக்கமலத்தில் வீழ்ந்து வணங்குவது இது பெரியவரைப் பெருமைப்படுத்துமாம். கௌரவப்படுத்துமாம். கும்பிடுபோடு கின்றவருக்கு நோக்கம் இருக்கிறது. வட்டியும் முதலுமாக வாங்கவேணும். அதே போன்று கும்பிடு ஆவது பெற்றுக் கொள்ள வேணும். இது உயர்ந்த பண்பாம் எத்தகைய சமுதாயத்தின் பண்பு? கால்களைத் தொட்டுக்கும்பிடுவது சாஸ்டாங்கத்தின் சுருக்க வடிவம். இறைவனைத் தவிர இன்னொருவனைப் பாடேன். பணியேன். இத இந்துத்துவத்தின் இறுமாப்பு சாஸ்டாங்கம் போடும் இந்துக்களுக்கு இது எங்கே போனது?

எனக்குக் கும்பிடுபோடத் தெரியாது. கூளைக்கும்பிடு போட அறியமாட்டேன். ஒருமனிதன் இன்னொரு மனிதன் கால்களில் வீழ்வது இழிவு. அடிமைத்தனம். நாங்கள் யாருடைய கால்களிலும் விழுவதை விரும்பாதவர் ஐயா. அப்படித்தான் ஐயா வளர்த்தார். ஆனால் ஐயாவின் பாதங்களில் நான் வீழ்ந்து வணங்கினேன். இறுதியாக சுடுகாட்டில். கொள்ளி வைத்த பின்னர் அண்ணாவும் வணங்கினார். தம்பியும் வணங்கினான். எங்கள் கண்கண்ட தெய்வங்கள் எங்களைப் பெற்றவர்கள்.

ஐயா இறந்த பின்னர் எங்களுக்கு ஆறுதல் அளிக்க அம்மா இருந்தா அம்மா துன்பப்படாமல் நாங்கள் பார்த்துக் கொண்டோம். மரணச்சடங்கின் பின்னர் பல சடங்குகள் ஒவ்வொன்றாகச் செய்து முடித்தோம். காலம் நாட்களாக நகர்ந்தது. முப்பத்தோராம் நாள் வந்தடைந்தது. அந்தியோஷ்டி தினம் ஐயர் வந்தார். கிரியைகளுக்கு பாத்தியதை மூத்தமகன் அண்ணா அவரோடு நானுந்தம்பியும் சேர்ந்து நின்றோம். புத்தாடை உடுத்திக் கொண்டோம். பூணூல் போட்டு தற்பை

தரித்து விட்டார் ஐயர். ஒரு தீர்த்தக் கரையில் அந்தியேஷ்டி செய்ய வேண்டும் எங்களுக்கு எங்கே இருக்கிறது தீர்த்தக்கரை? எங்கள் கிணற்றுக்கருகே செய்தோம். நான்கு கப்புகள் நாட்டி, அவற்றின் நுனியில் சுற்றிவர சலாகைகள் வைத்து இணைத்துக் கட்டி விதானமாக வெள்ளை கட்டின பந்தல், அதன் கீழே, ஓரங்களில், நான்கு பக்கங்களிலும் வாசல்கள் விட்ட வரம்புகள் நடுவே ஓமகுண்டம். அவைகளின் மீது மஞ்சள், வெள்ளை, கறுப்பு மாக்களினால் கோடிட்ட கோலங்கள்.

ஐயர் ஓமகுண்டத்தில் சுள்ளிகளை இட்டு, தீ மூட்டி நெய் ஊற்றி மந்திரங்களைச் சொன்னார். கிரியைகளைச் செய்தார். நாங்கள் மூவரும் வரிசையாக நின்று அவர் சொன்னபடி செய்தோம். ஐயருக்கு வாங்குவதே நோக்கம். அவர்கேட்கக் கேட்க, கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அங்கு கிரியைகள் முடிந்து, கல்லுப் போட்ட காரில் ஏறிக் கடலுக்குப் போனோம். கிரியைகள் முடித்துக் கொண்டு சென்றவற்றை கடலில் போட்டு தலை முழுகினோம்.

வீடுவந்து சேர்ந்தோம் பசுக்கன்று ஒன்று படலைகட்டில் நின்றது. குழைக் கொப்பு தின்னக்கொடுத்தோம். அது குழை தின்ன, அதன் வாலில் தந்திரமாகத் தடவினோம். பாத்திரத்தில் சாணம் கரைத்த தண்ணீர் தொட்டுத் தலையில் தெளித்தோம்.

வீட்டில் சவண்டிக்கிரியைகள். கிரியைகள் செய்வதில் ஐயருக்கென்ன பலன்? அவருக்கு வாங்குவதுதான் நோக்கம். ஐயா தா... தா... எண்டுதான் கேட்டுக் கொண்டிருக்கிறியள்? அங்கிருந்த ஒருவர் பகிடியாகச் சொன்னார். "இது தானே சந்தர்ப்பம் பிறகு நான் கேட்கவும் மாட்டேன். கேட்டாலும் தரமாட்டியள்" என்றார். ஐயர் தன் காரியத்தில் கவனமாக இருந்தார். ஐயா வாழும் காலத்தில் பயன்படுத்தின எல்லாம் தரவேணும் என்றார். அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய்த்தூள், காய்கறிகள், எண்ணெய்... உணவு வகைகள். இன்னொரு வகையாக பாய், தலையணை, குடை, செருப்பு... பட்டியல் நீண்டுகொண்டு சென்றது.

ஐயர் பட்டியலை யார் கேட்டாலும் எரிச்சல் வரும் தம்பி பொறுமை இழந்து போனான். "ஐயா பனை ஏறும்போது கட்டிக்கொள்ளும் மாதோல் (மார்தோல்) காதோல்

(கால்தோல்) இருக்கு" என்றான். ஐயருக்கு முகம் கறுத்துப் போனது. வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. "சும்மா பகிடிவிட வேண்டாம்" சொல்லிக் கொண்டு காரியத்தில் கவனமாக இருந்தார்.

சவண்டி கிரியைகள் எல்லாம் முடிந்து விட்டன.

ஐயர் முற்றத்துக்கு வருகின்றார். முற்றத்தில் கும்பம் வைக்கப்பட்டிருக்கிறது. ஐயர் கும்பத்துக்கு அருகே நிற்கின்றார். அவரைத் தொடர்ந்து நானும் தம்பியும் முற்றத்துக்கு வருகின்றோம். கிரியைகள் முடியும்வரை பூணூல் போட்டு பிராமணர் ஆக்கப்பட்டிருந்தோம். தொடர்ந்து விட்டு வைப்பாரா ஐயர்? இனி சூத்திரர், அதுவும் ஒடுக்கப்பட்ட சூத்திரர்.

ஐயர் சொன்னார். நானும் தம்பியும் பூணூல் கழற்றினோம். தற்பை கழற்றினோம். அவர் கையில் கொடுத்தோம். கால்களில் சாஸ்டாங்கமாக விழுந்து கும்பிட்டு எழுந்து வெற்றிலையில் வைத்து தட்சணை தருமாறு கேட்கின்றார். நாங்கள் மௌனமாக நிற்கின்றோம். வரிசையாக செய்ய வைப்பது ஐயர் விருப்பம். தம்பியைப் பார்க்கிறார். கால்களில் விழுந்து கும்பிடுமாறு அவன் வாய்திறக்கவில்லை. கையினால் காட்டுகின்றான், என்னிடம் கேட்கும் வண்ணம். அவனுக்குத் தெரியும் என்ன நடக்கப் போகிறது என்று. ஐயர் என்னைப் பார்த்து கூறுகின்றார். "விழுந்து கும்பிடுங்கோ" நான் மெல்லச் சிரிக்கின்றேன். இதெல்லாம் சிரிக்கிற காரியமல்ல. வணங்குங்கோ! என்கின்றார். நான் இன்னொருவர் கால்களில் விழுந்து வணங்கமாட்டேன் என்கிறேன். "குருவை இன்னொருவராகக் கருதக்கூடாது. உங்களுடைய தகப்பனாரா நினைத்து வணங்க வேண்டும் ஐயர் சொல்கிறார்." அதெப்பிடி...? மகா அபத்தம். என்னுடைய தகப்பனாராக இன்னொருவரை நினைப்பது? அது மிக கேவலம்.

அண்ணா அங்கு வருகின்றார். "உங்களுடைய தம்பிமார் படித்தவர்கள். ஆசிரியர்கள். இவர்களுக்கு இது விளங்கவில்லை. காலில் விழுந்து கும்பிடமாட்டோம் என்கிறார்கள்" ஐயர் முறைப்பாடு செய்கிறார்.

“அவன்களை விடுங்கோ. அவன்கள் உப்பிடித்தான். அவன்களுக்காகவும் சேர்த்து நான் கும்பிடுகின்றேன்” அண்ணா பூணூலைக் கழற்ற ஆரம்பிக்கின்றார்.


நாங்கள் இருவரும் மௌனமாக நிற்கின்றோம்.

நாங்கள் வெற்றிலையில் வைத்து தட்சணை கொடுக்கத் தவறவில்லை.

ஐயர் அதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டார்.

●

ஈழத்து நூல் வரிசை - 4



இது எனது வரலாற்றின் ஒரு பகுதி. இதன் ஆதாரம் நான்தான். என்னைத் தவிர இந்த வரலாற்றின் ஆதாரமாக இன்னொன்றைத் தேட இயலாது. இதனைச் சுயவரலாறாக இல்லாது ஒரு நாவலாக, கலைத்துவச் செறிவுடன் எழுதி இருக்கலாம். நாவலாகப் படைக்கப்பெறும் பொழுது வரலாற்றின் உண்மைத்தன்மை சிதைந்துபோய்விடும். சமூகக் கட்டமைப்பில் கீழ்மட்டக் குடும்பத்தில் பிறந்த நான், எனது சிறுபராயத்தில் எவ்வாறு வளர்ந்தேன்; வளர்க்கப்பட்டேன் என்பதனை இந்த வரலாற்றில் எழுதி இருக்கின்றேன்.

- தெணியான்

எழுத்து

Rs.80/-

ISBN 819042546-3
9 798190 425468